Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 20

# ஈழநாடு

வார மலர்

மலர் 11 சௌமிய மார்கழி 23 ஷவ்வால் 28 (7-1-70) புதன்கிழமை இதழ் 328

இனும்
50 மில்க் வைற் நீல சோப் மேலுறைகளைக் கொடுத்து
போயா கலண்டர்,
பொக்கெட் கலண்டர்,
டெஸ்க் கலண்டர்
பெற்றுக்கொள்ளுங்கள்,
31-1-70 வரைக்கும்.

மில்க் வைற் சோப்
தொழிற்சாலை,
யாழ்ப்பாணம்.

# ஆட்சிமன்றத்தின் முன் 'சாகும்வரை' உண்ணாவிரதம்?

## வேலையற்ற வாலிபர் சம்மேளனம் முடிவு

யாழ்ப்பாணம், திங்

தென் இலங்கையிலுள்ள வேலையற்ற வாலிபர்களுடன் இனமத பேதமின்றி தேசிய ரீதியாக ஆட்சி மன்றத்தின்முன்னால் 'சாகும் வரையான' உண்ணாவிரதமொன்றை மேற்கொள்ள வேண்டுமென்ற தீர்மானம் யாழ் மாவட்ட வேலையற்ற வாலிபர் சம்மேளனக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

நல்லூரில் சம்மேளனத்தின் கூட்டம் நடைபெற்றது, 6சங்கங்கள் இணைந்து உருவாகிய இந்தச்சம்மேளனம் எடுத்துக்கொண்ட மற்றைய தீர்மானங்கள் வருமாறு:-

▪ கிளைகள் ஸ்தாபிப்பது ▪ ஊர்வலம் நடாத்தி, பிரதம மந்திரிக்கு அரசாங்க அதிபரினூடாகமகஜர்சமர்ப்பிப்பது ▪ பொதுத்தேர்தலில் சம்மேளனத்தின் சார்பில் போட்டியிட்டு, பொது மக்களுக்கு வேலையற்றவாலிபர்களின் நிலையை எடுத்துக் கூறுவது.

சிங்கப்பூர்

## முன்னாள் உபசபாநாயகர் இலங்கை வந்துள்ளார்

சிங்கப்பூரின் முன்னாள் உப சபாநாயகர் திரு. ஜி. கந்தசாமி இலங்கை வந்துள்ளார். அகில உலக அஞ்சல் தந்தி தொலைபேசிச்சம்மேளனத்தின் ஆசிய பிராந்தியப் பிரதிநிதியாகஇப்போது பதவி வகித்துவரும் திரு. கந்தசாமி இலங்கை அஞ்சல் தொலை தொடர்புச் சேவையாளர் சங்கத்தின் விருந்தினராக இங்கு தங்கியுள்ளார். அஞ்சல் தொலை தொடர்புச் சேவையாளர் சங்கத்துடனும் அகில உலக அஞ்சல் தந்தி தொலைபேசிச் சம்மேளனத்துடனும் கூட்டுத் தொழிற் சங்க ஆய்வு வகுப்பொன்றினை நடத்துவதற்கு ஆயத்தம் செய்யுமுகமாக அவர் இங்கு வந்துள்ளார்

திரு. கந்தசாமி சிங்கப்பூரைத் தாயகமாகக் கொண்டவர்.

## 1972-ல் வியாழனுக்கு ரொக்கட் செலுத்தப்படும்

மவுண்ட்டேன்வியூ (கலிபோர்னியா) ஜன. 5

சூரியக்குடும்பத்தின் மிகப் பெரிய கிரகமான வியாழன் பற்றிய தகவல்களை அறிவதே விஞ்ஞானிகளின் அடுத்த முயற்சியாகவிருக்கும் என்று தெரிகின்றது.

1972-ம் ஆண்டில் வியாழனை நோக்கி ஆளில்லா செயற்கை கிரகம் ஒன்றை அனுப்புவதற்கு அமெரிக்க விண் பயண - விண்வெளி ஆராய்ச்சி நிர்வாகக்கழகம் (நாஸா) திட்டமிட்டு வருகின்றது.

வியாழனுக்கு 1972-ம் ஆண்டில் கென்னடிமுனையிலிருந்து பயனியர்-எஃப் என்ற இந்தக் கிரகம்செலுத்தப்படும். இந்தக்கிரகம் வியாழனை அடைவதற்கு இரண்டு ஆண்டுகள் பிடிக்கும். இது அனுப்பப்பட்டு 13 ஆண்டுகளின்பின் அடுத்ததாக பயனியர்-ஜி அனுப்பப்படும்.

பயனியர் எஃப், ஜி ஆகிய இரண்டு கிரகங்களையும் உருவாக்கிவரும் 100பொறியியல் நிபுணர்கள் கூட்டமொன்றில் இந்தத்திட்டத்தின் விபரம் பற்றி அண்மையில் விளக்கப்பட்டது. இந்தப் பயனியர் திட்டத்துக்கு 8 கோடிடாலர் செலவாகும் என்று கணிக்கப்பட்டிருக்கின்றது பயனியர்-எஃப் வியாழக்கிரகத்தின் மிக அண்மையிலுள்ள புகைப்படங்களைப் பூமிக்கு அனுப்பும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தக் கிரகம் பூமியைவிட 300 மடங்கு பெரிதாக 40 கோடி மைல் தொலைவில் இருக்கின்றது.

## சிவஞானசித்தியார் வகுப்பு

யாழ்ப்பாணம், புதன்

காஞ்சிமெய்கண்ட சந்தானத்துக் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச சுவாமிகள் அவர்கள் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் தினசரி மாலை 6 மணிமுதல் இரவு 8 மணி வரை சிவஞானசித்தியார் வகுப்பு நடாத்தியருள்கின்றார்கள். சென்ற 5-ந் திகதி 8-வது சூத்திரப்பொருள் விளக்கப்பட்டது.

## கம்யூனிஸ்ட் நாடுகளை "சீனு" தாக்குமாம்

மாஸ்கோ, ஜன. 6

சோவியத் யூனியனுக்கும், மற்றும் கம்யூனிஸ்ட்நாடுகளுக்குமெதிரான வஞ்சகமான தாக்குதல்களை நடாத்துவதற்கு சீனு சதிசெய்து வருவதாகவும் இத்தாக்குதல்களை சீனு விரைவில் ஆரம்பிக்கவுள்ளதாகவும் சோவியத் பத்திரிகையான பிராவ்டா எச்சரித்துள்ளது.

எகிப்திய

## கொமாண்டோபடைகள் திடீர்தாக்குதல்

கெய்ரோ, ஜன. 6

எகிப்திய கொமாண்டோப் படைகள், சூயஸ் கால்வாய்க்கூடாக இன்று நடாத்திய திடீர்த்தாக்குதலில் அதிகமான இஸ்ரேலிய வீரர்கள் கொல்லப்பட்டதாகவும் எகிப்தியதரப்பில் 9 பேர் காயமடைந்ததாகவும் கெய்ரோவிலிருந்து கிடைத்த செய்தியொன்று கூறுகிறது.

## அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், புதன்

வட்டுக்கோட்டையில் திருஞானசம்பந்த வித்தியாசாலை மண்டபத்தில் இன்று காலை 10 மணிக்கு வட்டுக்கோட்டை பொதுநலசேவா சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும். விவசாயம், கைத்தொழில், கல்வி கலாச்சாரம் போன்ற விஷ[illegible] இது உழைக்கும்.

வடபகுதியில்

## குற்றங்கள் குறையவில்லை; சென்ற ஆண்டு40 கொலைகள்

யாழ்ப்பாணம், புதன்

வடபகுதியில் சென்ற வருடத்தில் 40 கொலைகள்இடம் பெற்றுள்ளன. காணித்தகராறு, மதுபோதை' பழைய கோபம் இவை காரணமாகவே அதிகமான கொலைகள் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்ற வருடத்தில் வட பகுதியிலே 57 திருட்டுச்சம்பவங்சள் நடைபெற்றுள்ளன. இவற்றில் நகைகளே அதிகமாகத் திருடப்பட்டன.

1968-ம் வருடத்தைப் போலவே குற்றங்களின் அளவு இருந்ததாகவும், வட பகுதி பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களின் ஒத்துழைப்புப்பற்றி குறிப்பிட்டுள்ள பொலிஸ் சுப்ரின்டன் தொடர்ந்து மக்களின் ஒத்துழைப்பு பொலிசாருக்குக் கிடைத்து வருவதாகவும் இன்னும் தாராளமாக ஒத்துழைப்புக் கிடைத்தால் குற்றங்களை கட்டுப்படுத்துவதில் இது பெரிதும் உதவியாக இருக்குமென்றும் அவ்விதம் கிடைக்குமெனத்தாம் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

### 250 சைக்கிள்கள் திருட்டு

சென்ற வருடத்தில் திருட்டுப்போன சைக்கிள்களின் எண்ணிக்கை 250 என்றும் யாழ்ப்பாண நகரில் மட்டும் 85 சைக்கிள்கள் திருட்டுப் போயின என்றும் வருடா வருடம் நடந்துவரும் இந்த விதத் திருட்டுக் குறையவில்லை என்றும் பொலிஸ் சுப்ரின்டன் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## சோவியத்திரைப்பட கலாச்சார விழா

சோவியத் தூதராலயத்தினதும் யாழ்ப்பாணம் மாநகரசபையினதும் ஆதரவின் கீழ் இன்று (7-1-70) காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் பொதுநூல்நிலைய மண்டபத்தில்

### சோவியத் கலாச்சாரக் கண்காட்சியை

யாழ்ப்பாண மேயர்
திரு. எஸ். நாகராஜா அவர்கள்
ஆரம்பித்து வைப்பார்.
சோவியத் தூதராலயத்தின் முதலாவது காரியதரிசி
கலாநிதி யு. எம். வினிக்
தூதுவராலயத்தின் சார்பில் கலந்து கொள்வார்.
மாலை 6-30 மணிக்கு யாழ் நகரமண்டபத்தில்

### திரைப்படவிழா

✶ 10 ஆண்டுகளின் விண்வெளிச் சாதனை
✶ நாட்டிய நாடகம்

சோவியத் பலே நடனராணி மாயா பிளீஷியற்ஸ் காயா
விழா தொடர்ந்து 10-ந் திகதிவரை நடைபெறும்.
1474

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார சாரம் — அரசியல் நிருபர்

# தேர்தலுக்கு முன்னே வந்த வெள்ளம்

அடுத்த பொதுத்தேர்தல் எப்போது என்று கேட்டுக்கொண்டிருந்தவர்களுக்கு, ''உங்களுக்கு வாய்ப்பாகத் தானே நான் வந்திருக்கிறேன்'' என்று சொல்வது போல் வந்து பலருக்குத் தொல்லைகொடுத்துச்சென்று கொண்டிருக்கிறது மழையும் பெருவெள்ளமும்.

மழையினாலும் வெள்ளத்தினாலும் துன்பப்படும் மக்களுக்கு எந்தெந்த வகையில் உதவிசெய்ய முடியுமோ அந்தந்த வகையிலெல்லாம் போட்டிபோட்டு உதவிசெய்வதற்கு தேர்தலில் கண் வைத்திருப்பவர்களைவிட வேறுயார் அவ்வளவு அக்கறையுடன் முன்வருவார்கள்.

தேர்தல் சமயமானதால் நிவாரண உதவி முன்னர் கிடைத்ததைவிட இம்முறை அதிகம் கிடைக்குமென்று எதிர்பார்க்கலாம்.

பெருவெள்ளத்தினால் மட்டக்களப்புப் பகுதியும் தென் மாகாணத்தில் அம்பாந்தோட்டை, மாத்தறைப்பகுதிகளும்தான் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனவாகும். வெள்ளத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குப் பிரதமர் நேரில் சென்று நிலைமையைக் கவனித்து உடனுக்குடன் நிவாரண உதவி வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்திருக்கிறார். இது பாராட்ட வேண்டிய விஷயந்தான்.

எதிர்க்கட்சியினரும்சும்மா இருக்கவில்லை. தங்கள் தங்கள் பகுதிகளுக்கும் சென்று நிவாரண வேலைகளைக் கவனிக்காமலில்லை. வெள்ளம் வந்ததும் தங்கள் பிரதிநிதிகள் வருகிறார்களா இல்லையா என்பதில் மக்களுக்கும் அக்கறை; அவர்கள் வராவிட்டால் அதைப்பயன்படுத்தலாமென்பதில் அந்தப் பிரதிநிதிகளுடன் போட்டிபோட உத்தேசித்திருக்கும் அபேட்சகர்களுக்கும் அக்கறை.

## வகுப்புவாதத்துக்கு கூட்டணி முழுக்கு

1957-ம் ஆண்டில் பெரு வெள்ளம் ஏற்பட்டபோது அப்போது பிரதமராகவிருந்த திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று பார்வையிட்டார். சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டுவந்ததன் மூலம் தமிழ்மக்களின் அதிருப்தியைச் சம்பாதித்திருந்த திரு. பண்டாரநாயகா பிரதமராகப் பதவியேற்றபின் அப்பொழுதுதான் முதல் தடவையாக தமிழ்ப் பகுதிகளுக்கு விஜயஞ் செய்தார். அந்நேரம் அமைச்சர் எவர்வந்தாலும் தமிழ்ப் பகுதிகளில் கறுப்புக்கொடி காட்டுவதும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுவதும் வழக்கம். ஆனால் வெள்ளத்தால்பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதலளிக்க வந்தவருக்குக் கறுப்புக்கொடி காட்டுவது பண்பா?

திரு பண்டாரநாயகா வவனியாவில் வந்திறங்கியதும், ஆட்சிமன்றத்தில் அவரைக் கடுமையாக எதிர்த்துநின்ற வவனியாத்தொகுதியின் அப்போதைய பிரதிநிதி திரு. சுந்தரலிங்கம் எதிர்கொண்டு கட்டியணைத்து வரவேற்றார்.

அந்த வெள்ளத்தின்போது இலங்கையில் வெள்ளத்தினால் சூழ்ந்து அவதிப்பட்டவர்களை மீட்பதற்கும் அவாகளுக்கு உணவுப் பொட்டலங்களை விநியோகிக்கவும் இந்திய விமானப் படை விமானங்கள் சில உடனடியாக வந்து உதவியளித்தன. இலங்கையின் வேண்டுகோளை ஏற்று வெளிநாடுகள் பல பொருள் உதவியும், பண உதவியும் அளித்தன.

அப்போதே ஒரு குறை. நிவாரண உதவி சரியாக வழங்கப்படவில்லையென்றும் அதில் மோசடி நடைபெறுவதாகவும் புகார் செய்யப்பட்டது. அந்தப் புகாரில் உண்மையில்லாமலுமிருக்கவில்லை அப்படிப் புகார் செய்தவர்களில் பெரும்பாலானோர் அப்போதைய எதிர்க் கட்சியினரான ஐக்கிய தேசியக் கட்சியினர்.

இப்போதும் அதுபோன்ற புகார் கிளம்பலாம். இன்றைய எதிர்க்கட்சியினரே பெரும்பாலும் இப்படிப்பட்ட புகாரைக் கிளப்பலாம். எல்லாமே அரசியலாகிவிட்ட நமது நாட்டில் நிவாரண உதவியும் வெள்ளமும்கூட அரசியலாகாதா?

1957-ம் ஆண்டு வெள்ள நிவாரண உதவியாக வெளிநாடுகள் அளித்த உதவியை வெள்ள நிவாரணத்துக்குப் பயன்படுத்தவில்லையென்றும் அப்போதிருந்த நிதிப் பற்றாக் குறையைச் சரிக்கட்டுவதற்கு அரசாங்கம் பயன்படுத்தியதென்றும் புகார் கூறப்பட்டது. இம்முறை என்னவோ?

வெள்ளப் பெருக்கினால் உணவு உற்பத்தி அதிகம் பாதிக்கப்படமாட்டாதென்றும் பிரதமர் கூறுகிறார். உணவு உற்பத்தி அதிகரிப்பு என்பதே கண்துடைப்பு என்று கூறுகிறவர்கள் இதை நம்புவார்களா?

### வகுப்புவாதம் கைவிடப்படும்

எதிர்க்கட்சிக் கூட்டணியினர் வகுப்புவாதத்தைக் கைவிடுவதென்றும் தமிழ் பேசும் மக்களின் ஆதரவைப் பெறக்கூடிய முறையில் பல்கலைக்கழகம், தமிழ் மொழிச் சட்ட அமுல் ஆகியவைகளில் வாக்குறுதியளிக்கும் தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தயாரிப்பதென்றும் தீர்மானித்திருப்பதாக கொழும்பிலிருந்து வெளிவரும் சுயாதீன பத்திரிகா சமாஜத்தைச் சேர்ந்த 'சன்' என்ற ஆங்கில தினசரி செய்தி வெளியிட்டிருக்கிறது.

இது உண்மையானால் தமிழ் மக்கள் மட்டுமல்ல இந்த நாட்டின் அமைதியிலும் முன்னேற்றத்திலும் ஆர்வம் கொண்டுள்ள அனைவருமே மகிழ்ச்சியடைவர்.

ஆனால் கடந்த கால சரித்திரங்களைப் பார்க்கும்போது வகுப்புவாதத்துக்கு ஒரு கட்சியினரோ சில கட்சிகள் சேர்ந்த கூட்டணியோ முற்றுப்புள்ளி வைக்க முன்வந்தாலும் அது வெற்றியளிக்குமா என்பது சந்தேகமே.

1956-ம் ஆண்டில் தேர்தலை எதிர்பார்த்து திரு. எஸ். டபிள்யு ஆர். டி. பண்டாரநாயகாவின் தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 24 மணிநேரத்தில் சிங்களத்தை உத்தியோக மொழியாக்குவதாக வாக்குறுதி அளித்து பிரசாரம் செய்யத் தொடங்கியதும், அதுவரை சிங்களத்துக்கும் தமிழுக்கும் இருந்துவந்த அந்தஸ்தைக் கைவிட்டு சிங்களத்தை மாத்திரமே உத்தியோக மொழியாக்குவதாக ஐக்கிய தேசியக்கட்சி (ஐக்கியத்தையும் தேசியத்தையும்கூடக் கைவிட்டு) களனி மகாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றியதுடன் மிக மோசமாக வகுப்பு வாதப்பிரசாரத்திலிறங்கியது. பின்னர் பிரதேச சபைகள் அமைக்கும் அம்சங்கொண்ட பண்டா-செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து இலங்கைப்படத்தையும்கொண்டு ஐக்கிய தேசிக்கட்சியினர் பிரசாரம் செய்தது மட்டுமல்லாமல் கண்டி யாத்திரை சென்ற

[16ம் பக்கம் பார்க்க]

## உலக மேடை

# இஸ்ரேல் மிஞ்சுகிறது

மேற்கு ஆசியாவில் இஸ்ரேலியருக்கும் அரபு நாடுகளுக்குமிடையில் நடைபெற்றுவரும் மோதல்களைக் கட்டுப்படுத்தாவிட்டால் மூன்றாவது உலகமகாயுத்தம் ஒன்று ஏற்படுவது தவிர்க்க முடியாத விடும் என்று அஞ்சுவதில் நியாயமுண்டு.

புராணகாலங்களில் ஒரு நாட்டுக்கும் இன்னொரு நாட்டுக்கும் இடையில் சண்டை ஏற்படுவதானால் யுத்தகளத்தில் சந்திப்போம் என்று இருநாட்டு அரசர்களும் சவால் விடுவர். அந்தச் சவாலை இரு தரப்பினரும் ஏற்றுக்கொண்டதும் பொதுமக்கள் வாழும் பகுதிகளல்லா இடத்தில் அமைந்துள்ள பொது மைதானத்தில் இரு நாட்டின் படைகளும் மோதிக்கொள்ளும். அதில் வெற்றி தோல்வி நிர்ணயிக்கப்படும்.

இது அந்தக்காலம்.

இதன்பின் இந்தக் காலத்திலும் நாடுகளுக்கிடையில் தகராறு — சச்சரவு ஏற்பட்டால் அதை யுத்தத்தின்மூலம்தான் தீர்க்க வேண்டுமென இருதரப்பினரும் தீர்மானித்தால் யுத்தப் பிரகடனம் செய்து தாக்குதல் நடத்த ஆரம்பிப்பது வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. இப்போது இந்த நிலைமையும் மாறி வந்துகொண்டிருக்கிறது.

திடீர் திடீரென்று எந்தவித போர்முரசும் முழங்காமல் படைநிலைகள் மீது மட்டும் அல்லாமல், பொதுமக்கள் வாழும் கிராமங்களிலும் குண்டுவீசித் தாக்குதல் நடத்தி எதிரியை முறியடிக்கும் புதிய தந்திரம் உருவாகிக்கொண்டிருக்கிறது. இது இப்போது மேற்கு ஆசியாவில் இஸ்ரேலியருக்கும் அரபு நாடுகளுக்குமிடையில்தான் அதிகமாக இடம் பெற்றுவருகிறது.

பாலஸ்தீன விடுதலை இயக்கக் கொமாண்டோக்கள் திடீரென்று அந்தப் பகுதியிலுள்ள எந்த நாடுகளினுள்ளும் நுழைந்து இஸ்ரேலிய விமானங்களையும் நிலைகளையும் தாக்கி அழித்து விடுகின்றனர். இதேபோல இஸ்ரேலிய போர்விமானங்களும் திடீரென்று அரபு நாடுகளின் படைநிலைகள் என்று சொல்லி கிராமங்கள் மீதும் தாக்குதல் நடத்திச் சேதம் விளைவித்து விடுகின்றன.

இவைதவிர விமானங்களை நடுவானத்தில் பலவந்தமாக மறித்துத் திசை திருப்பித் தமது நாட்டுக்குக் கொண்டுசெல்லும் பழக்கத்தில் முன்னணியில் நிற்கும் கியூபாவையும் மிஞ்சிவிடும் அளவுக்கு இஸ்ரேலியர் முன்னேறியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இஸ்ரேலியருக்கும் அரபியருக்கும் ஏற்பட்ட யுத்தத்தின்போது இஸ்ரேலியருக்கு ஆயுதங்கள், போர்ச்சாதனங்கள் வழங்குவதை நிறுத்திக்கொண்ட பிரான்சிடமிருந்து அதற்குத் தெரியாமலே ஐந்து பீரங்கிப் படகுகளை இஸ்ரேலியர் கடத்திச் சென்றிருக்கின்றனர். ஐக்கிய அரபுக் குடியரசில் ரஷ்ய 'ரடார்' பொறிகள் பொருத்தப்பட்ட [illegible] ஒன்றை இஸ்ரேலியர் [illegible] பற்றியதுடன் பத்துலட்சம் டாலர் பெறுமதியான ஏழு தொன் பாரமுள்ள கருவிகளையும் கழற்றிச் சென்றுள்ளனராம்.

இஸ்ரேலியரின் இந்தச் செயல்களைப் பார்த்தால் ஐக்கிய அரபுக்குடியரசின் தலைநகரான கெய்ரோவில்கூட அவர்கள்காலடிவைத்துவிடுவார்களென்றே தோன்றுகிறது.

இஸ்ரேலை அங்கீகரிக்காமல், இஸ்ரேலை ஒழித்துக் கட்டுவோம் என்று அரபுத் தலைவர்கள் அறைகூவல்விடுக்கும் அதேசமயம்அரபுநாடுகளுக்குள்ளேயே ஒற்றுமையில்லாதிருப்பது இஸ்ரேலியரின் முன்னேற்றத்துக்கு முக்கிய காரணம். என்றாலும்-

அமெரிக்காவின் உதவிதான் இஸ்ரேலியரின் துணிச்சலுக்கு மூல காரணம் என்பதை எவரும் ஒப்புக்கொள்வர்.

இதே சமயம் பாலஸ்தீன மக்களின் பிரச்னைகளுக்கு பேச்சுவார்த்தைமூலம்தீர்வு காண்பதற்கு அரபுநாடுகள் முன்வராதிருந்ததற்கு அரபு நாடுகளுக்கு சோவியத்யூனியன் உதவியளித்ததும் ஒரு காரணம் என்பதையும் ஒப்புக்கொள்ளவேண்டும்.

மொத்தத்தில் மேற்கு ஆசியப்பிரச்னை தீராமல் மோசமான நிலையை அடைந்துகொண்டுவருவதற்கு வல்லரசுகளின் தலையீடே காரணமென்பது தெளிவு.

இஸ்ரேலியரின் போக்கு மிக மோசமாக இருக்கிறது. அவர்கள் எதையும் துச்சம் செய்வதாகக்காணோம். அவர்கள்மீது அனுதாபம் கொண்டவர்களும்கூட இவர்களை வெறுக்கக்கூடிய அளவுக்கு நடந்துகொள்கிறார்கள்.

இஸ்ரேலை உருவாக்கி வளர்த்துவிட்ட அமெரிக்கா கூறும் யோசனைகளையே இஸ்ரேலியர் நிராகரிக்கின்றனர். சீனாவே ரஷ்யாவை எதிர்க்கும்போது இது புதுமையில்லையென்று சிலர் கூறினாலும் சீனாவின் நிலையும் இஸ்ரேலின் நிலையும் வேறு.

எது எப்படியானாலும் இஸ்ரேலியர்களை அமெரிக்கா கட்டுப்படுத்தாவிட்டால்மூன்றாவது உலகயுத்தம் ஒன்றுஏற்படுவதற்கு அமெரிக்காதான் பொறுப்பேற்க வேண்டி நேரிடும். இதில் ஐ. நா.வும் பழி கேட்க வேண்டியேற்படலாம்.

எஸ். எம். ஜி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எம்ஞானகுரு ஸ்ரீமத்முத்துக்குமாரத்தம்பிரான் சுவாமிகள் (இலக்கணச் சுவாமிகள்) அவர்கள்

[காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீன குருமகா சந்நிதானம் சிலத்திரு

**ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்**

அருளுரை]

யாழ்ப்பாணத்திலிருந்து தமிழகத்திற்கு வந்து சிறப்புற்று வாழ்ந்தவர்கள் எல்லாரையும் எண்ணிச்சொல்லல் இக்காலத்தில் எவர்க்கும் இயலாததொன்று. மிக்க சிறப்புற்று விளங்கிய சித்தாந்த சைவசிகாமணிகள் மூவரை எல்லோரும் அறிவோம். சீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானையும் எம் ஞானகுருவாகிய இலக்கண சுவாமிகளையும் நம்தாய்நாட்டில்எவரும் எப்போதும் மறவார். சிவஞானசித்தியார்க்கு உரை எழுதியருளிய யாழ்ப்பாணத்து ஞானப்பிரகாசரை அவருரையைக் கற்றுணர்ந்த சான்றோர் மட்டும் போற்றுவர். ஏனையோர்க்கு அவரது பெருமை தெரிவதரிதே

சபாபதிநாவலர், கதிரைவேற்பிள்ளை முதலியோர் தமிழகத்தில்புகழோடு விளங்கியோரே. எல்லாருள்ளும் நாவலர் பெருமானையடுத்து, ஒழுக்கம், கல்வி, கேள்வி, ஆராய்ச்சியுணர்வு, அனுபவ ஞானம் பிராசாதயோகப் பயிற்சி. சிவபூஜாக்கிரியை, ஆகம விதிக்குச் சிறிதும் விரோதமில்லாத சரியாசாரம் எல்லாவற்றுள்ளும் ஒழுங்குற்று வாழ்ந்தவர்கள்என எல்லாராலும் புகழப்பெற்று விளங்கியவர்கள் எம் ஞானகுருமூர்த்திகள். இவர்கள் தமிழகத்திற்குவந்து சைவசித்தாந்தங் கற்றுச் செந்நெறியொழுகி மெய்யுணர்வுற்றுச் சிவாநந்தாநுபூதி அடைய விரும்பியே துறவுபூண்டவர்கள். அக்காலத்திலே சூரியனார்கோயிலாதீனத்தில் விளங்கிய குருமகாசந்நிதானமே சிவஞானச் செல்வர்களாக வீற்றிருந்தார்கள். அதனால் அப்பாநு கோயிலாதீனத்தில் அடிமையாகும் நற்பேறு பெற்றார்கள். அது குறித்துப் பல செய்திகளை அவர்களே மொழிந்தருளக் கேட்டிருக்கின்றோம். அவற்றை இப்போது வெளியிடுவதிற் பயனில்லை. அவற்றால் அப்போது தம்குறிக்கோள் நிறைவுறப்பெற்ற அரும்பெரும்பாடுகளை மட்டும் அறியலாம் எம்குருநாதர் சைவசித்தாந்தஞான சாத்திரங்களைமட்டும் கற்றும், கேட்டும் நினைந்தும் தெளிந்தும் உள்ளவர்கள் என்று பலரும் அறிந்துளர். தமிழிலும் வடமொழியிலும் மிக்க புலமையுடையவர்கள் என்பதும் சங்கநூல்களையும் தணிகைப்புராணம் முதலியனவாய (உணர்தற்கும்உரைத்தற்கும் அரிய சீரிய) நூல்களையும் கற்பித்தவர்கள் என்பதும் தம்குரு முதல்வர் அருளிய 'கிரியா தீபிகை', 'சிவாக்கிரபாடியம்' சிவஞானமாமுனிவரது 'திராவிட மகாபாடியம்' முதலிய உயரிய ஞானப்பனுவல்களை வெளியிட்டுதவியவர்கள் என்பதும் எல்லோர்க்குந் தெரிந்தன. சிவஞானபாடியத்தை வெளியிட இவர்கள் கொண்ட பெருமுயற்சியை எழுதப் புகின் ஏடு பற்றாதனவாகும். 'கிரியா தீபிகை'யின் முன்னுரை ஒன்றேஎம்அருட்குருவன் தெருட்புகழை நன்கு தெளிவுறுத்தும்.

திருக்கழுக்குன்றத்தில்திருவாவடுதுறை மடத்தில் வைத்து மேற்படி சிவஞானபாடியத்தை எமக்குப் போதித்தருளினார்கள். அப்போது, செங்கழுநீர்ப்பற்று (செங்கற்பட்டு) மாவட்டத்துத் தலைமையதிகாரியாயிருந்த திரு. சங்கரவடிவேற்பிள்ளை உதவிபெற்று அவரும் அவர் முன்னோரும்மாதுலரும் ஆகிய சிவஞானம் பிள்ளை(திருநெல்வேலி) அவர்களது குடும்பமும் ஸ்வாமிகள் திருவடிக்கு அடிமைத்திறம் பூண்டவர்கள். ஸ்வாமிகளிடம் படித்த மாணாக்கர்களுள் ஒருவர் ''விளங்கவில்லை. விளங்கவுணரும்ஆற்றலும் புண்ணியமும் இல்லை 12 நாள் கழித்து வருவேன்'' எனத் தம் ஊர் சென்றார். ஒருவர் 15 நாள் இருந்துகற்று மீண்டும் தம் தகுதியை வளர்த்துக் கொண்டுவருவதாக விடைபெற்றார். சிவஞானபோதச் சிற்றுரைக்கே இந்நிலை நேர்ந்தது. யாம்மட்டும் மாபாடியத்தை முழுவதும் பாடங்கேட்டோம். அது கேட்கத்தொடங்கிய நாளிலும் கேட்டுமுடிந்த நாளிலும் திருக்கழுக்குன்றத்தில் தென்முகக்கடவுளுக்கு அபிடேகாராதனை முதலியன நடாத்தி வழிபட்ட காட்சி அன்று அப்போது அங்கிருந்த சிலர் சிவாசாரியர்களையும் மற்றவர்களையும் பரவசப்படுத்திப் பண்டைய சம்பிரதாயத்தை அறிவித்தது.

'ஆசிரியனொடு மாணாக்கன் வந்தான்' என்று தமிழிலக்கணத்தில் ஓர் உதாரணம் உண்டு. அத்தொடர் நாள்தோறும் திருக்கழுக்குன்றத்தை வலம்வந்து (41 நாள்) பெற்ற சிவ புண்ணியத்தின் பயனாகத் தருமைக் குருநாதர் சீலஸ்ரீ சண்முக தேசிக பரமாசாரியஸ்வாமிகள் திருவாக்கில் (தருமையில்) அங்கு சென்றவேளையில் எங்களைக் குறித்து வெளிவந்தது ஞானவரண பாடிய ஆராய்ச்சிக்கும் முத்தி நிச்சய வெளியீட்டிற்கும் நம் முனிவர்பிரானை அம்மகா சந்நிதானம் அழைத்த காலம் அது. நாமும் அவ்வாதீனத்து வித்துவான் என்பது பலர்க்கும் தெரிந்ததே

எம்குருநாதர்க்குச்சிறிதும் பற்றில்லை என்பதற்கு எத்தனையோ சான்றுள்ளன. ஒன்று கூறி அதனையும் புலப்படுத்துகிறோம். 251-00 ரூபா குரு தக்ஷணையாக வைத்து வணங்கினோம். திருநீறளித்தருளினார்கள். அதனைத் தொடவேயில்லை. ஏன் என்று உருகி நின்று உள்ளக் குழைவும் நாத் தழுதழுப்பும் உடையோமாய் விண்ணப்பித்தோம். காஞ்சியில் அதற்கு விடை கிடைக்கப்பெறுவீர் என்று தெரிவித்தருளினார்கள். சில நாள் கழித்துக் காஞ்சியில் திருவேகம்பர் திருச்சந்நிதியில் நின்று வழிபட்ட காலத்தில் எம்மைக் கவனிக்கும்படி பணித்தருளி,

''கருவுற்ற நாள் முதலாக
உன் பாதமேகாண்
பதற்கு
உருகிற்றெ னுள்ளமும்;
நானு[illegible]
தெய்த்[illegible]
திருவொற்றியூராதிருவால
வாயா திருவாரூரா
ஒரு பற்றிலாமையுங்
கண்டிரங்காய் கச்சியே
கம்பனே''

என்று பாடிக் கண்ணீரும் கம்பலையுமாய் வழிபட்டார்கள். அப்போது நாம் அடைந்த நிலையை ஏகம்பநாதனே அறிவான்

ஆரணியில் எம் இருப்பிடத்தில் எழுந்தருளியிருந்த காலத்தில் ஒருநாள். [பூர்வாசிரமத்தில்] 'பெரியமகன் தனதறியாமையால் யாழ்ப்பாணத்தில் உள்ளவர்கள் வருவதும் வணங்கி வாழ்வதும் உண்டோ?' என்று கேட்டானாம். அப்போது எம்பெருமான் அளித்த விடையாகும்இது. வரலாம்; வணங்கலாம்; வாழலாம் நாம்அறியேம்என்றார்களாம் இதன் உண்மையைத் திருவாளர் கனகரத்தினம் அவர்கள் சிதம்பரத்தில் வந்து தரிசித்த காலம் எது என்று அறிவார் தெரிந்துகொள்ளக்கூடும். அனைவரும் அவர்களுடைய உறவினர் எவரையும் நினைத்தவர்கள் அல்லர்



புலவர் ச. தண்டபாணி தேசிகரும் பண்டித நாராயணசாமியும் சுவாமிகளோடு மிகப்பழகியவர்கள். அவ்வளவு பழக்கம் பிறர் (புலவர்)க்கு இல்லை. மாணாக்கருள் எமக்குண்டான நலம் எவர்க்கும் இல்லை என இறுமாந்து இருக்கும் இன்பமும் பிறர்க்கு வாய்த்திலது. அதனால்,

'முத்துக்குமார முனி
வா குருநாதா
சத்துச் சித்தாநந்தத்
தாணுவே-பத்து
டையேன்
என்னதென வொன்று
மிலாநெல்லாம் எனை
யாள் நின்
பொன்னடிக்கே
வைத்தேன் புரிந்து''

என அவர்கள் திருவடிகளை வழிபட்ட வேளை முதல் என்றும் சொல்லிப் போற்றிவருகின்றேம். தமிழகத்தில் பல நூறு சபைகளில் இவ்வணக்கம் சொல்லாமல் பேசத் தொடங்கோம் என்பது எல்லார்க்கும் தெரியும்.

குருவே துணை.

## யாழ்ப்பாண மாவட்டத்தின் சாதனை

# இளைஞர்குடியேற்றதிட்டங்களும் உப உணவுப் பயிர் செய்கையும்

உபஉணவுற்பத்தியில்நாட்டின் சுயதேவையைப்பூர்த்தி செய்வதில் வடபகுதி விவசாயிகளே இன்று முன்னணி வகிக்கின்றார்கள்.இதில்வாலிபர்களதும், படித்த மகளிர்களதும் சேவை மிக முக்கியமானதாகும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 1959ம் ஆண்டு இரண்டு குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அவை கனகபுரம், வட்டக்கச்சி படித்தவாலிபர்குடியேற்றத் திட்டங்களாகும். கடந்த பத்துவருட காலத்தில் இவை துரித வளர்ச்சியை அடைந்ததோடு நாட்டின் உணவுற்பத்தித் தேவையில் பெரும்பங்கை நிறைவேற்றியுள்ளன.

கனகபுரம், வட்டக்கச்சி குடியேற்றத் திட்டங்கள் இளைஞர்களுக்கான பரிசோதனைத்திட்டங்களாகும். இப்போது இரண்டு வருடங்களுக்கு முன்னர் தென்மராட்சிப்பகுதியில் மிருசுவிலில் படித்த பெண்களுக்கான பரிசோதனை விவசாயத்திட்டமும் ஆரம்பிக்கப்பட்டது. இங்கு 49 படித்தபெண்கள் குடியேற்றப் பட்டுள்ளனர். இலங்கையிலேயே முதலாவதாக ஆரம்பிக்கப்பட்ட படித்தபெண்களுக்கென குடியேற்ற விவசாயத்திட்டம் இதுதான்.

இதன்பின் 1966ல் யாழ்ப்பாண மாவட்டத்தில் பல இளைஞர் குடியேற்றத்திட்டங்கள்ஆரம்பிக்கப்பட்டன.

மாவட்டத்தில்மூன்றுஇளைஞர் திட்டங்கள் உள்ளன. அவை 1966 ஜூலை இல் தொடங்கிய விஸ்வமடுக்குளம், 1966 ஆகஸ்ட் இல் ஆரம்பிக்கப்பட்ட திருவையாறு1967ஜூலையில்தொடங்கிய மிருசுவில் திட்டங்களாகும். இளைஞர் குடியேற்றத் [illegible] கைத்திட்டங்களில், யாழ்ப்பாணத்தில். விஸ்வமடுக்குளம் 154இளைஞர்களையும், திருவையாறு 98 இளைஞர்களையும் கொண்டமைந்துள்ளது.

மிருசுவில் ஒரு பரிசோதனைத் திட்டமாக முதலில் பெண்களுக்காகத் தொடக்கப்பட்டது. நீர்ப்பாசன வசதிகொண்ட இரு ஏக்கர்களும் ஒரு ஏக்கர் மனைப் பகுதியும், விஸ்வமடுக்குளத்திலும், திருவையாற்றிலும் காணிக்கூறுகளாக அளிக்கப்பட்டிருக்கின்றன. இரு திட்டங்களிலும் வயற்காணியும் மனைப்பகுதியும் ஒரு கூறுக பிரிக்கப்பட்டிருப்பதனால், மனைப்பகுதிகள்ஒன்றாயில்லாமல் ஆங்காங்கு அமைந்துள்ளன. மிருசுவிலில் அளிக்கப்படும் காணிக்கூறு ஒரு ஏக்கராவதுடன் இங்கு பெண்களுக்கு முக்கிய நெசவு, கோழிப்பண்ணை போன்ற பல்வேறு முயற்சிகளுடன் 1/2ஏக்கரில் நீர்ப் பாய்ச்சப் பட்டஉணவுப்பயிர்செய்கை மேற்கொள்ளப்படும். விஸ்வமடுக்குளத்தின் பயிர்ச்செய்கைக் காணி விஸ்தீரணம் 320 ஏக்கர்களாவதுடன், மனைப்பகுதி 160 ஏக்கர்களை உடையதாகும். திருவையாற்றில் பயிர்செய் காணிப் பரப்பு 196 ஏக்கர்களாவதுடன் மனைப்பகுதி 98ஏக்கர்களாகும். மிருசுவிலின் முழு விஸ்தீரணமும் 50 ஏக்கர்களாவதுடன், 49 பெண்களையும் கொண்டுள்ளது.

மூன்றுதிட்டங்களில்உள்ள முழுக்காணிப்பரப்பும், பயிர்ச்செய்கைக்காகவும், மனைப் பகுதிக்காகவும் விநியோகிக்கப்பட்டுள்ளது,

விஸ்வமடுக்குளத்தில் நீர்ப்பாசன வசதிகள் 290 ஏக்கர்களுக்குஅளிக்கப்பட்டுள்ளன திருவையாற்றில் உள்ள298 ஏக்கர்கள் கொண்ட முழுப் பரப்பிற்கும் நீர்ப்பாசனக் கட்டுவேலைகள் இவ்வாண்டு ஆரம்பத்தில் முடிக்கப்படும்.

மிருசுவில் கிணறுகள் வெட்டப்பெற்று மண் வாய்க்கால்கள் மூலம் நீர்ப்பாசனவசதியளித்துப் பார்க்கப்பட்டது. ஆனால் செறிவு அதிகமான படியினால் விசேஷ குழாய்கள் மூலமான நீர்ப்பாசனமுறை அமைக்கப்படுகின்றது ஒவ்வொரு பயிர்ச்செய்கையுடனும் விஸ்வமடுக் குளத்தில், நீர்பாயாது நிற்கும் இடைஞ்சல் அனுபவிக்கப்பட்டு வருகிறது. திட்டத்தில் நீர் அட்டவணை தொடக்கத்திலிருந்து சில துண்டுகளில் மிகுதமாய்க் காணப்படுவதுடன் அவற்றை மிளகாய்ச் செய்கைக்குப் பயனற்றவையாக்கிவிடுகின்றன. இப்பயனற்ற இடங்களுக்குப் பதிலாக, பயனுள்ள காணித்துண்டுகள் தாக்கு நீர்ப்பாசன வசதியின்கீழ் ஒரு புதிய திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளன

மூன்று திட்டங்களிலும், பயிர்செய்யக்கூடிய முழுக்காணிப்பரப்பும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

துணைப் பயிர்செய் இளைஞர்கள் குடியேற்றத் திட்டங்களில் விஸ்வமடுக்குளம், கூடிய வரவைக் கொண்டதாகும். சராசரி செத்தல் மிளகாய் விளைவு 66 - 67 தொடக்கம் 68 - 69வரையுமுள்ள மூன்று ஆண்டுகளில் ஏக்கருக்கு 8 - 12 அந்தராகும். 1969 சிறுபோக விளைவில் 112 இளைஞர்கள் 171 ஏக்கர்களில் ரூபாய் 2,98,841/75 மொத்த வருவாயையும், ரூபா 1,89,787/41 தேறிய இலாபத்தையும் பெற்றுள்ளனர். இப்பருவத்தில் ஏக்கர் ஒன்றுக்கு தேறிய இலாபம் சராசரி ரூபா 1,100,00 ஆக கணக்கிடப்பட்டுள்ளது. ஓர் இளைஞர் ஏக்கர் ஒன்றுக்கு 40 அந்தர்களுக்கு மேலானசெத்தல்மிளகாயை உச்ச விளைவாகப் பெற்றுள்ளார்.

[4ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பசுந்துளிர்

''ஏன் பொடியா சும்மா நிற்கிறாய்?''

''நான் சும்மாவோ நிற்கிறன்? இடுப்பிலே துணி கட்டிக்கொண்டுதானே நிற்கிறன்.''

''ஒரு பராக்குமில்லாமல் உதிலே ஏன் சும்மா நின்று தூங்குகிறாய் என்று கேட்டன்''

''பிறந்த மேனியாய் நிற்கிறன் உனக்கென்ன என்று நானும்தான் சொல்லுறன்.''

''விடியக்காலமே சோம்பேறித்தனமாக இப்படி நிற்காமல் தோட்டத்துக்கு என்னோடு வாவன்''

''வந்தால் என்ன தரப் போறியோ?''

''வாவன் பிறகு பாரன்.''

''சரி வருகிறேன்.''

''இஞ்ச பார் எவ்வளவு புல்லு முளைத்துப்போய் கிடக்கு! இதை செருக்கி எடுத்தாயானால் அள்ளிக் கட்டிச் சந்தையில் கொண்டு போய் விற்கலாம். அவ்வளவையும் காசாக்கிக்கொண்டு வரலாம்.''

''நீ சரியான ஆள்தான் சும்மா நிற்கிறேனென்று சொன்னதிற்காக தலையிலே சுமக்கிற வேலை காட்டிறியோ?''

'' சும்மாவோ, கையிலை காசு கிடைக்குமல்லோ. முருங்கையிலே நாலு பிஞ்சு பிடித்திருந்தாலும் உடனே அதைப்பிடுங்கி சந்தைக்கு கட்டிச் சுமந்துகொண்டு போவினம். உலகமே தெரியாமல் நிற்கிறியே.''

''இப்படி காய்க்கிறது பூக்கிறது எல்லாவற்றையும் வெளியே கொண்டுபோய் விற்றுக் காசாக்கிக்கொண்டிருந்தால் நாங்கள் தின்னிறது என்னத்தை, மண்ணையோ? முதலிலே எங்கள் தேவைக்குக் கண்டதுபோக மீதியாக இருப்பதைத்தான் பிறருக்கு விற்கவேண்டும். அதுதான் கிராம சீவியத்தின் தருமம். எல்லா கிராமங்களும் இப்படி நினைக்க வேண்டும். நினைத்தால் அப்பொழுது கிராமராஜ்யம் தானாகவேதோன்றும் என்று காந்திக்கிழவன்கூட சொல்லியிருக்கிறார். இன்றைக்குள்ள ஊர் நடப்பைப் பார்த்தால் எனக்கு ஒன்றுமே செய்யத் தோன்றவில்லை.''

''இப்ப என்ன, இவ்வளவு புல்லையும் பிடுங்கிக் கொண்டு போகிறியோ அல்லது வேறே யாருக்கும் கொடுக்கட்டுமோ?''

''ஏனணை பறக்கிறாய் அது கிடக்கட்டும். பின்னேரமாக எங்கடை வீட்டுப் பசுக்கன்றைக் கொண்டுவந்து கட்டுறன்' காசு-காசு-காசு-கிராமத்திற்கும் பட்டினத்திற்கும் வேறுபாடு தெரியாமல் எங்கும் இதே பறப்பாகிப்போய்விட்டது. கிராமத்திலே காற்றுக்கு அசையும் மரம் செடிகொடிகளில்கூட காசு பணம் கிலுகிலுக்கும் ஓசைதானே கேட்கிறது''

''நாணயம் மனிதனுக்கு அவசியம் தம்பி. அதுதான் இன்றைக்குக்கெல்லாம் சீவநாடி.''

''நீ நல்ல நாணய நோட்டுக்காரிதான் போ! உன்ர நாணய சீலம் மடிக்குள்ளே எத்தனை கடதாசி நோட்டுக்களாக மடங்கிப்போய்க் கிடக்கிறது, எங்கே எடு பார்ப்போம்?''

''போடாபோ வம்புப் பிஞ்சு! என்னவோ பாவம் காலமே எழுந்து சும்மாநிற்கிறதேயென்று இரக்கப்பட்டுப்பேசினால் நீ என்னவோ சேலையைப்பிடித்து மடியிலே கைவைக்கிறஅளவுக்கு நெருங்கிவருகிறியேஇந்தக் காலத்துப் பள்ளிச்கூடப் பெடியளிட்டே வாய் குடுத்து தப்ப ஏலாது. எனக்கும் பராக்கு இருக்கு? இனியும்உன்னோடே நின்று என்வினை கெட ஏலாது.''

## இளைஞர்......

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

திருவையாற்றின்வருமானம் பின்வருமாறு:-

1968 — 69-ம் ஆண்டு பெரும்போகத்தில் 230ஏக்கர்களில் நெல் செய்கைபண்ணப்பட்டது. இதனால் 2191 ரூபா கிடைத்தது. இதே காலத்தில் 10 ஏக்கரில் வாழைச்செய்கைநடைபெற்றதால் 3000 ரூபா வருமானம் கிடைத்தது. இரண்டும் சேர்த்து 1968—1969 பெரும் போகத்துக்கான காலத்தில் 5191 ரூபா வருமானம் கிடைத்தது.

1969-ம் ஆண்டுக்கான சிறுபோகத்தில் 8 ஏக்கர் காணியில் மிளகாய்ச் செய்கை செய்யப்பட்டதால் 15 120 ரூபாவும், 2 ஏக்கரில் சின்ன வெங்காயச் செய்கையில் 3,500 ரூபாவும், 2 ஏக்கரில் மரக்கறிச் செய்கையால் 2,500 ரூபாவும், 5 ஏக்கரில் நிலக்கடலைச் செய்கையால் 7,500 ரூபாவும், 15 ஏக்கரில் வாழைச் செய்கையால் 28,620 ரூபாவுமாக 1969-ம் ஆண்டு சிறுபோகத்தால் 57 ஆயிரத்து 240 ரூபா இளைஞர் விவசாயத் திட்டங்கள் மூலம் வருமானமாகக் கிடைத்துள்ளது.

# ஊர்ப்பேச்சு

### அவர்கள் எங்கே?

கீரிமலைக்கு அருகாமையாக காங்கேசன்துறைக்கும் கீரிமலைக்கும் நடுமத்தியில் போயிட்டி என்றழைக்கப்பட்ட சிறிய குடியிருப்பில் வசித்தவர்கள் கல்லெறிவதில் பிரசித்திபெற்றவர்கள். இலக்குத்தப்பாமல் வெகு தூரத்திற்கு கவுண் வீசி எறிவது போல அதி வீச்சாக எறிவார்கள்.

ஆஸ்திரேலிய சுதேசிகளின் விநோதமான வளைதடி ஆயுதப்பிரயோகம் போல இவர்கள் கல் எறிவதும் வெளிநாட்டவர் பார்த்துப் பிரமிக்கத்தக்கது. எதிரிகளை வெற்றிகரமாகத் தாக்கி மடக்குவதற்கு கைகண்ட ஆயுதம் இவர்களுக்குக் கைக்குக் கிடைத்தகல்தான். கல்லைப் பொடி பண்ணி, அதைப் பிறகு பொட்டணம் கட்டும் சீமேந்துத் தொழிற்சாலைக்காகக் காணிகள் சுவீகரிக்கப்பட்டபோது 'கற்களை ஏன் வீணாக எடுத்து எறிந்து சேதப்படுத்துகிறீர்கள்? கற்கள் இனிமேல் எங்களுக்குத் தேவை' என்று தொழிற்சாலை நிர்வாகம் போயிட்டி குடிமக்களுக்கு அறிவுரை கூறியதுடன் அவர்களுக்கெல்லாம் கைநிறைய ரொக்கம் கொடுத்து அவர்கள் குடியிருந்த கற்திடர் காணிகளைச் சுவீகரித்துக்கொண்டு போயிட்டிக் குடியிருப்பையே அப்புறப் படுத்தியதுமல்லாமல் தொழிற்சாலை இராட்சத யந்திரங்கள் நம்மூர் கல்லெறி வீரர்களின் கைவீச்சுத் திறமையையும் நசித்துப் பொடிப்பொடியாக்கி விட்டது. அடிதடி சண்டையின்போது இவர்கள் குனிந்து ஒரு கல்லைக் கையில் எடுப்பார்களேயானால் அத்தருணம் அவர்களை யாரும் நெருக்கி அந்தக் கல்லைப் பறிக்க முடியாமல் போய்விடும். ஆனால் நவீன இயந்திரபூதமோ அந்தக் காரியத்தையும்கூட வெற்றிகரமாகச் சாதித்து விட்டதே

### பேச்சுக்கு ஒருவர்

மணிப்புறவத்தை திருகோணமலையில் அநேகமாக இருபது ஆண்டுகளுக்கு முன்பதாக எங்கேயோ பிடித்த ஒரு 'குரூப்' போட்டோவில் பார்த்ததாகப் பல ஆண்டுகளுக்குப் பின் சந்தித்த திருமலை அன்பர் ஒருவர் என்னைக் கண்டபோது கூறினார்.

'வேறுயார் யாரை எல்லாம் அந்தப் படத்தில் பார்த்தீர்கள்?' என்று அவரிடம் கேட்டேன்.

'உங்களுக்குப் பக்கத்தே பிரபல பேச்சாளர் பி. எஸ். மாசிலாமணி நிற்கிறார். மற்றும் சிவபாலன் எம். பி. உட்பட பல பிரமுகர்கள் அப்படத்தில் காணப்படுகிறார்கள்' என்றார்.

ஓ, அதுவா? அது எங்கேயோ அல்ல, திருமலை நகர் எல்லைக்குள்ளேதான். அந்நாளில் திருமலையில் நிறுவப்பட்ட நேதாஜி சுபாஷ் போஸ் இயக்கத்தின் 'வீரர்கள்' குரூப் சேர்ந்து எடுத்துக்கொண்ட படமாக இருக்கும்' என்று நான் கூறினேன்.

'மணிப்புறவம்' இப்படி எத்தனையோ குரூப்கள் குழுக்கள், கழகங்கள். சங்கங்களில் எல்லாம் வீராவேஷத்துடனே பங்கு கொண்டிருந்திருக்கிறது. ஒரு நிமிடம் கண்மூடித் தியானித்தால்... அடேயப்பா எத்தனை நண்பர்கள், எத்தனை நினைவு முகங்கள்! வி. எஸ். மாசிலாமணி 'யாழ்ப்பாணத்தவர்' என்று மட்டுமே அந்நாளில் எனக்குத் தெரிந்திருந்தது. அதற்குமேல், யாழ்ப்பாணத்தில் எந்தஊர் என்று அவரிடம் நான்விசரித்ததில்லை. இரண்டோர் ஆண்டு முன்பதாக ஒரு தினம் எங்கேயோ என்னவோ காரியமாகப்போய்க் கொண்டிருந்தபோது இலங்கை வானொலி மரண அறிவித்தல் ஜாபிதாவில் 'நாவாந்துறைதிரு. வி. எஸ். மாசிலாமணி' என்று ஒரு பெயர் காதில் வீழ்ந்தபோது ஒரு கணம் திகைத்து நின்றேன்.

'ஒருவேளை அது வேறு மாசிலாமணியாகக்கூட இருக்கலாம்' என்று உடனேயே எனக்குள்ளாகச் சமாதானப் பட்டுக்கொண்டு மேலே நடந்தேன். காலதேவனும் என்னைப்போலப் பறந்து கொண்டும் நடந்துகொண்டும் போகிறவர் தானே சே, எப்படி ஒரு நல்ல பேச்சாளர் பொதுநல ஊழியன் பொதுத்தேர்தல் மேடைகளில் அவர் பேசிய அழ்கான தமிழ்ப்பேச்சுகள் இன்னமும் என்காதில் நிற்கின்றன. இராணுவப்படை, கடற்படை முதலாகப் பத்திரிகைக் காரியாலயம்வரை பல துறைகளில் பணி ஆற்றியவர். கடைசியாக யாழ்ப்பாணம் முனிசிபல் தேர்தலிலும் போட்டியிட்டார்.

## மணிப்புறவம்

எந்தக்கட்சி மேடையென்றாலும்சரி, அந்தக்கட்சிக்கு ஆதரவு திரளும்படி திறமையாகப் பேசுவார் மேடையிலிருந்து இறங்கி வரும் பொழுது நண்பர்களைப் பார்த்துவிட்டால் — அவர் முகத்தில் மலரும் கள்ளங்கபடமற்ற அந்தச் சிரிப்பு... ஆனால் அதற்குள்ளேதான் எவ்வளவு அர்த்தம் பொதிந்திருந்தது.

## இளம்பிள்ளைவாதம்

# குழந்தைகளுக்கு காலன்;

# காவல் மருந்து காப்பாற்றும்

'போலியோ மையலிற்றிஸ்', அல்லது சுருக்கமாக போலியோ என்னும் இளம்பிள்ளைவாதம் ஒரு பயங்கரமான நோய். இது பெரும்பாலும் இளம் குழந்தைகளையே தாக்குகின்றபடியினால் எதிர்கால சமுதாயங்களுக்கு இதனால் எப்பொழுதுமே ஆபத்து. இது ஒரு தொற்றுநோய் ஆதலால் நோய்கண்ட ஒருவர்மூலம் அது திடீரென்று கொள்ளை நோய் ரூபமெடுத்துப் பரவும். ஒரு முறை முற்றாக ஒழிக்கப்பட்டுவிட்டது போலக் காணப்பட்டாலும், எங்கேயாவது மூலைமுடுக்குகளில் ஒளிந்திருந்துவிட்டு மீண்டும் தலைதூக்கும்.

1962-ம் ஆண்டு இப்படிப்பட்ட ஒரு பரவல் திடீரென்று இலங்கையின் பல பாகங்களில் தோன்றியது. சிகிச்சை தேடி வந்த சுமார் 1800 பேருக்கு ஆஸ்பத்திரிகளில் மருந்துகொடுக்கப்பட்டது. இவர்களில் 175 பேர் இறந்துவிட்டனர். நூற்றுக்கணக்கானவர்கள் நோயினால் இன்றுவரை பீடிக்கப்பட்டு அங்கப் பழுதுக்குள்ளாகியிருக்கிறார்கள். நோயுற்றவர்களில் தொண்ணூறு வீதமானோர் மூன்று மாதத்துக்கும் எட்டு வயதுக்குமுட்பட்ட குழந்தைகள், பின் தொடர்ந்த வருடங்களிலும் இளம்பிள்ளைவாதம் சிறிய அளவில் ஆங்காங்கே தோற்றியபோதிலும் இலங்கை முழுவதிலும் காவல் மருந்து கொடுக்கும் இயக்கம் ஒன்று நடைபெற்றதால் நோய் ஓரளவுக்கு அடங்கியிருக்கிறதென்று கூறலாம். ஆயினும் பொதுமக்களின் பூரணஒத்துழைப்பு கிடைக்காதபடியினால் நோயை முற்றாக அகற்ற முடியவில்லை என்றும், அதனால் இன்னமும் வருங்காலத்தில் ... இருந்துகொண்டு வருகிறதென்றும் சுகாதாரப் பகுதியினர் கருதுகிறார்கள்.

### நோயும் குணமும்

போலியோ நோய் ஒரு வித கிருமியினால் உண்டாகிறது. இக்கிருமி சிறு குழந்தைகளின் வாய் மூலமாக உடலுக்குள் புகுந்து உணவுக்குழாயிலும் ஜீரண உறுப்

### சுப்புடு

புகளிலும் குடிகொண்டு நோயைப் பரப்பும். நோய் முற்றியதும் நரம்புகள் தாக்கப்படுகின்றன. இதன் பலனாக உறுப்புகளில் பலம் குறைந்து அவை முடங்கி விடுகின்றன. கடைசிப் பருவத்தில் இந்நோய் முதுகெலும்பையும்தாக்கி இறுதியில் மரணத்தைக்கொண்டு வரும்.

நோயுற்ற குழந்தையின் மலத்திலிருந்தே கிருமிகள் பரவுகின்றன ஆதலால் சுகாதார வசதி குறைவான இடங்களில் நோய் கெதியில் பரவும்.

சமீபகாலத்தில் எடுக்கப்பட்ட புள்ளி விபரங்களிலிருந்து, நோய்கண்ட குழந்தைகளில் நூற்றுக்கு நாற்பது வீதமானோர் முடக்குவாதத்திற்கு உள்ளானார்கள் என்றும் சுமார் பத்து வீதமானோர் இறந்து விட்டார்கள் என்றும் தெரிய வருகிறது. ஆரம்பத்திலேயே நோய் ஒடுக்கப்படாவிட்டால் குழந்தைகள் அநியாயமாக துன்பத்துக்குட்பட்டு அவர்களுடைய வாழ்க்கையே சீர்கெட்டுப்போய் விடும். காவல்மருந்து—அல்லது தடுப்பு மருந்து கொடுப்பதே இதற்குச் சிறந்த பரிகாரம்.

### தடுப்பு முறை

தொற்றுநோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு தடுப்பு முறையை முதன்முதலில் கண்டுபிடித்தவர் எட்வர்ட் ஜென்னர் என்ற ஆங்கில வைத்தியர். அம்மை

[13ம் பக்கம் பார்க்க]

''லேடன்'' LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ்
(Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
74A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 330

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிந்த சத்திரம்

பொ. சந்திரலிங்கம்

[1]

சுற்றத்தார் புடைசூழ ஆடி அசைந்தவாறு, அலங்கரிக்கப்பட்ட பாடை, சாந்தாவின் பூதவுடலைச் சுமந்தவாறு அரசடி வீதி வழியாக கோம்பயன் மயானத்தை நோக்கி அமைதியாகச் சென்றுகொண்டிருந்தது.

வேதனை விளிம்பிலே, வியர்வை முத்துக்கள் சிந்த, இதயத்தில் சோகம் ததும்பியவாறு, அரைமுளவேட்டி அணிந்து, பூணூல் தரித்து, அமைதியே உருவாக, பூதவுடல் முன் சந்திரன் சென்று கொண்டிருந்தான்.

சோகம் நிரம்பி வழியவும் கூடச் சந்திரனல் சாந்தாவுடன் கழித்த இன்பமான நாளை நினைக்காமல இருக்க முடியவில்லை. வெய்யிலின் கொடுமை தாங்காமல் நிழலை நோக்கி ஓடுகின்றவனைப்போல் சோகத்தின் வேதனை தாங்காமல் கடந்தகால இன்ப நிகழ்ச்சியை நோக்கி ஓடிக்கொண்டிருந்தான்

வெறிச்சோடிப் போன மணற்பரப்பில் கடிகாரத்தைப் பார்த்தவாறு அமர்ந்திருந்தான் சந்திரன். அப்போது பின்னல் நின்று கொண்டு தன் தளிர்க்கரங்களால் அவன் கண்களைப் பொத்தினுள் சாந்தா.

'சாந்தா! என்ன விளையாட்டு, உனக்காக எவ்வளவு நேரம் காத்திருக்கிறேன் தெரியுமா?' என்று பொய்க் கோபம் கொண்டான் சந்திரன்.

'நான் என்ன செய்ய சந்திரன். எங்கப்பாவைப்பற்றி உங்களுக்குத் தெரியுமே; அவருக்கு எப்படியெல்லாம் சாக்குப்போக்குச் சொல்லி வந்திருக்றேன்' என்று சிணுங்குவதுபோல் நடித்தாள்.

'சரி... கண்களைப் பொத்தியது போதும்' என்று கூறிக்கொண்டு அவள் கரங்களைப்பற்றி இழுத்தான்.

சந்திரன் அவள் கையைப் பற்றி இழுத்த இழுவையில் அவன் மடியில் வந்து வீழ்ந்தாள். இது தான் தருணமென்று, அவள் தலைமயிரைக் கோதியவாறு அவள் முகத்துடன் தன் முகத்தைக் கொண்டு சென்றான்.

'சந்திரன்! விளையாட்டுப் போதும் உதெல்லாம் கல்யாணத்திற்கு அப்புறம்' என்று கூறி உதடுகளில் புன்னகையை இழையோட விட்டாள்.

'நமக்குக் கல்யாணம் முடிந்தமாதிரித்தான்' என்று கூறிக்கொண்டு புன்னகை இழையோடிய உதடுகளில் முத்திரை பதித்தான். அந்த ஒரு விஞடி ஏதோ விண்ணுலகத்தில் சஞ்சரிப்பதுபோல் பிரமை அவர்களுக்கு.

தனது உணர்ச்சியை ஒருவாறு சமாளித்துக்கொண்டு 'என்ன சந்திரன் சின்னப்பிள்ளைமாதிரி' என்று முகத்தைச் சுழிப்பதுபோல் பாசாங்கு செய்தாள்.

'தன் மனைவிமுன் எந்தக் கணவனும் சிறுபிள்ளைதான்' என்றான் சந்திரன்.

போதும் உங்கள் வியாக்கியானம், என்னை மனைவி என்று சொன்னீங்களே? நான் எப்போ உங்களைத் திருமணம் செய்தேன்?

'சாந்தா திருமணம் என்பது சமுதாயத்திற்கும் சம்பிரதாயத்திற்கும் செய்யப்படுபவை; என்றுஇரு உள்ளங்க ஒன்றுபடுகின்றதோ அன்றுதொட்டு அவர்கள் கணவன் மனைவிதான். இது தான் நமது பண்பாடு' என்றான். ஏதோ பெரிய பிரசங்கம் பண்ணிய பெருமை அவன் முகத்தில் பிரதிபலித்தது.

'போதும்... உங்கள் பிரசங்கத்தால் நான் சொல்ல வந்த விஷயத்தை மறந்திட்டேன். சந்திரன், நம்முடன் கூடப்படித்தான் பாஸ்கர், அவன் காலையிலே என்னைச் சந்தித்து, 'நான் உன்னை விரும்புகிறேன் சாந்தா; நீ மறுத்தாலும் நான் உன்னை அடைந்தே தீருவேன்' என்று கூறிவிட்டான் என்று அழாக்குறையாகச் சொன்னுள் சாந்தா.

சந்தோஷமான நிகழ்ச்சி ஓடிக்கொண்டிருந்த நேரத்தில் பாஸ்கர் என்ற பாத்திரம் வந்ததும், தன்னையே மறந்த நிலையில் ''பாஸ்கர், உன்னைச் சும்மா விடமாட்டேன்'' என்று மனதுக்குள் கூறிக்கொண்டான் சந்திரன். அப்போது அவன் கண்களில் கண்ணீர் திரையிட்டு, கடந்தகால இன்ப நிகழ்ச்சியைத் தடை செய்தது. அவன் கண்ணீரைத் துடைப்பதற்குள் நாங்கள் சிலதூரம் சென்று விடுவோம்.

[2]

பாஸ்கர் ஒரு செல்வந்தன். ஆனல்! அழகுக்கு அடிமைப்பட்டவன். சிற்பக்கலைஞன் தன் கைவண்ணம் காட்டி எவ்வளவு அழகாக சிற்பத்தை செதுக்கின்றனே அதேபோல் பிரமனும் தன் கைவண்ணத்தை சாந்தாவிடம் காட்டி விட்டானே என்று ஐயுறும் வண்ணம் சாந்தா அழகாகவிருந்தாள். அவள் அழகிலே பாஸ்கர் அடிமையானதில் வியப்பில்லைத்தான்.

''சாந்தி உன்னை விரும்புகிறேன்'' என்றுகூறி எவ்வளவு காலமாயிற்று என்று மனதுக்குள் கூறிக்கொண்டு எப்படியும் அவளைக் கடத்திவரவேண்டும் என்ற முடிவுடன் அவள் வீட்டைநோக்கி சென்று கொண்டிருந்தான் பாஸ்கர்.

சந்திரனை சந்திக்க வந்து கொண்டிருந்த சாந்தாவை எதிர்பாராத விதமாகச் சந்தித்த பாஸ்கர் அவளைகடத்திக்கொண்டு சென்றான்.

பாஸ்கர்! என்னை விடு, நான் ஏற்கனவே ஒருவரை நேசித்துள்ளேன் அவரையே மணக்கவிரும்புகிறேன்தயவு செய்து என்னை விடு என்று அழுதவாறு கெஞ்சினள்.

அவன்தன் அகண்டவாயை திறந்து பேய்ச்சிரிப்புச் சிரித்தான். சாந்தா! உன்னை எவ்வளவு காலம் எதிர்பார்த்தேன் தெரியுமா? காத்திருந்த கனி கையில் கிடைத்ததும் தூரவீசுவேன? என்று கூறி மீண்டும்பேய்ச்சிரிப்புச் சிரித்தான்.

பாஸ்கர்! எங்கள் காதலை கெடுத்துடாதே, காதல் என்பது எல்லோருக்கும் கிடைக்கும்பொருள்அல்ல. ஏதோ சில சந்தர்ப்பங்களில் இயற்கையால். உள்ளத்தால், உணர்வால் ஏற்படுவது. புனிதமான காதல் என்ற சொல்லுக்கு களங்கம் கற்பிக்காதே. என்னை சந்திரனிடம் சேர்த்துவிடு என்று அமைதியாகவும், அடக்கமாகவும்கெஞ்சினள்சாந்தா.

காதலாம் காதல்.......... யாருக்கு வேண்டும் இந்தக் காதல், எனக்கு வேண்டியது உள்ளமல்ல...உடல்: நீ உன் சந்திரனுக்கு உள்ளத்தைக் கொடு ஆனல்! எனக்கு!...

என்று கூறிக்கொண்டுஅவள் முந்தானையைப் பிடித்து இழுத்தான்.

திரௌபதிக்கு துயில் உரியும்போது கண்ணன் உதவி செய்தான். ஆனல்! இந்தப் பேதைக்கு?

பாஸ்கர் என்னை ஒன்றும் செய்யாதே'' என்று மாத்திரம் கூறமுடிந்தது.

அவள் பேச்சுக்கு மதிப்புக் கொடுத்தால்தானே? அவன் தன் இச்சையைத் தீர்க்க முனைந்து கொண்டிருந்தான்

துடிதுடித்த அந்த பெண் பறவை, விஞடிகள் செல்லச் செல்ல, துடிதுடிப்புஅடங்கிக் கொண்டே சென்றது.

அவள்கற்பு பறிக்கப்பட்டு விட்டது. உலகத்தில் சிறந்த பொருள் என்று மனிதர்கள் போற்றுவது கற்பு என்பது பாஸ்கர் என்ற கயவனுக்கு தெரியவில்லை போலும்.

சுயநினைவிழந்து ஆடைகளைந்தவாறு ஆதரவற்றுஅனதையாகக் கிடந்த சாந்தாவைப் பார்த்து உலகம் சிரித்தது. அவள் கண்விழித்து பார்த்தபோது உலகம் கருமையாகக் காட்சியளித்தது. அவள் வாழ்வு கருமையடைந்தபின், உலகம் கருமையடைந்துதான் என்ன?

களைந்த ஆடையைச் சரி செய்துகொண்டு கள்ளாடியவாறு வீடுநோக்கி நடந்தாள்.

பாவம் சந்திரன்அவனுக்கு நடந்தவைஎப்படி தெரியும், அவன் என்ன அவதாரமா? மனிதன்தானே? அவனல் கடிகாரத்தை பார்த்துமுணுமுணுக்கத்தான்முடிந்தது.

சாந்தா! நீ இன்னும் இந்த உலகத்தில் வாழவேண்டுமா? பெண்மையின் பொக்கிஷம்

[12ம் பக்கம் பார்க்க]

உருவகச்சித்திரம்

# தாமரையாள் கண்ணீர்

(செல்வி கே. இந்துமதி)

புள்ளினம் வாழ்த்தொலி பாடக் கதிரவன் கீழ்த்திசையில் தனது இளங்கதிர் பரப்பி உதயமாயினன். உலகையெல்லாம் தனது கரும் போர்வையால்மூடிக்கொண்டிருந்த இருளானது ஆதவனைக்கண்டதும் அலறிக் கொண்டு ஓடியது. தாமரைப் பெண்ணுள் கதிரவனை வரவேற்பதுபோல் தனது முகமெல்லாம் சிரிப்புத்தவழ மலர்ந்து மணம் வீசினள். தாமரையைக் கண்டதும் ஆதவனுக்குப் புதுஉற்சாகம் எழுந்தது. சொல்லிவைத்தாற்போல எங்கிருந்தோ ஒரு வண்டு தாமரையை நோக்கிப் பறந்து வந்தது. தாமரைப்பெண்ணுள் அகமும் முகமும் மலர அதனை வரவேற்று தன்னிடமிருந்த அமுதத்தினை வாரிவழங்கினள். வண்டானது இவ்வாறு தாமரையிடமிருந்து அமுதம் பருகிக்கொண்டிருந்த காட்சியை ஆதவன் நோக்கினன். அவனுக்கு கோபம் பொங்கிஎழுந்தது. தனது உடம்பெல்லாம அக்கினிப்பிளம்பாக்கி உலகமாந்தரையும் சீவராசிகளையும் வாட்டலானன். தாமரையும் கதிரவனின் வெம்மையில் வாடினள்.

இவ்வேளை தென்றல் தாமரையை அணுகிற்று. தனக்கென வாழாது பிறருக்காகவே வாழும் இயல்பினை உடையவளாகிய தாமரையாள் தன்னிடமுள்ள நறுமணத்தையெல்லாம் தென்றலுக்கு வழங்கினள். அதனை அள்ளிச் சுமந்துகொண்டோடிய மக்கள் மத்தியில்தென்றல் அதனைப் பரப்பிற்று. இதனைக்கண்ட ஆதவனுக்கு பின்னும் அதிகசினம் பொங்கியது. தனது சுடுகிரணங்களைக்கொண்டி பிரபஞ்சத்தை மேலும் உக்கிரமாகப் பொசுக்கலானன். தனது காதலிமேற்கொண்ட தவறன சந்தேகத்தினல் கதிரவன் இவ்வாறக அக்கினி காண்டமியற்றி உலக மக்களையும் தாமரையையும் தன்னையுமே தகித்துக்கொண்ட போது தாமரையினல் இதனைப் பொறுக்கமுடியவில்லை. அவள் தனது சக்தியையெல்லாம் ஒன்றுசேர்த்து அண்ணந்து ஆகாயத்தை நோக்கினள். அப்பப்பா நெருப் பனல்.

அமுதத்தினையும்நறுமணத்தையும் இழந்து நலிந்திருந்தவள் இப்பொழுது ஆற்றெணுத் துயரத்தினல் மனமுடைந்தவளானள். தலைகவிழ்ந்து கண்ணீர் வடித்தபடியே தன் தாயிடம் சரணடைந்தாள். இதனைக்கண்டான் ஆதவன். அப்போது தான் சிந்தனை உதித்தது. தனது வீணன சந்தேகத்தை எண்ணி வருந்தினன். துக்க சாகரத்தில் மூழ்கினன். அவனது சினமும் தணிந்தது. தனக்கென வாழாது பிறருக்காக வாழும் உயர்ந்த பண்பினையும் அறிந்தான், அவன் மனம் தாமரையை நினைத்து வெதும்பியது அப்பொழுது அவன் சிந்திய இரத்தக் கண்ணீர் வானத்தைச் செவ்வானமாக்கியது. உலகை இருளில் மூழ்கடித்து கதிரவனும் துயரக்கடலில் மூழ்கினன்.

என்றுமே நடவாதது போல் தென்றல் அசைந்தது; வண்டு பாடிற்று.

ஈழத்தின் பண்பை நாட்ட 'ஈழநாடு'
தமிழக தனத்தை ஈட்ட 'தம்பி அன் கோ'

நிரந்தர சேமிப்புக்கு கீழ் குறித்த வட்டி கொடுக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1 வருடத்திற்கு | — | வருடம் 10 சத வீதம் |
| 2 வருடத்திற்கு | — | வருடம் 11 சத வீதம் |
| 3 வருடத்திற்கு | — | வருடம் 12 சத வீதம் |
| ரூ: 10,000/-க்கு மேல் | — | வருடம் 12 சத வீதம் |

மேற்குறித்த நிரந்தர சேமிப்பை எப்பொழுதும் 30 நாள் அறிவித்தலில் வருடம் 8 சத வீத வட்டியுடன் எடுக்கலாம்.

வட்டி ஒவ்வொரு வருடமும் கொடுக்கப்படும்.

தம்பி அன் கோ.

திருநெல்வேலி, யாழ்ப்பாணம், வண்ணர்பண்ணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தின் அழகுதான் உயர்ந்தது

''சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்''. ''எந்தையே ஈசா உடலிடங்கொண்டாய்'', ''சித்த மலம் அறுவித்து சிவமாக்கி எனையாண்ட அத்தன்எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே'' எனப் பாடிய மாணிக்கவாசக அடிகளின் உள்ளத்தில் மலம் அறுந்து, சிவம் உறைந்தது. வாக்கில்

முன்வந்தெதிர் எழுந்தென்
அத்தன் ஆனந்தன்
அமுதனென்று அள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய்
வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன்
பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த்
தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோ நின்அன்புடைமை
எல்லோம் அறியோமோ

கழுவ எந்த மடுவில் மூழ்கி எழ வேண்டும்? 'எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த பொங்கு மடுவில்' மூழ்கியெழ வேண்டுமெனப் பாடுகின்றார் மாணிக்கவாசகப் பெருந்தகை. சிவமும் சக்தியும் இசைந்ததுபோன்ற அருள் நீர் பொங்கும் மடுவில் மூழ்கியெழுந்தால், அகமலம்

## மாணிக்கவாசகர் தன்னை ஒரு சித்தமழகியராக எண்ணி எண்ணி இறைவனை உருகிப் பாடினார்

உண்மை ஒளிர்ந்தது. தாம் பெற்ற பேரின்பத்தைமக்கள் யாவரும் பெறவேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடு பல பக்திப் பாடல்களை பாடியருளினார்.

இயற்கை, பெண் ஆண் வடிவங்களாகப்பொலிவதை அவர் உணர்ந்தார் பெண்மையே தாயாக மலர்ந்து இறைமையாகக் கனிகிறது. ',குவளைக் கண்ணி கூறன் காண்க, அவளுந்தானும் உடனே காண்க'' என இறைவனைப் பாடினார். சிவம் இன்றி சக்தி இல்லை; சக்தி இன்றி சிவம் இல்லை. ''அருளதுசக்தியாகும்அரன் தனக் கருளையின்றி, தெருள்சிவம் இல்லை. அந்தச் சிவம் இன்றி சக்தி இல்லை'' என்று சிவ ஞான சித்தியாரும் செப்புகின்றது. மானிட வாழ்விலும் பெண்மைக்கு முதன்மைவழங்கப்பட்டது. இறை உணர்விலும் பெண்மைக்கு முதலிடம் நல்கப்பட்டது. இறைவனையே பார்வதி பாகன், இலட்சுமி நாராயணன் என அழைப்பது பண்டைய மரபு. வெம்மையும் தண்மையும் உடல் நலத்திற்கு இன்றியமையா

சித்தமழகியார் பாடாரோ
நம் சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்
கேலோரெம்பாவாய்

உடலழகு, உறுப்பழகு, உடையழகு, உறைவிடத்தழகு என்பனவெல்லாம் உயர்ந்தவையல்ல. உள்ளத்தின் அழகுதான் உயர்ந்தது; சிறந்தது. புறவழகு அழகல்ல, அக அழகே அழகு என்பதை அழுத்தந்திருத்தமாக இப்பாடலிலே எடுத்துரைக்கின்றார் மாணிக்கவாசகப் பெருந்தகை. பெண்ணினம் வாழவேண்டிய நெறிமுறையையும். கற்பின் திண்மையையும் பின்வரும் பாடலில் பாடுகின்றார்.

முன்னைப் பழம்பொருட்கு
முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும்
பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாக
பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள் பணிவோம்
ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவர்
ஆவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்
பணிசெய்வோம்

அகன்று, அருள் சுரக்கும். ''முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம்பொருளே, பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே' என மாணிக்கவாசகப் பெருந்தகை பாடியதுபோல 'எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த' என்ற அடியில் பொதிந்துள்ள தத்துவார்த்தம் அறிவியல் அடிப்படையிலும் பொருத்தமாக அமைந்துள்ளது. இரசாயன ரீதியிலும் பார்த்தால் தண்ணீர் $H_2O$ என அழைக்கப்படுகிறது. அதாவது ஐதரசன் என்னும் வாயுவும், பிராணவாயுவும் சேர்ந்துதான் தண்ணீராகக் காட்சியளிக்கிறது. அவைபோலத்தான் சிவமும் சக்தியும் சேர்ந்து இசைந்த அருள்நீர் பொங்கும் மடு என மாணிக்கவாசகப் பெருந்தகை பின்வரும் திருவெம்பாவைப் பாடலில் பாடுகின்றார்.

பைங்குவளைக் கார் மலராற்
செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால்பின்
னும் அரவத்தால்
தங்கண் மலங் கழுவுவார்
வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும்
எங்கோனும்போன்றிசைந்த
பொங்கு மடுவில்புகப் பாய்ந்து
பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்ப சிலம்பு
கலந்தார்ப்ப
கொங்கைகள் பொங்க
குடையும் புனல்பொங்கப்
பங்கையப் பூம்புனல்
பாய்ந்தாடேலோரெம்பாவாய்

வடிவழகு, கல்வியழகு, சித்தமழகு ஆகியவற்றுள் தலைசிறந்தது சித்தமழகே. குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும்

[10-ம் பக்கம் பார்க்க]

— க. கந்தசாமி —

தன. அவை போல வாழ்வு நலத்திற்கு, இறையுணர்விற்கு ஆண்மையும் பெண்மையும் இன்றியமையாதன. பெண்மை என்றால் என்ன? ''கட்புலனாயதோர் அமைதித் தன்மை'' என்றார் நச்சினார்க்கினியர். ''கண்ணுக்குப் புலனாகாத அமைதி, பெண்வடிவாகிக் கண்ணுக்குக் காட்சியளிக்கிறது'' என விரித்துரைக்கிறார் தமிழ்த் தென்றல் திரு. வி. கலியாண சுந்தரனார். ''அடக்கம், பொறுமை, தியாகம், பரநலம், இரக்கம், அழகு, ஒப்புரவு, தொண்டு முதலியன அமைந்த ஒன்றுதான் பெண்மை எனப்படும்'' என திரு. வி. க. வரைவிலக்கணம் கூறுகிறார். அத்தகைய பண்புநலம் வாய்க்கப்பெற்ற பெண்களும் உயர்ந்த உள்ளத்தை பெற்று இறைவனை உய்த்துணர வேண்டும் என எண்ணிய மாணிக்கவாசகப் பெருந்தகை பெண்களின் நிலைக்கே தாமும் இறங்கி, அவர்கள் விளையாட்டின் போது பாடும் பாவினங்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றினூடே அறநெறியையும், வாழ்க்கை முறையையும், இறை உணர்வையும் ஊட்டுகின்றார். திருவெம்பாவை, திருப்பொற்சுண்ணம், திருப்பொன்னூசல், திருவம்மானை, திருப்பூவல்லி போன்ற பாடல்களை பண்டைய நாளில் பாவையர் பாடினர். திருவெம்பாவையில் ஒருபாடல் பின்வருமாறு:

முத்தென்ன வெண்
ணகையாய்

இன்னவகையே எமக்
கெங்கோ நல்குதியேல்
என்ன குறையுமிலோமேலோ
ரெம்பாவாய்

உங்கையிற் பிள்ளை
உனக்கே அடைக்கலமென்று
அங்கப் பழஞ்சொற் புதுக்கு
மெம் அச்சத்தால்
எங்கள் பெருமான்
உனக்கொன்
றுரைப்போம் கேள்
எங்கொங்கை நின் அன்பர்
அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா
தெப்பணியும் செய்யற்க.......

'உன்னடியார் தாள்பணிவோம், ஆங்கவர்க்கே பாங்காவோம், அன்னவரே எங்கணவர் ஆவார், அவருகந்து சொன்ன பரிசே தொழும்பாய் பணி செய்வோம், எங்கொங்கை நின்னன்பர் அல்லார் தோள் சேரற்க' என்னும் அடிகளைப் பாடிப்பாடி ஆழ்ந்து சிந்திக்க வேண்டும் ஒருத்தனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருத்தன் என்னும் கற்பு வாழ்வைப் பெண்மட்டும் கடைப்பிடித்தால் போதாது என்பதையுணர்ந்த வள்ளுவப் பெருந்தகை 'ஒருமை மகளிரே போலப் பெருமையும் தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு'' எனப்பாடி, ஒருத்தனுடன் ஒழுக்கநெறியில் வாழ்கின்ற கற்புடைய பெண்ணைப் போல ஆணும் ஒழுகவேண்டும் என வலியுறுத்தினார்.

புற உடலில் படிந்திருக்கும் அழுக்கைத் தண்ணீர் கொண்டு கழுவி விடலாம் ஆனால் உள்ளத்தில் ப... டிக்கிடக்கும் ...

## நாவலன் நற்பணி

— ஷண்முக குமரேசன் —

செந்தமிழ் நிமிர்ந்து நிற்கச் சிவமணம் கமழ்ந்து நிற்க
நந்தமிழ் வாக்கு வீரன் நாவலன் முனைந்து நின்றான்
பைந்தமிழ்த் தேனை உண்டு பதிபசு பாச ஞானம்
எந்தமிழ்ச் சிறார்கள் உண்ண எழுதினான் இனிய நூல்கள்.

தமிழினில் மட்டு மின்றிச் சால்புடன் ஆங்கி லத்திற்
சிந்தனை ஊறக் கற்றுத் தேறிய அறிஞன் அன்னான்
வந்தனை செய்து சைவம் வளமுறத் தமிழைப் போற்றி
நிந்தனை செய்தான் ஈன நெறியினிற் செல்வோர் தம்மை.

வாணிப வளர்ச்சி நாடி வந்தனர் ஆங்கிலேயர்;
பேணினர் தமது மார்க்கம், பித்தரென் றிகழ்ந்தார் எம்மை
நாணினர் சைவமக்கள் நாவினாற் சொல்வ தெங்ஙன்?
ஊனுமே குறைந்த வேளை ஓர்ந்தனர் ஏசு மார்க்கம்.

'உணவுடன் உடையுந் தந்தே உயர்ந்தநற் பதவி ஈவோம்
குணமென எமது மார்க்கம் கொள்ளுமின்' என்று சொன்ன
அணிமொழி கேட்டுச் சைவர் அறம் பொருள் இன்ப வீடும்
பிணமென எண்ணிப் போலும் பிடித்தனர் ஏசு மார்க்கம்.

சைவர்கள் சைவம்விட்ட சலிப்பினால் வருந்தி ஐயன்
சைவர்கள் உண்மை தேரச் சைவ நற் பள்ளி வைத்தே
சைவமாம் பழைய மார்க்கம் சாற்றிடும் முறைகள் பேசிச்
சைவமே ஈன்ற செம்மல் தைரிய மாகநின்றான்.

நீறிலா நெற்றி பாழென் றோதினர் புலவர் முன்னாள்;
நீறுள நெற்றி கண்டு நீசரோ வெறுத்த வேளை
நீறெலாம் மேனி காட்ட நிமிர்ந்துநின் றெமது வீரன்
நீறுமோ சைவ மக்கள் நெற்றியில் விளங்கச் செய்தான்.

புறநெறிச் செல்வர் மக்கள் புத்தியைப் பேசி மாற்ற
அறநெறிச் செல்வன் தானும் அறிவொளி காட்டப் பேசி
உறுதுணை சிவனின் தாளென் றோங்கியே இடித்துக் கூறி
'மறுநெறி வேண்டாம்' என்னும் வார்த்தைகள் வடித்து நின்றான்.

இலவசக் கல்வி பாலர் இன்புடன் பயின்று வாழ
மலபரி பாக உண்மை மாணவர் மகிழ்ந்து கற்கக்
கலைமகள் கருணை யூட்டக் கலைபயில் நிலையம் வைத்தே
தலைவனாய் வழியைக் காட்டித் தவநெறி தழைக்கச் செய்தான்.

கோவிலில் நடன மாடுங் கோதையர் முறையை தாக்கிக்
கூவினான் ஓது வாரைக் கோவிலிற் பண்கள் தேர்ந்து
தேவனின் அருளைப் பெற்ற திருமுறை ஓதுதற்கே;
நாவலன் வளர்த்த பண்ணும் நாமினிக் காக்க வேண்டும்.

வண்ணையிற் பள்ளி கண்டு வளமுறும் தில்லை தன்னிற்
கண்ணெனக் கல்வி யூட்டப் பள்ளியும் நிறுவி அன்னான்
மண்ணிலே அச்சு நூல்கள் மலிந்திட வேண்டும் என்று
திண்ணெனச் சென்னை சேர்ந்தே எந்திரம் வாங்கி னானே,

நாட்டிலே தமிழுக் கேற்ற தனயனாய் திகழ்ந்த ஐயன்
பாட்டிலே அநேக நூல்கள் பாங்கென மலிந்த வேளை
காட்டவே தொண்டர் வாழ்வும் கற்கவே சிறுவர் பாடம்
தீட்டினான் வசன மாகத் தீந்தமிழ்ப் புராண நூல்கள்.

பிழைமலி நூல்கள் இன்று பெற்றனம் நாட்டி லெல்லாம்
பிழையிலா நூல்கள் அச்சிற் பெரிதுமே பொறித்த அன்னான்
பழையநல் லேடுகண்டு பதிப்பித்தே பாதை காட்டிப்
பழையநம் மொழிக்குச் செய்த பணியெலாம் போற்று வோமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை அரங்கம்

தயாரிப்பு: 'மேகலா'

## பண்டாரவளையில் இசைமழை பெய்கிறது!

பண்டாரவளையிலுள்ள கல்விக்கூடங்களில் பயிலும் தமிழ்ப் பிள்ளைகள் அத்தனை பேர் வாயிலும் இசைமணம் கமழ்கிறது. பண்டாரவளை வட்டாரக்கல்வி அதிகாரி திரு. மனோகரன் கோவிந்தராஜா, பண்டாரவளை சென் மேரிஸ் கல்லூரி ஆசிரியை சங்கீதபூஷணம் திருமதி இராஜம் மரியாம் பிள்ளை ஆகியோரே பண்டாரவளையில் 'இசைமழை' பெய்வித்து வருகின்றனர்.

இவர்கள் இருவரும் பண்டாரவளைப் பகுதியிலுள்ள தமிழ் மாணவ மாணவியருக்கு இலவச இசைவகுப்புகள், தேவார, திருவாசக, பஜனை வகுப்புகள் முதலியவற்றை நடாத்தி வருகின்றனர்.

ஆட்சிமன்ற நியமன உறுப்பினர் திரு. ரீ. எஸ். தொண்டமானைப் போஷகராகக் கொண்டு இயங்கும் இவ்விசை வகுப்புக்கள் இலங்கை வானொலி நிகழ்ச்சிகளிலும், பிற பொதுமத நிகழ்ச்சிகளிலும் இடம்பெற்று வருகின்றன.

கல்வி அதிகாரி திரு. மனோகரன் கோவிந்தராஜா ஓர் ஆங்கிலப் பட்டதாரியும் ஆவார். இளம் வயதிலேயே பாரதநாடு சென்று தமிழ், ஹிந்தி, இந்துஸ்தானி முதலிய சங்கீதங்களில் பாண்டித்தியம் பெற்றவர் இவர் பொதுவாகச் சகல வாத்தியக்கருவிகளையும் திறமையாக வாசிக்கக்கூடிய ஆற்றல் பெற்று உள்ளவர்.

பொதுப்பணி ஒன்றையே தனது வாழ்வில் இலட்சியமாகக் கொண்டுள்ளதாகக் கூறும் இவர் மலையக மக்களின் கலை, கலாச்சாரம் ஆகியவற்றின் முன்னேற்றத்திற்காகத் தனிப்பட்ட இசைக் கல்லூரியொன்று நிறுவ வேண்டுமென்று துடிப்பவர்.

சங்கீதபூஷணம் திருமதி இராஜம் மரியாம் பிள்ளை இலங்கையில் பயிற்றப்பட்ட ஆசிரியையாக வெளியேறிய பின் சென்னை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சென்று அங்கு திரு. தண்டபாணி தேசிகரிடம் 3 ஆண்டுகளாகப் பிரதம சிஷ்யையாக இருந்து வாய்ப்பாட்டுப் பயின்றார். ஆசிரியைத் தொழிலை மேற்கொண்டுள்ள இவரும் இவ்விசை வகுப்புக்களின் ஜீவ நாடியாக விளங்குகின்றார்.

கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் இலங்கை வானொலியில்நடாத்தப்பட்டுவரும் இசைநிகழ்ச்சிகளிலும், நாடகங்களிலும் பங்கு பற்றி வருகின்றார். தாம் பிறந்த கரவெட்டிப் பகுதியிலும் இவ்விசை வகுப்புக்களை இலவசமாக நடாத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

—ஜெயா

## 1969ல் வெளியான தமிழ் திரைப் படங்கள்

சென்ற ஆண்டில் தமிழகத்தில் நாற்பத்தைந்து தமிழ்த் திரைப் படங்கள் வெளியாகின. அவற்றுள் பிரதமபாகமேற்று அதிக படங்களில் நடித்தவர்கள் ஜெய்சங்கர் (13 படங்கள்), ஜெமினிகணேசன்(10 படங்கள்), சிவாஜிகணேசன்(9 படங்கள்). வண்ணப்படங்களின் தொகை ஏழாகும். வெளியாகிய திரைப்படங்களின் பெயர்களாவன:

அன்பளிப்பு, சுபதினம், குழந்தை உள்ளம், தங்க மலர், பால்குடம், மகிழம்பூ சிங்கப்பூர்சீமான், அக்கா தங்கை, ஓடும்நதி, நில்-கவனி-காதலி, தங்கச்சுரங்கம், பொற்சிலை, ஐந்துலட்சம், உலகம்இவ்வளவுதான், அடிமைப்பெண், காவல் தெய்வம், அவரே என் தெய்வம், பூவா தலையா, சாந்தி நிலையம், மனைவி, கண்ணேபாப்பா, குலவிளக்கு, குருதட்சணை, அஞ்சல்பெட்டி:520, துணைவன், ஆயிரம்பொய், மகனே நீ வாழ்க. தாலாட்டு, பெண்ணை வாழவிடுங்கள், நிறைகுடம், துலாபாரம், கன்னிப்பெண், தெய்வமகன் அன்னையும் பிதாவும், நான்கு கில்லாடிகள், பொண்ணு மாப்பிள்ளை, இருகோடுகள், மனச்சாட்சி, திருடன், நம் நாடு, செல்லப்பெண், சிவந்த மண், மன்னிப்பு, வா ராஜா வா, அத்தைமகள்.

தொகுப்பு: சுதந்திரராஜா

## முத்துராமன் காதலி ஜெய்சங்கருடன் ஜாலி

மனைவியை மறந்து, குடும்பத்தை வெறுத்து விஜயலலிதா வீடே தஞ்சம் என்று கிடந்தார், முத்துராமன்!

விஜயலலிதா காதலியாக கிடைத்தது பற்றி முத்துராமனுக்கு தாங்கமுடியாத ஆனந்தம்! இருக்கிற பணத்தையெல்லாம் விஜயலலிதாவிடம் கொட்டி அழுதார்.

இந்த விஜயலலிதா திடீரென முத்துராமனுக்கு ''டிமிக்கி'' கொடுத்துவிட்டு ஜெய்சங்கருடன் ''ஜாலி'' பண்ணத் தொடங்கினார்.

இந்தக் கொடுமையான காட்சியைக்கண்ட முத்துராமன் சீறிப்பாய்ந்தார். ஜெய்சங்கர் கன்னத்தில் அறைந்தார்.

ஆமாம், இந்தக் காட்சி 'கண்ணன் வருவான்' என்ற படத்துக்காக சாரதா படப்பிடிப்பு நிலையத்தில் ஆகப் பட்டது. இப்படத்தை கிருஷ்ணன் டைரக்ட் செய்கிறார்.

## நாடக விமர்சனம்:

## நாகரீகம் தந்த பரிசு!

கொழும் ஹாப்லொக் டவுண் லும்பினி அரங்கில் உதயசூரியன் நாடகமன்றத்தினரால் ''நாகரீகம் தந்த பரிசு'' என்ற சமூகநாடகம் அரங்கேற்றப்பட்டது. வர்த்தகப் பிரமுகர் திரு ஜிவாசிதுரை, மட்டக்களப்பு எம். பி திரு. செ இராசதுரை இருவரும் குத்துவிளக்கேற்றி நாடகத்தை ஆரம்பித்து வைத்தனர்.

கொழும்பில் மேல்நாட்டு நாகரீகபாணிகளிலும் புதுப்புது உடை வகைகளிலும் மயங்கிக் கண்ட ஆடவர் பின்னே சென்று குடித்து வெறித்துக் 'கிளப்' நடனங்களை ஆடி இன்பசுகம் தேடி வரும் பெண்களைப்பற்றிய கதை இது. இவர்களில் ஒருத்தி இறுதியில் தனது நாகரீகத்தின் பரிசாக யாரோ தகப்பன்பெயர் தெரியாத குழந்தையொன்றைப் பரிசாகப் பெறுகிறாள் இன்னொருத்தி தாங்கமுடியாத தோல்வியாதியை (வீ டி. எனலாம்) பரிசாகப் பெறுகிறாள். இதுதான் 'நாகரீகம் தந்தபரிசு' என்ற நாடகத்தின் மூலக்கதை. இன்றைய நாகரீகத்திற்கு மிகவும் தேவையான சமூக சீர்திருத்தக்கதை!

நடிகர்களைப் பொறுத்த வரையில் பொதுவாக நன்றாகவே நடித்தார்கள் என்றாலும் குறிப்பாக நாடகத் தயாரிப்பாளராகவும் அவரது உதவியாளராகவும் நடித்த இருவரும் சிறப்பாகச் செய்தார்கள். என். முத்தையாவும் தமது பாகத்தைச் சிறப்பாகச் செய்தார், மற்றும். காசிம், எம் றயீக். ஜே ஏ. உதயன், பொஸ்கோ, பெர்னண்டோ, எஸ். சந்திரன், பி. எம். சேகர், எஸ். விஜயரட்னம். கே. உதுமான் முத்துராசா, ரஞ்சித் ஆகியோரும் பாராட்டப்பட வேண்டிய நடிகர்களே.

இவர்களில் சிலருக்கு இன்னும்மேடைப்பயிற்சி தேவை. பெண் நட்சத்திரங்களில் வாணிஸ்ரீ, பி. டி. அமுதா, பி, எம். ஜெயா, ருத்-ரமணி, திருமதி ரமணி திரேசம்மா, எல். கலாராணி, பி. ஆர். விஜயா ஆகியோர் சிறப்பாகச் செய்தனர். தாயாராக நடித்த ரமணி - திரேசம்மாவின் நடிப்பு இயல்பாக அமையாமல் வசனத்தைப் பாடமாக்கி அப்படியே ஒப்புவிப்பது போல அமைந்தது. இது திருத்தப்படவேண்டியது.

குட்டி நடிகைகளில் செல்விகள் என். ஜெயராணி, பி லெட்சுமி, பி. மேரிகலாவதி ஆகியோர் சிறப்பாகச் செய்தனர். இவர்களுக்கு நல்ல எதிர்காலமிருக்கிறது.

வசனகர்த்தா வி. ஆர். புரட்சுமணி, தயாரிப்பாளர் என். முத்தையா. இருவரையும் மனதாரப் பாராட்டுகிறேன்.

க. பேரன்

## 'நந்தனார்'

கவின் கலைவளர்ச்சி மன்றத்தினர் யாழ்ப்பாணத்தில் 'நந்தனார்' நாடகத்தை மேடையேற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். பிரமாண்டமான அளவில் தயாரிக்கப்பட்டு வரும் இந் நாடகத்தில் நந்தனாராக சினிமா, நாடக இசைக்கலைஞரான திரு. ஏ. ஆர். ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி நடிப்பார் வேதியராக கலைமணி எஸ். வடிவேலு பாகம் ஏற்கிறார். யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் விரைவில்இந் நாடகம்மேடையேற்றப்படவுள்ளது.

## ராமலிங்கசுவாமிகளாக எம். ஜி. ஆர். நடிக்கிறார்!

புரட்சிநடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் ராமலிங்க சுவாமிகளாக நடிக்கிறார். சின்னப்பாதேவரின் தேவர் பிலிம்ஸார் 'அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை' என விளங்கும் ராமலிங்கசுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றைத் திரைப்படமாக்குகிறார்கள்.

ராமலிங்கசுவாமிகள் வாழ்ந்த இடமெல்லாம் இப் படத்திற்காகப் படம் பிடிக்கப்படும்.

'ஸ்ரண்ட்' படங்களில்மட்டும் நடித்து, சண்டைக் காட்சிகளிலெல்லாம் வெளுத்து வாங்கு வாங்கென்று வாங்கிய எம். ஜி. ஆர். இப்போது சாந்தமே உருவான மகான்களாகத் தோன்றி ரசிகர்களைக் கவரத்திட்டமிட்டுள்ளார்.

கலைஞர் கருணாநிதி வசனம் எழுதும் 'யேசுநாதர்' படத்தில் 'யேசுநாத'ராக எம். ஜி. ஆர். நடிப்பது தெரிந்ததே.

### பின்னணிப் பாடகர் தயாரிக்கும் படம்

பின்னணிப்பாடகர் எஸ். ஸி. கிருஷ்ணன், ஏ. பி. ஜெயசீலன் ஆகியோர் கூட்டாகச் சேர்ந்து ஒரு படம் தயாரிக்கிறார்கள். ஜெய் கமலா மூவிஸ் என்ற பெயரில் தொடங்கி உள்ள இந்தப் படக்கம்பனியின் தொடக்கவிழா நடந்தது.

### சித்திரம் தீட்டுகிறார்!

நடிகை பானுமதி இப்போது ஓர் அருமையான பொழுதுபோக்குவேலை செய்கிறார். அதுதான் அழகான சித்திரங்களை தீட்டுவது. வண்ணக் கலவைகளில் தூரிகையை தடவி அழகானசித்திரங்களைத் தினசரி தீட்டி வருகிறார்.

## இரட்டை வேடத்தில் 'பட்டுமாமி'

'பட்டுமாமி' சௌகார் ஜானகி இரட்டை வேடத்தில் நடிக்கிறார். தனது சொந்தப் படத்திலேயே அவர் அம்மா, மகள் ஆகிய இரட்டைவேடங்களில் நடிக்கிறார்.

நடிகை சௌகார்ஜானகிக்குச் சொந்தமான செல்வி பிலிம்சார் 'மம்தா' என்ற வங்கப் படத்தைத் தழுவி தமிழில் இப்படத்தை எடுக்கிறார்கள். இப்படத்தில் ஜெமினிகணேசன். ரவிச்சந்திரன், லட்சுமி ஆகியோர் பிரதமபாகமேற்று நடிக்கிறார்கள்


## இன்றைய நாடகங்கள் நாடகங்களா?

### உங்கள் கருத்தை எழுதுங்கள்!

'இன்றைய நாடகங்கள் நாடகங்களா' என்று கேட்டு பிரச்னையைக் கடந்த இரு வாரங்களிலும் கிளறியிருந்தார் கலைமணி எஸ். வடிவேலு. தரமான கலைஞர்களால் வளர்க்கப்பட்ட நாடகக்கலை இப்போது 'போலி'க் கலைஞர்களால் அழிக்கப்பட்டுவருவதாக அவர் தனது கருத்தை ஒழிவு மறைவின்றித் தெரிவித்திருந்தார். அவர் ஆரம்பித்துவைத்த பிரச்னையை தொடர்ந்து நீங்களும் எழுதுங்கள் என்று கேட்டிருந்தோம். உங்கள் உள்ளத்தில் படுவதை ஒழிவுமறைவின்றி எழுதுங்கள், ஆணித்தரமாக, ஆதாரபூர்வமாக! உங்கள் கருத்துக்களை மேகலா, 'கலையரங்கம்', ஈழநாடு, த பெ. இல. 49, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரப் பயணம்-2



# சோவியத் வெற்றிகளும் அமெரிக்கத் திட்டங்களும்

"எட்டி நடைபோட வேண்டியகாலம் வந்து விட்டது. நாம் சந்திரனுக்குப் போயாகவேண்டும் என்று நான் நம்புகிறேன்"

**ஜோன் எஃப் கென்னடி**



பத்தாண்டு காலத்துக்குள் அமெரிக்கர் சந்திரனில் இறங்கிவிடவேண்டும் என்று துடியாய்த் துடித்தவர் அமெரிக்க அதிபர் கென்னடி. அவர் திட்டம் நிறைவேறியது; ஆனல் அதை நேரில் பார்க்கக் கொடுத்து வைக்காமல் கொலைகாரன் குண்டுகளுக்குப் பலியாஞர்.

1961, மே மாதம், 25-ம் திகதி அமெரிக்க அதிபர் ஜோன் எஃப் கென்னடி இவ்வாறு அமெரிக்க காங்கிரஸ் சபையில் பேசினர். 'பத்து ஆண்டுகள் கழிவதற்குள்" அமெரிக்கர் சந்திரனை அடைந்துவிடவேண்டும் என்ற தமது திட்டத்துக்கு ஆதரவு தருமாறு அமெரிக்க ஆட்சிமன்ற உறுப்பினர்களை அவர் கேட்டுக்கொண்டார். விண்வெளி ஆராய்ச்சித் துறையில் பின்னடைந்துவிட்ட அமெரிக்க செல்வாக்கை உலக அரங்கில் உயர்த்தி நிறுத்துவதே அவரது அப்போதைய நோக்கம்

சந்திரனில் அமெரிக்கர் இறங்கவேண்டும் என்ற அவரது திட்டம் அரசியல் நோக்கமுடையது என்ருலும் உறுதியான விஞ்ஞான, தொழில் நுட்ப அத்திபாரத்தைக்கொண்டதாகவே அது விளங்கியது என்ருர், ஜோன் எம். லொக்ஸ்டன் என்ற அமெரிக்க கட்டுரை ஆசிரியர்.

**யூரி ககாரின்**

1957-ம் ஆண்டு அக்டோபர் மாதம் சோவியத் யூனியன் விண்வெளிக்கு முதல் தடவையாக செயற்கைக் கோள் ஒன்றை அனுப்பி உலகத்தை வியப்புக்குள்ளாக்கியது. விஞ்ஞான, தொழில் நுட்பத்துறைகளில் அமெரிக்கா முன்னணியில் நிற்பதாக அதுவரையிலிருந்து வந்த கருத்தை இந்தச் சோவியத் ஸ்புட்னிக்-1 ஆளில்லாகலம், சிதறடித்துவிட்டதாக அமெரிக்க மக்கள் கருதத் தொடங்கினர்கள். எனவே இந்த நிலைமையை மாற்றியமைப்பதற்கு அமெரிக்க தலைவர்கள் முடிவு செய்தார்கள். ஸ்புட்னிக்-1 விண்வெளிக்கு அனுப்பப்பட்ட பத்து மாதங்களுக்குள் அதுவரை இயங்கிவந்த வான் பயண இயல் ஆராய்ச்சிக்கான தேசியஆலோசனைக் குழு (National committee-for aeronautics) தேசிய வான் பயண, வெளி வான் ஆராய்ச்சி நிர்வாகக் கழகமாக [நாஸா- Nasa-national aeronautics and space administration] 1957-ல் மாற்றி அமைக்கப்பட்டது.

**யூரி ககாரின்**



வான் வெளியில் சஞ்சரித்த முதல் மனிதர் யூரி ககாரின்; சோவியத் வீரரான இவர், விமான விபத்தொன்றில் மரணமானர்.

1961 ஜனவரியில் ஜோன் எஃப் கென்னடி அதிபராகப் பொறுப்பேற்ருர். அந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் மீண்டும் சோவியத் யூனியன் விண் வெளியில் அற்புத சாதனையொன்றை நிகழ்த்தியது. சோவியத் வீரர் யூரி ககாரின் விண்வெளியில் பூமியை வலம் வந்த முதல் மனிதர் என்ற பெருமையைப் பெற்ருர்.

சோவியத்யூனியனின்இந்த வெற்றி அமெரிக்கர்களை மேலும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது. இதுவே அமெரிக்கா விண்வெளியில் துரிதமான சாதனைகளை நிலைநாட்டுவதற்கு முக்கிய தூண்டுகோலாய் அமைந்தது எனலாம்.

சந்திரனில் மனிதனை இறக்குவதற்கு முன்பதாக பத்தாண்டு காலத்துக்குள் ஏறத்தாழ 10 ஆயிரம் கோடி டாலர் செலவில் ஆளில்லாக் கிரகங்கள்மூலம் ஆராய்ச்சிகள் நடைபெற்றுள்ளன. "நாஸா" மேற்கொண்ட 250க்கு மேற்பட்ட பெரிய ரொக்கட் செலுத்தல் பரிசோதனைகளில் 21-ல் விண்வெளி வீரர்கள் பிரயாணம் செய்துள்ளனர். ஆளில்லா கிரகங்களில் அனேகமானவை காலநிலை, தகவல் தொடர்பு, விஞ்ஞான ஆராய்ச்சிகளில் ஈடுபடுத்தப்பட்டன; இவைகளில் சில சந்திரனையும் இதரக் கிரகங்களையும் ஆராய்வதற்காக அனுப்பப்பட்டவையாகும்.

## விண்ணில் பறந்த முதல் அமெரிக்கர்கள்

விண்ணில் பறந்து ஆராய்ச்சியில் ஈடுபட்ட முதல் அமெரிக்கர்கள் மேர்க்குரி விண்வெளிக்கலங்களில் அனுப்பப்பட்டனர்.

1961 மே 5-ம் திகதி மேர்க்குரி ரெட்ஸ்டோன்-3 விண்கலத்தில் அலன் பி செப்பர்ட் என்பவர் விண்வெளிக்கு அனுப்பப்பட்டார்.

விண்வெளிக்குப் பிரயாணம் செய்த முதல் அமெரிக்கர் இவரே. பூமியைச் சுற்றிய அரைவட்டப் பாதையில் இவர் 15 நிமிடங்கள் விண்ணில் சஞ்சரித்தார். 1961 ஜூலை 21ல் மேர்க்குரி ரெட்ஸ்டோன்-4 கலத்தில் வேர்ஜில் ஐ கிறிஸன் விண்வெளிக்கு அனுப்பப்பட்டார். இவர் எடுத்த நேரம் 16 நிமிடங்கள்.

1962 பெப்ரவரி 20-ம் திகதி ஜோன் எச் கிளென் என்பவர் மேர்க்குரி அட்லஸ் 6 விண்கலத்தில் பூமியைச் சுற்றிய பாதையில் மூன்று முறை வலம் வந்தார். பூமியை முழுவட்டமாக வலம் வந்த முதல் அமெரிக்கர் இவரே- இவர் விண்ணில் இருந்த நேரம் 4மணி 55 நிமிடங்களாகும்.

1962 மே 24-ந் திகதி மேர்க்குரி அட்லஸ் 7 செலுத்தப்பட்டது. இதில் எம். ஸ்கொட் கார்ப்பென்டர் என்பவர் பூமியைச் சுற்றிய பாதையில் மூன்று முறை வலம் வந்தார், இவர் எடுத்தநேரம் 4மணி 56 நிமிடங்கள்.

மேர்க்குரி அட்லஸ்8-1962 அக்டோபர் 3-ம் திகதி செலுத்தப்பட்டது. இதில் வோல்ட்டர் எம். ஸ்சிரா என்பவர் பூமியை ஆறு தடவைகள் சுற்றி வந்தார். இவர் விண்ணில் பிரயாணம் செய்தநேரம் 9மணி 13 நிமிடங்கள். குறிக்கப்பட்ட இடத்துக்கு 5மைல் தொலைவில் இவர் பூமியில் வந்து இறங்கினர். மேர்க்குரி அட்லஸ்-9கலம் 1963-ம் ஆண்டு மே மாதம் செலுத்தப்பட்டது. இதில் எல். கோர்டன் கூப்பர் என்பவர் 22 தடவைகள் பூமியை வலம் வந்தார். இவர் எடுத்தநேரம் 3½ மணி 20நிமிடங்கள். விண்வெளியில் அதிகநேரம் சஞ்சரித்த முதல் மனிதர் என்ற பெருமை இவருக்குக் கிடைத்தது.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட மேர்க்குரி ஆய்வுத் திட்டங்கள் அமெரிக்க விஞ்ஞானிகள் அடுத்தாற்போல் மேற்கொண்ட ஜெமினி விண்வெளி ஆராய்ச்சிக்கு உறுதியான அத்திவாரமாக அமைந்தன. ஆரம்பமுதலே அமெரிக்க விஞ்ஞானிகள் மேர்க்குரி ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து வேறு ஒரு முயற்சியை மேற்கொள்வது பற்றி ஆராய்ந்து வந்தனர்.

அதிபர் கென்னடி 1961 மேமாதம் சந்திரனில் மனிதனை இறக்குவதற்கு அமெரிக்கா முடிவு செய்துவிட்டதாக விடுத்த அறிவித்தலின் பின்னர் ஜெமினி திட்டம் சூடு பிடித்து இயங்கத் தொடங்கியது.

1994 ஏப்ரல் மாதத்திலும் 1965 முற்பகுதியிலும் இரு ஆளில்லா ஜெமினி கலங்கள் விண்வெளிக்குச் செலுத்தப்பட்டன. விண்வெளிக்கலங்களைப் பரிசோதிப்பதற்காகவே இவை செலுத்தப்பட்டன.

[வளரும்]

---

## "பி. ஏ. படிக்கிறன், கண்டியிலே ஆச்சி"

புத்தகத்தைத் தூக்கிப் பிரிக்கின்றேன், ஏன்படிப்பு?
எத்தனை இரவுகளாய் ஏனிந்தக் கண்விழிப்பு?
எறிகிறேன் புத்தகத்தை எரிகிற துள்ளம்.
எறிகிருர் கல்லை, எழுகிறது போராட்டம்.
கேட்கிருர் வசதிகளைக் கிடைத்தாலு மென்னபயன்?
நோக்கமே கிட்டலையே. நுண்ணறிவு கிடைக்கிறதா?
சிலம்பும் மேகலையும் சிந்தை கவருந்தான்.
இடையிலொரு பரீட்சை இருந்தன்ருே தொலைக்கிறது.
சுவைத்தா படிக்கின்ருேம் சொல்லிவிட்டால் வினவை,
விடைமட்டும் படித்தபின் விட்டெறிவோம் புத்தகத்தை,
பட்டம் கிடைத்ததுமே பறந்திடுமே படித்தவையும்.
கோயிலுக்குப் போகின்றேன். கோபுரத்து வாசலிலே
குசலம் விசாரிக்கக் கூடுகிருர். அம்மம்மா!
"தங்கச்சி இப்ப வீட்டிலே தானிருக்கோ?"
பொங்குகிற கோபத்தைப் பொறுமையாய் அடக்குகிறேன்.
"இல்லையணை ஆச்சி, இப்பநான் படிக்கிறன்."
"எங்கையடி பிள்ளை? என்ன படிக்கிருய்?"
'பி. ஏ. படிக்கிறன். கண்டியிலே ஆச்சி"
கொடுப்பிற்குள் மறைந்தொரு கொடுஞ்சிரிப்பு வெடிக்கிறது.
குசுகுசென் ருெருபேச்சுக் குறுகிநிற்கச் செய்கிறது.
விடுவிடென்று நான்திரும்பி வீட்டுக்கு ஓடுகின்றேன்.
என்ன படிப்புஇது? எதற்காகப் படிக்கின்றேன்?
பின்னரெத்ற் காயினும் பிரயோ சனமுண்டா?
வறட்டுக் கௌரவத்தால் வாடுதற்கா இப்படிப்பு¿
அறிவு வளர்கிறதா? ஆக்க மிருக்கிறதா?
புரியவில்லை ஐயோ? புரிகிறதா பெரியோரே?

— [illegible]

---

## கோழைகள்

கோழைகள் தம் வாழ்வில் பல முறை செத்துக்கொண்டிருப்பர். ஆனல் மனத்தைரியம் உடையவர்கள் வாழ்வில் சாவு அவர்களை ஒரு முறைதான் சந்திக்கும்.

[செகசிற்பியர்[

---

## தொழில் வளர 9 வழிக...

1. ஒரு தொழிலின்வெற்றி முதலில் எதைத்தேர்... தெடுத்திருக்கிருேம் என்பதைப் பொறுத்தது. எ... தத் தொழிலைத் தேர்ந்தெடுத்தால் வெற்றி பெ... லாம் என்று முடிவுசெய்வதில் முதல் கவன... செலுத்துங்கள்.

2. எந்தத் தொழில் செய்தாலும் வாடிக்கை... காரனைத் தெய்வமாக நினையுங்கள்.

3. உங்களைவிடக் கீழ்நிலையில் உள்ளவர்களி... தொழில் நிலையோடு உங்கள் நிலையை ஒப்பிட்டு... பார்த்துக்கொண்டு ஆறுதல் அடையாதீர்கள். ந... மைக் காட்டிலும் மேலாக இருப்பவர்கள் எப்ப... உயர்ந்தார்கள் என்று சிந்தனைசெய்யுங்கள்.

4 தோல்வியைக்கண்டு மிரளாதிருப்பதுட... தோல்வியின் விளைவுகளினல் உண்டாகும்படிப்... னையை ஆராய்ந்து செயற்படுங்கள்.

5. உங்கள் நிறுவனத்தில் எவரையும் முக்கி... மானவர் அல்ல என்று நினைக்காதீர்கள்.

6. நிறுவனத்தின்மீது பொதுமக்களுக்குள்ள ந... பிக்கையை அதிகரிக்கச்செய்வதில் கவனம் செலு... துங்கள்.

7. கடன் கொடுப்பவர்களுக்கு வாக்குத் தவ... மல் பணத்தைத் திருப்பித் தருவதையே முத... கடமையாக நினையுங்கள்.

8. கடன்வாங்கிச்செலவுசெய்யாதீர்கள். ஆ... செலவைக்கண்டு மலைக்கவேண்டாம். அதற்கு ஏ... ருற்போல வருவாயை அதிகரிக்கும் வழிகளைச் சி... தனைசெய்து செயற்படுங்கள்.

9. தொழிலாளர்களிடம் எப்போதும் நியா... மாக நடந்துகொள்ளுங்கள் அவர்களுக்கு அதிக... கொடுத்துவிட்டோம் என்று நினைக்கவே நினைக்க... தீர்கள்.

---

## ஆவி உ...

## நீதி வா...

'ஈழநாடு' வாரம... தொடர்ந்து வெளி... வரும் விண்ணகத்தொ... பான பேச்சுகளை வாசி... எமக்கு இதன் உண்... தன்மையை அறிய ஆ... ஏற்பட்டது. அதே சம... முடியுமாயின் 23-11-6... தனது பூவுலக வாழ்... முடித்துக்கொண்ட தன்னையாருடன் - மீரி... துள்ள செல்வி வித்... அவர்களை மீடியமாகவு... பேசும் பலகை வாயி... பேசிப்பார்க்கவே ... மென்ற ஆர்வமும் ஏ... டது. முயற்சித்தேன். தொ... பேசிமூலம் (803-மீரிசு... உயர்திரு. க... ணிக்... சகருடன் தொட... கொண்டு 25-12-69-ல் ... கமத்தில் நேரடியா... சென்று பேச அவ... அனுமதிபெற்றேன்.

25-12-69 மாலை தொ... கம் இரவு 11 மணி ... யும், பின்26-12-69 ல் ... 9 மணி முதல் இடை...

**இ. ஆ. ச...**
தல...

விட்டு பல மணிநேர... வும் எம்மைத்தெரிந்த ... ஆவிகளுடனும், தெரி... பல மேதைகளுடனும் ... குவாக சம்பாஷிக்க... தது பெரிதும் போற்ற... வேண்டிய தெய்விக அ... மேயாகும். வாழ்க! திரு... மாணிக்கவாசகர். அவர்... சிறக்க

சிறந்த புண்ணிய ... மாக அமைந்துள்ள ... வித்தகம் அவர்கள் ... விரைவாக, ஆற்றல் ... தட்டச்சுக்காரரின் வே... லும் பார்க்க தகவல்... பலகை மூலம் தெரிவி... தெய்வாம்சத்துடன்கூ... நூதனமாகும். இவரு... செயல் ... ய்விகமா...

எமதன்னையாரைப் ப... டன்வேண்டி, பலகை மு... அமர்ந்ததும் "ஆசீர்வா... உனது தாயார் ஐய... கைலாயத்திலிருந்து ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...வி உலக சம்பாஷணை கடவுள் நம்பிக்கையையும் ...வாழ்வையும் வளர்க்கின்றது

வாரமலரில் / வெளியாகி / கத்தொடர் / வாசித்த / உண்மைத் / றிய ஆவல் / தே சமயம் / 23-11-66-ல் / வாழ்வை / ட எம / - மீரிகமத் / வித்தகம் / யமாகவுள்ள / வாயிலாக / வேண்டு / மும் ஏற்பட் / தேன். தொலை / 03-மீரிகமம்) / ணிக்கவா / தொடர்பு / 12-69-ல் மீரி / டியாகச் / அவரிடம் / றன். / லை தொடக் / மணி வரை / 2-69 ல் பகல் / இடையீடு

பேசுகிறேன், எனது பெயரப்பிள்ளையும் வந்துள்ளானு! நன்று'' என்று பலகைமூலம் தெரிவிக்கப்பட்டது. நிற்க,

எனது தாயார் - ஐயாச்சி க்காசி உட்படப்பல தலங்களுக்கும் யாத்திரை செய்தவர். தெய்வம் என்ற சித்தமுண்டாகி அவவுக்கு தெய்வீக வாழ்க்கை கைவந்திருந்ததுண்மையே. தன் துகுல தெய்வத்தை அபிடேகித்த தீர்த்தத்தைப்பருகிய பின்பு சிவத்தியானம்செய்தபடியே பூவுலக வாழ்வை நீத்த ஒருவர் கைலாயத்திலிருந்து பேசும் பலகைமூலம் தொடர்புகொண்டு கதைப்பதாயின் மகிழ்ச்சிப்பேறு ஏற்படுமல்லவா. நாம் ஆனந்த பரவசப்பட்டோம்.


அப்போது பக்கத்திருந்த 'இந்துசாதனம்' இதழொன்றினை வாசிக்குமாறு வேண்டுகோள் விட்டார். வாசித்தோம். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்களே தனது எழுத்தை நயந்தார்.

தன் தாத்தாவுக்குப் பணிவிடைசெய்துகொண்டிருக்கும்போது அவர் கையைத் ''திடீர்'' என்று கடித்துவிட்டான். அவரோ 'ஆ' என்று கத்தினர். டேய்! நீ அந்தப்பக்கம் போடா. நீ எனக்கு வேலை செய்தது போதும். நீ ஒரு குரங்கு. பேன் பார்த்தாலும் பார்ப்பாய். காதை அறுத்தாலும் அறுத்துவிடுவாய் என்று அவனை வைதார். அவனும் ''வெய்—வே'' என்று தாத்தாவுக்கு அழகு காட்டிவிட்டு விளையாட ஓடினன். அவன் தாத்தாவின்கையைக் கடித்தது, ஏன் தெரியுமா? அவனுக்கு ஒழுங்காகப்பணிவிடை செய்ய சோம்பேறித்தனமாகவிருந்தது. விளையாடவிடாமல் இந்தக்கிழம் என்னைப் பாடுபடுத்துகிறதே என்று நினைத்தான். அவனுக்கு அப்படித்தோன்றும் நேரமெல்லாம் இப்படியே குறும்புசெய்துவிட்டுஓடிவிடுவான். இன்று கையைக் கடிப்பான். அல்லது 'கிச்சு கிச்சு'மூட்டுவான், அல்லது தாத்தாவின் மூக்குக் கண்ணடியைக்சுழற்றுவான், அல்லது அவர் வாசிக்கும் புத்தகத்தைப் பிடுங்குவான் இப்படி அவன் செய்வது அவன் தாத்தாவுக்கு பிடிக்கவே பிடிக்காது. அவர் அவனை 'டேய்' நீயும் ஒருநாள் தாத்தாவாகத்தான் போகிருய். அன்று உன்னுடைய பெயரப்பிள்ளையும் உன்னை இப்படிச் சீண்டுவான் என்று சபித்துக் கொண்டேயிருப்பார்.

## ...சுப்பிரமணியம்

தலைமை ஆசிரியர், பரந்தன்

ணிநேரமாக / தெரிந்த பல / தெரியாத / டனும் இல / ஷிக்கமுடிந் / பாற்றப்பட / விக அதிசய / ழ்க! திரு. க / ர். அவர்பணி / ணிய மிடிய / ள்ள செல்வி / ர்கள் அதி / ற்றல் மிக்க / ன் வேகத்தி / தகவல்களை / தெரிவிப்பது. / டன்கூடிய / இவருடைய / கமாது. / ரைப் பணிவு / லகை முன்பு / ஆசீர்வாதம்! / ஐயாச்சி / ந்து வந்து



ஸ்ரீலஸ்ரீ
ஆறுமுகநாவலர்

நாவலர் அவர்களின் நீதிவழியைப் பற்றிப் பாராட்டிப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்கள் எழுதிய உரை, சித்தாந்தநெறி பற்றி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் எழுதிய சுருக்கம் என்பன படித்துக் காண்பித்தோம். ஸ்ரீலஸ்ரீ நாவலர் அவர்கள் பண்டிதமணியைப் பேசும் பலகைமூலம் ஆசிர்வாதம்செய்து பாராட்டினுர். பண்டிதமணியைப் போல இன்னும் பலர் முன் வந்து அவரைப்போல சேவைபுரிய வேண்டும், எழுதவேண்டுமென்று கூறினுர்.

தன்னுடைய பெயரப் பிள்ளை செல்வன் சு. குமாரமூர்த்தியைக்கொண்டு 'வாக்குண்டாம்' பாட்டுகளைப் பாடச்செய்து ஆசீர்வதித்துப்பாராட்டிய அன்னை ஐயாச்சி அவர்கள் பெயரப் பிள்ளைக்கு பலகைமூலம் காந்தித்தாத்தா கூறியது போல ஒருகதையும் கூறினுர். அது சகல சிறுவர்களுக்கும் பயன்படுமல்லவா? ஆகவே இக்கதை பலகை மூலம் தெரிவிக்கப்பட்டபிரகாரம்படத்துடன்இணைக்கப்பட்டுள்ளது.

### பெயரப்பிள்ளை குமாரமூர்த்திக்கு பாட்டி ஐயாச்சி கூறிய கதை

ஓர் ஊரில் ஒரு கிழவன் இருந்தான். அவனுக்கு உன்னைப்போல் ஒரு பெயரப் பிள்ளை இருந்தான். அவன் பெயர் கந்தன். மகா குறும்புக்காரன். ஒருநாள் அவன்

அப்போதெல்லாம் அவன் அவருக்கு ''வெவ்வே'' என்றுஅழகுகாட்டிவிட்டுஓடிவிடுவான். அவர் மட்டும் சபித்துக்கொண்டேயிருந்தார். அப்படியே அவனும் ஒருநாள் தாத்தாவாகினுன். அவனுடைய பெயரப்பிள்ளை முருகன் மிகவும்பொல்லாதவன் அவன்-அவர் தனக்கு காற்று வீசச் சொல்லும் போது-அவனுக்கு சோம்பேறித்தனமாகவிருக்கும். அதனுல் அவன் விசிறி தாத்தாவின் மேல் உராயுமாறுவீசுவான். அவர் அங்கும் இங்கும் பார்க்கும்போது நிமிண்டிவிடுவான் அல்லது அவர் காதுக்குள் ஏதாவது புல்லைப் போடுவான். அவர் கத்தினுல் 'இல்லைத்தாத்தா உன் காது கேட்கவில்லை என்றுயே பூட்டியிருக்கும் கதவைத் திறந்தேன்' என்பான். அவருக்கு ஒருவாரம் காதுக் குடைச்சல் ஏற்படும். அவர் தூங்கும்போது வாயில் பாச்சா பிடித்துவிடுவான். அவர் பதறி எழுந்தவுடன் ''ஐயா பாவம் கிழம்'' என்று தாளத்தோடு பாடுவான் அல்லது அவர் வாயில் துணியைப் பந்துபோல் உருட்டித்திணிப்பான். அவர் நாற்காலியில் சாய்ந்திருக்கும் போது அவருக்குத்தெரியாமல் அவர் வேட்டியில் ஒரு நாரைக்கட்டி அதை நாற்காலியோடு சேர்த்துக் கட்டிப்போடுவான். அவர் விழித்து எழுந்திருக்கும் போது தடிக்குக் கீழே ''தமார்'' என்று விழுவார். அவன் அதைப் பார்த்துக் கைகொட்டிச் சிரிப்பான். இப்படி முருகன் தன் தாத்தாவுக்கு பல குறும்புகளைச் செய்து தொந்தரவு பண்ணுவான். அப்போதெல்லாம் தன் தாத்தா முன்புசபித்துக் கொண்டதைப் போல் நடந்தே விட்டது என்று பொருமி வருந்துவான். தன் தாத்தாவுக்கு ஒழுங்காகப் பணிவிடை செய்யாது என் குறும்புத்தனத்தையேதான் அவரிடம்போய்க்காட்டியது

எவ்வளவு தவறு என்று நினைத்து நினைத்து அழுதான். பின்இப்போது அழுது என்ன பிரயோசனம் என்று நினைத்துக்கொள்வான்.

முக்கால்துட்டுக்கொடுத்து மூக்கை அறுத்த பின்பு மூவாயிரம் ரூபா கொடுத்து ஒட்டிக்கொள் என்றுல் ஒட்டுமோ?

தன்வினை தன்னைச்சுடும் என்பதுதான் உண்மையாயிற்று என்று வருந்தினுன். அதை வாய்விட்டும் சில சமயம் கூறுவான். அப்போது-முருகன்-இப்போது அழுது-என்ன தாத்தா பண்ணுவது என்று கைகொட்டிச்சிரிப்பான். இதனுல் கந்தன் தன் பெயரப்பிள்ளை முருகனே தன்னருகிலேயே வரவிடாமல் கவனித்துக் கொள்வான். இப்படி வயதான காலத்தில் மிகவும் துன்பப்பட்டான்.

இளம் ஓலைக்குருத்து பச்சை ஓலையைப் பார்த்துச் சிரித்ததாம். -என்று நினைத்து வருந்தினுன். தன்வினை தன்னைச்சுட்டது. கதையும் முடிந்தது. கத்தரிக்காயும் காய்த்தது.

அதனுல்-என் பெயரப் பிள்ளையே நீ அறிவது உன் குறும்புத்தனத்தை பெரியவர்களிடம்காட்டப்படாது. அவர்களுக்கு பணிவோடும் பொறுமையோடும் பணிவிடை செய்ய வேண்டும். உன் குறும்புத்தனத்தைக காட்டினுயோ பிறகு கந்தன் கதிதான் உனக்கும்!

உன் பெயரப்பிள்ளை உன் வாயில் துணியைத் திணிப்பதுமல்லாமல் உன் மூக்கிலும் துரும்பை விடுவான். அதனுல் நீ யாக்கிரதையாக இருந்துகொள். அதற்காகத்தான் இந்தக்கதையை உனக்குச் சொன்னேன். கதையை மறக்காதே. கதையின் பெயர்-தன்வினை தன்னைச்சுட்டது. இதை உன் தோழர்களுக்கும் சொல்லு. பெரியவர்களிடம் சிறியவர்கள் எப்போதும் மரியாதையுடன் இருக்க வேண்டும். அதற்குத்தான்இந்தக்கதை.

25-12-69 அன்று ஐயாச்சியவர்கள் தனது பெயரப் பிள்ளை சு. குமாரமூர்த்திக்குச் சொன்ன கதை இந்தக் கதையை பலகை மூலம் கூறிய ஐயாச்சி 25-11-69ல் மறைந்தவர்.

## ...ழிகள்

த்தேர்ந் / தது. எந் / ற்றி பெற / கவனம் / டிக்கைக் / வர்களின் / ப்பிட்டுப் / கள். நம் / ர் எப்படி / கள். / ப்பதுடன் / ம்படிப்பி / முக்கிய / ள்ள நம் / ம் செலுத் / த் தவறு / முதல் / . ஆனல் / தற்கு ஏற் / களைச் சிந் / நியாய / அதிகம் / நினைக்கா

# தெரிந்த மொழியில் இறைவழிபாடு பெரும் பயன் தரும்

''இறைவன் உலகத்தலைவன். எல்லா உயிர்களுக்கும் மேலானவன்... உயிர்களுக்குத் தெரிந்த மொழி இறைவனுக்குத் தெரியும் ஆனல் இறைவனுக்குத் தெரிந்தமொழி உயிர்களுக்குத் தெரியாது உயிர்கள் தமக்கும் இறைவனுக்கும் தெரிந்த மொழியில் வழிபாடு செய்தல் பெரும்பயனைத்தரும் · வழிபாடு அல்லது அர்ச்சனை என்பது ஓர் உயிர் இறைவனை நோக்கி அழுகின்ற அழுகையேயாம். எல்லோர்க்கும் தாய்மொழியில் தான் புலம்பி அழமுடியுமே தவிர பிறமொழியில் அழமுடியாது.''

தமிழர்தம் சமய வாழ்க்கை காலத்தால் மூத்தது முன்னைப்பழம் பொருட்டு முன்னைப்பழம் பொருளாயும் பின்னைப் புதுமைக்குப் பெயர்த்தும் அப்பெற்றியதாயும் இலங்குவது. கடவுளைத்தம் வாழ்க்கை முதல்வராகக் கருதி அவருடைய திருவடி நீழலை நினைந்து நினைந்து -இறைகளோடு இயைந்த இன்பத்தையும் இன்பத்தோடு இயைந்தவாழவையும் மேற்கொண்டு ஒழுகியவர்கள்

நம் தமிழ்ப் பெருங்குடி மக்கள்.

தமிழ்நிலத்தை நான்கு வகையாகப் பகுத்து ஒவ்வொரு நிலத்திற்கும் ஒவ்வொரு கடவுளரைத் தலைவராக்கி வழிபாடு செய்துவந்தனர் என்பதை,

மாயோன் மேய
காடுறை உலகமும்
சேயோன் மேய
மைவரை உலகமும்
வேந்தன் மேய
தீம்புனல் உலகமும்
வருணன் மேய
பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம்
நெய்தல் எனச்
சொல்லிய முறையாற்
சொல்லவும் படுமே.

என்னும் தொல்காப்பியப் பொருளதிகாரச் சூத்திரம்

இறைவனை அவரவர் தாய்மொழியின் வழியேதான் அணுகமுடியும். அதுவே அகங்கலந்த அனுபவத்திற்கும் வழிபாட்டிற்கும் பொருத்தமுடையதாகும். ஆயிரம் ஆண்டுகட்குமுன் நடைமுறையிலிருந்த அணுகலும் அனுபவமும் வழிபாடும் அதுவேயாகும். அகங்கலந்த வழிபாட்டிற்குதில்லை நடராஜரிடம் தவம்செய்து வழிகேட்ட சிவாலய முனிவருக்கு -தில்லைக்கூத்தன் பொதியமலை அகத்தியரிடம் சென்றுயானுல் உன் கருத்து நிறைவேறும் என்றுர். அப்பனின் விருப்பப்படிசிவாலய முனிவர் பொதியமலை சென்று அகத்தியனுரைக் கண்டுபெற்ற அகங்கலந்த வழிபாட்டு முறையே அகத்

## புலவர் ஈழத்துச் சிவானந்தன்

நற்பொறுப்பாளர், நால்வர் நன்னெறித் திருமடம்,
புங்குடுதீவு.

ஒன்றில் அறிகிறேம். நால்வகைநிலங்களின் கடவுளரில் தென்னுடைய சிவனது பெயரைக் காணேம் -காரணம் என்ன?எந்நாட்டவர்க்கும் இறைவனுகிய தென்னுடைய சிவன் நால்வகை நிலங்களுக்கும் உரியவன்-பொதுவானவன் என்னும் எண்ணத்தில் குறிப்பிட்ட ஒரு நிலத்திற்கு மட்டும் தலைவனுகக் கருதப்படவில்லை-எனக்கொள்ளவேண்டும். நிலங்களின் தலைவர்களாகிய கடவுளர்களை அந்தந்த நிலத்து மக்கள் மனங்கலந்து வழிபாடுசெய்தனர். இடைவிடாது இறைவனின் திருவடிகளை வாழ்த்தி வணங்கி நிலத்தின்கண் நீடு வாழ்ந்தனர்.

மலர்மிசையேகினுன்
மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ்வார்.

என்னும் திருவள்ளுவர் வாக்கு இங்கு நினைக்கத்தக்கது. மாணடி சேர்தல் என்பதற்கு இடைவிடாது நினைத்தல் எனப்பரிமேலழகர் பொருள் கூறினுர்.

இதயத்தின் வேலையே நினைத்தல் என்பது. இதயம் இயற்கை வழியும் இயல்பு வழியும் இயங்குவது. ஒரு மனிதனின்இதயம்மானிடத்தின் இயற்கை வழியும் இயல்புவழியும் இயங்காது போனுல் அவன் ஐயப்பாட்டுக்கு இலக்காகிருன் அது மட்டுமல்ல, மக்களே போல்வன் என்ற கூற்றுக்கும் உடந்தையாகிருன். ஆதலால் இயற்கைவழியும் இயல்புவழியும் இயங்கியே மனிதன் தனது குறைகளை நீக்கி நிறைவு காண்கிருன்.

மனிதன் சிற்றறிவினன் ஆதலால் பேரறிவாளனுகிய இறைவனிடம் தனது குறைகளை நீக்க வேண்டுகிருன். வேண்டப்படுவதை அறியும் இறைவன் குறைவுடைய மனிதனுக்கு நிறைவுகொடுக்கிருன். குறைவை-இல்லாமையை இறைவனுக்குச் சொல்ல சிந்தனை, சொல், செயல் தேவைப்படுகிறது

சிந்தனை நின்தனக்கு ஆக்கி என்றும், வாக்கு உன் மணிவார்த்தைக்கு ஆக்கி என்றும், வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கிஎனவும்கூறி மணிவாசகப் பெருமான் நுகர்ந்தமை நோக்கத்தக்கது. இம்மூன்று நிலைகளின் செயற்பாட்டிற்கு மனிதனுக்கு மொழி தேவைப்படுகிறது மொழியின் வழியே சிந்தனை, சொல், செயல் முதலியன இலகுவாக நடந்தேறமுடியும்.

தியர் தேவாரத் திரட்டாகும். அகத்தியர் தேவாரத் திரட்டிலே அர்ச்சனைக்கென தொகுக்கப்பட்ட பாடல்களையும் நாம் காணமுடிகிறது.

இறைவன் நம்முடைய தாய்மொழியாம் தமிழில் அளவற்றகாதலுடையவன். சேக்கிழாருக்கு பெரிய புராணம் இயற்ற உலகெலாம் என்று அடியெடுத்துக் கொடுத்தான். மணிவாசகரின் திருவாசகத்தைத் தானே தன் கைப்படஎழுதினுன் தமிழ்ப்புலவனுக அமர்ந்து தமிழைஆராய்ந்து கவிதையும் யாத்துள்ளான். உமாபதிசிவாச்சாரியாருக்கு கொடுத்த சீட்டும் தமிழிலே தான். ஆடுகின்ற அம்பலத்தரசு தென்றுலமிழ்தும் தென்தமிழும் அனுபவிக்கும் வேட்கையிலேயே தென் திசைநோக்கி ஆடுகின்றுன். தென்திசைநோக்கி நகர்ந்து மிதிக்கிருன். சைவநாயன்மார்கள் பாடியபாடல்களைக்

[12- ம் பக்கம் பார்க்க]

## வரப்பெற்றேம்

நூல்:யோகி (சஞ்சிகை)
ஆசிரியர்-நக்கீரன்
விலை - சதம் 55

இலக்கிய விஞ்ஞானசோதிடக்கலை ஏடான 'யோகி' சஞ்சிகையின் மூன்றுவது இதழ் மகாத்மா காந்தியடிகளின் நூற்றுண்டு விழாவையொட்டிச் சிறப்பு மலராக வெளிவந்துள்ளது.

சிறப்பு மலரான இச் சஞ்சிகையில் அண்ணல் காந்தியின் வாழ்க்கையின் சில அம்சங்கள் கற்போர் மனதினின்று அகலாதவாறு இரத்தினச்சுருக்கமாக சுவைபடக் கூறப்பட்டுள்ளன. உதாரணமாக இச்சஞ்சிகையின் சிறுவர் மலரில் இடம் பெற்றுள்ள காந்தியடிகளின் மாணவப்பராய பழக்கவழக்கங்கள் மாணவர்கள் சமுதாயம் குறைகளை வையென அறிந்து அவற்றைக் களைந்து நல்லொழுக்கமுள்ளவர்களாக வாழ வழி வகுப்பன- அண்ணலின் இவ் இளம் பிராய அனுபவங்கள் தனித்தனியாகத் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. இச்சஞ்சிகையின் 'சிறுவர்மலர்' வாசகர்களுக்குச் சிறந்த வரப்பிரசாதமாக அமையும்.

மற்றும் இச் சஞ்சிகையில் இடம் பெற்றுள்ள காந்தியடிகள் பற்றிய கட்டுரைகளும் ஜோதிடக்கலைஞர்கள் பலரது கருத்துக்களும் வாசகர்கள் கருத்தைக் கவரத்தக்கவைகளாகவுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனினத்தின் வியத்தகு வாழ்க்கைப் போராட்டம்

— கி. அல்பேட் பங்கிராஸ் —

**மீனினத்தின்வாழ்க்கைதான் எவ்வளவு சுவையானதும், பயங்கரமானதும்கூட! மனிதர்கள் மட்டுமா அவைகளுக்கு எதிரிகள், இல்லை அவைகளின் இனமே அவைகளுக்கு பெரும்எதிரிகளாகஉள்ளன. எல்லாவற்றிலிருந்தும் தப்பி தம்மினத்தை அவை எப்படி விருத்தி செய்கின்றன என்பதை ருசியான இக்கட்டுரை விளக்குகிறது.**

இப்பரந்த உலகில் எண்ணற்ற உயிரினங்கள் வாழுகின்றன. ஒவ்வொரு உயிரினத்திற்கும் அவற்றை அழிப்பதற்கு ஒவ்வொருஇன எதிரிகள் இருக்கத்தான் செய்கின்றன. இப்படி இல்லாவிடின் இப்பரந்த பாரில் ஒருவேளை பூச்சியினங்கள் மனிதனை ஆக்கிரமித்து விடும். அல்லது பறவையினங்களோ, அன்றில் ஊர்வனவோ உலகைத் தங்களது ஆட்சிக்குள் கொண்டு வந்துவிடும். இப்படியேமீனினமும் எதிரிகள் இல்லாவிடின் கடலையே ஆக்கிரமித்து அப்பாலும் சென்றுவிடும். இதனாலேயே ஒருகல உயிரினமாகிய அமிபாவிற்கும், உயர்ந்த கட்டத்தில்இருக்கும் மனிதனுக்கும் எதிரிகள் இயற்கையாகவே அமைந்துள்ளன.

மேற்கூறிய காரணங்களினாற்றான் மீனினமும் தனது இனத்தை எதிரிகளிடமிருந்து காப்பாற்றி விருத்தி செய்வதற்குப் பல விநோத முறைகளைக் கையாளுகின்றன மீன்இடும் முட்டைகள் பெரியமீன்களுக்கு உணவாக அமைவதாலும், சில முட்டைகள் தவறி குஞ்சு பொரிப்பினும் அச்சிறியமீன்கள் பெரிய மீன்களுக்குச் சிறந்த உணவாக அமைவதாலும் அவற்றின் விருத்தி கட்டுப்படுத்தப்படுகிறது. ஆதலால் இவைகளில் நின்றும் தப்புவதற்கு மீனினங்கள் கையாளும் சில யுக்திகளைச் சற்றே ஆராய்வாம்.

**ஆண்வாயில் முட்டையிடும் பெண்மீன்**

'ஏரயுஸ்' என அழைக்கப்படும் ஒருவகை பெண்மீனனது தனது முட்டைகளை (ஆண்)மீன் வாயில் இடுகின்றன, (ஏறக்குறைய 20-30 வரை ஒரேமுறையில் இடும்) முட்டைகள் பொரிப்பதற்கு ஏறக்குறைய 10 நாட்கள் வரை செல்லும். அதுவரை அம்மீனனது உணவு உட்கொள்ளாமல் வாயைத் திறந்தபடியே உபவாசமிருந்து எதிரிகளிடமிருந்து தனது இனத்தைப் பாதுகாக்கிறது.

**வயிற்றுப்பையில் முட்டையைப் பாதுகாக்கும் ஆண்மீன்**

விலங்குகளிலே விநோதமானதென கூறப்படும் கங்காரு எப்படித் தனது குட்டியை வயிற்றுப் பையில் வைத்துப் பாதுகாக்கின்றதோ அப்படியே ஹிப்போகம்பஸ்' என்றழைக்கப்படும் (குதிரைமீன் மீனினமானது முட்டைகளை ஆண்மீனின் உடலினுள் இணைந்துள்ள ஒருபையினுள் சுமந்து பொரிக்கும்வரை பாதுகாக்கின்றது.

**கடல் அசைவிலிருந்து முட்டைகளைப் பாதுகாக்கும்மீன்**

புலிச்சுறு என அழைக்கப்படும் 'ஸ்ரெகொஸ்ரோமாஸ்ரிஇரினம்' என்னும் பெண்மீனனது ஒருபையினுள் முட்




டைகளை இட்டு, அப்பையிலுள்ள கயிறுபோன்ற உறுப்பொன்றினால் கடலில் வளரும் தாவரங்களுடன் சுற்றி வைக்கும், சில நாட்களின் பின்னர் முட்டைகள் பொரித்து பையைக் கிழித்துக் கொண்டு வெளியேறிவிடுகின்றன.

'மக்ரோ பொடஸ்' என்னும் மற்றொரு மீனனது வாயினுள் காற்றை அடித்து (ஊதி) நீர்மட்டத்தின்மீது நீர்க்குமிழிகளை ஏற்படுத்துகிறது. பின்னர் அவற்றின் அடிப்பாகத்தில்முட்டைகளை இடுகின்றது.

மேலும் தண்ணீருக்கடியில் வாழும் தாவரங்களில் முட்டையிட்டுப் பொரிக்கும்மீன்களும். மிதக்கும் தாவரங்களிலும், வெறுமையாகவுள்ள கிளிசல்களிலும் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் மீன்களும் கடலன்னையில் அடைக்கலம் புகுந்திருக்கின்றன.

**ஆற்றைநாடிவரும் அபூர்வ மீனினம்**

அனேகமாக தகரடப்பாக்களில் அடைத்துவரும் மீன்கள் சமன் எனப்படும் ஒருவகை மீனினமாகும் சமன்மீன் மேற்கத்திய நாடுகளில் அநேகமாகக் கிடைப்பதால் இவை தகரங்களிலடைக்கப்படுகின்றன. இவை இனபெருக்கக் காலத்தில் கடலிலிருந்து ஆற்றிற்குள் பல நூறுமைல்கள்சென்றுமணற்பாங்கான இடங்களில் முட்டையிடும். சிலசமயங்களில் ஆறுசெங்குத்தாகப்போனால் உடனே அவைசிலஅடிதூரம் மேலே பாய்ந்து மணற்பாங்கைத் தேடிச்செல்கின்றன. உண்மையில் இவற்றின் முட்டைகள் சூரியவெப்பத்தின் உதவியுடனேயே பொரிக்குந்தன்மையாதலால் இவை மணற்பாங்கான இடத்தைத் தேடிச் செல்லவேண்டியனவாயிருக்கின்றன. மேற்கூறிய மீனனது ஆற்றில் முட்டையிட்டுவிட்டு திரும்பவும் கடலுக்குள் சென்றுவிடுகின்றன பின் முட்டைபொரித்துஒருகுறிக்கப்பட்ட பருவம் வந்ததும்கடலுக்குத் திரும்பிவிடுகின்றன. ஆனால் அடுத்த இனப்பெருக்கப்பருவத்தின்போதும் இந்த மீன்கள் அந்தஇடத்துக்கு இலக்குத்தவறாமல்பலமைல்களைத் தாண்டி வந்துவிடுகின்றன.

(தொடரும்)

கொடிகளையும், கொம்பர்களையும் விலக்கிக் கொண்டு முன்னேறிக் கொண்டிருந்தான் கண்ணன். குயிலின் குரலோசை அவன் உள்ளத்திற்கு உவகையூட்டியது. பாயும் புலியின் பாய்ச்சல் அவன் உள்ளக்கிளர்ச்சிக்கு உரமேற்றியது. ஆடும் மயிலின் அழகு அவன் உள்ளத்திற்கு அமைதியையளித்தது. இயற்கையன்னையின் அற்புதத்தை வியந்த வண்ணம் கால்போன போக்கிலே போய்க்கொண்டிருந்தான். எங்கிருந்தோ வந்த மந்திக் கூட்டமொன்று அவனைத் தாக்குதுற்பட்டது. 'இல்லை, இல்லை தெரியவே தெரியாது. அதைத் தானே அறியத் துடிக்கிறேன்' என்று தனக்குத் தானே கேள்வியையும் பதிலையும் போட்டுக் கொண்டு நடையின் வேகத்தைக் கூட்டினான். அவன் காய்ந்த சருகுகள்மீது நடக்கும்பொழுது ஒருவித ஓசையெழுந்தது. அவ்வோசை கேட்டுப் பற்றைகளில் மறைந்திருந்த முயல்கள் இங்கொன்று அங்கொன்றாய்ச் சிதறியோடின. கண்ணனுக்குச் சிரிப்பு வந்தது. தன்னையறியாமலே சிரித்தும் விட்டான். சிறிது தூரந்தான் சென்றிருப்பான்

# கானகத்துத் தேவதை [3]

தாக்கமுற்பட்டது. அவன் தான் கொண்டுவந்த பிரம்பினாலும் காட்டுக் கொம்பர்களாலும் மந்திக்கூட்டங்களைத் தாக்கி ஒருவாறு தப்பிக்கொண்டானாயினும் சில காயங்கள் அவன் உடம்பில் ஏற்படத்தான் செய்தன. அவன் ஆடை கிழிக்கப்பட்டிருந்தது. காயங்களிலிருந்து இரத்தம் கசிந்துகொண்டிருந்தது. செல்லமாக வளர்க்கப்பட்ட கண்ணன் வாழ்நாளில் இரத்தத்தை கண்டிராத அவனுக்கு இரத்தத்தைக் கண்டதும் ஒருகணம் திகைத்துப் போனான். அவன் கால்கள் செல்ல மறுத்தன. கண்ணன் களைப்பின் மிகுதியால் ஒரு மர நிழலில் வந்தமர்ந்தான். வரும்வழிகளில் பறித்து வந்த கனிகளை உண்டான்.

அவன்அமர்ந்திருந்த மரத்தின் கிளைகளிலுள்ள காய்ந்த கனிகள் 'கிலுகிலு' வென்று சத்தமிட்டுத் தாலாட்ட, சுகந்த மலர்களின் வாசனைகளைத் தழுவி வரும் தென்றல் போதையூட்ட நித்திராதேவி கண்ணனைத் தழுவிக் கொண்டாள். எவ்வளவுநேரம் தூங்கியிருப்பானோ, அவ

— க. கனகலிங்கம் —

மறுகணம் அவன் உள்ளம் "கண்ணா நீ உயிரோடு போராடிக்கொண்டிருக்கும் பொழுது உன்னைக் காப்பாற்றுவதற்குத் தன்னுயிரையும் பொருட்படுத்தாது புத்திரபாசத்தால் கட்டுண்ட உன்தந்தை மாந்திரீகனின் பூச்சாண்டிக்குக் கட்டுப்பட்டு கானகத்தை நோக்கி விரைந்தாரே அவரின் கதி என்னவாச்சு? உனக்குத் தெரியுமா?' என்று கேட்டது. னுக்கே தெரியாது. யானையின் பிளிறல் கேட்டுக் கண்விழித்த கண்ணனுக்கு, தூரத்தே யாரோ பெண்ணொருத்தி 'அம்மாஅம்மா' எங்கு நிற்கிறீர்கள். ஓடிவாருங்கள், ஓடிவாருங்கள்' என்று அழைத்து பலத்த குரலில் அழுவது கேட்டது. குரல்வந்த திசையை நோக்கி ஓடினான் கண்ணன். அவன் கண்ட காட்சி......

(தொடரும்

# மனிதனின் காலடி படாத மர்மத்தீவு

இந்த இருபதாம் நூற்றுண்டிலே, அதிலும் விஞ்ஞானம் தலைவிரித்துத் தாண்டவம் ஆடும் இக்காலத்தில் மனிதன் அண்டவெளி ஆராய்ச்சியின் பயனாக சந்திரத்தரையிலும் காலடி எடுத்து வைத்துவிட்டான். ஆனால் பூமியில் இதுவரையும் மனிதனின் காலடி படாத பிரதேசங்கள் இருப்பது என்றால் அது மிகமிக வியப்புக்குரிய விஷயம் தானே. இத்தகைய இடங்களில் ஒன்றுதான் பனிப்படலம் படர்ந்த தென்துருவத்தின் தென்கோடியில் காணப்படும் யானைத்தீவு, இங்கு அதிகம் நீர்யானைகள் வசிப்பதால்தான் இத்தீவு யானைத்தீவு எனப் பெயரிடப்பட்டது.

புதிர்கள் சூழ்ந்த இந்த யானைத்தீவையும் மனிதன் விட்டுவைக்கப்போவதில்லை. நடப்பு வருடத்தில் பனிப்பிரதேசத்தின் கோடை காலத்தில் பிரிட்டிஷ் ஆராய்ச்சிக்குழுவின் மல்கம் பேர்லியின் தலைமையில் பத்துப்பேர் கொண்ட குழு 'என்டூரன்ஸ்'' என்ற கப்பலில் அத்தீவை ஆராய்ச்சி செய்யத் திட்டமிட்டுள்ளது.

இந்த ஆராய்ச்சியில் தீவின் தரைத்தோற்றம், பாறைகள், உயிரினங்கள், பயிர்வகைகள் ஆராயப்படும். இந்த ஆராய்ச்சிக் காலம் கடும் குளிரும் ஈரலிப்புத் தன்மையும் உள்ள காலமாகும். சிலமணிநேரம் இரவும், நீண்டநேரம் பகற்பொழுதும் இங்கு இருக்கிறதாம்.

— கே. கணபதிப்பிள்ளை

முப்பது ஆண்டுகளுக்கு மேல்
தங்க, வைரநகைகள்
வியாபாரத்தில்
முன்னணியில் நிற்கும்
சிறந்தநாணயமுள்ள ஸ்தாபனம்



ராணி ஆபரண மாளிகை
224, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
நவீன - நாகரிக அமைப்புள்ள
தங்க வைர நகைகளைப் பெறுவதற்கு
இன்றே விஜயஞ் செய்யுங்கள்
மனேஜர்: A. KARAPUTUGALA

# தெரிந்து கொள்ளுங்கள்

சிலந்திப்பூச்சி ஒரு தடவைக்கு தன் எடையைக் காட்டிலும் அதிகமாக ஆகாரம் உட்கொள்கிறது. இப்படி ஒரு நாளைக்கு 27 தடவை ஆகாரம் தின்னுகிறது.

0 0

தும்பி ஒரு மணிக்கு 40 மைல் வேகத்தில் பறந்து செல்லும்.

வெள்ளைநிறப் பூனைக்கு நீலநிறக் கண்கள் இருந்தால் அந்தப் பூனைக்குக் காது கேட்பதில்லையாம்.

எலிகள் இசையை நன்றாக ரசிக்குமாம். இதைச் சிறையிலிருந்த கைதி ஒருவர் நிரூபித்திருக்கிறார். பாரிஸ் சிறையில் உள்ள ஒரு சிறைக்கைதி புல்லாங்குழல் வாசித்தாராம். அவ்வளவுதான் இசையைக் கேட்பதற்கு ஏராளமான எலிகள் கூடிவிட்டனவாம்.

ஒருபவுண்ட் சில்க் எடுக்க 27,600 பட்டுப் பூச்சிகள் தேவைப்படுகின்றன.

0 0

உலகத்தில் வசிக்கும் மனிதர்கள், மிருகங்கள் இவைகளின் எடையைக் காட்டிலும் புழு பூச்சிகளின் எடைதான் அதிகமாம்.

# உள்ளத்தின்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

**மஞ்சள் அழகும் அழகல்ல**
**—நெஞ்சத்து**
**நல்லம்யாமென்னும் நடுவு**
**நிலைமையாற்**
**கல்வியழகே அழகு**

என நாலடியார் செப்புகின்றது. நெஞ்சத்து நல்லம்யாமென்னும் நடுவுநிலைமை அழகிய சித்தத்திலேதான் மலரும்: எனவே நெஞ்சத்து நல்லம்யாமென்னும் நடுவு நிலைமையை எய்தாவிட்டால் கல்வி அழகு அழகல்ல

மாணிக்கவாசகப் பெருந்தகையே தன்னை ஒரு சித்தமழகியாராகப் பாவித்துக் கொண்டுதான், தலைவனும் இறைவனை எண்ணியெண்ணி உருகி பின்வருமாறுபாடினார்

**''சூடுவேன் பூங்கொன்றை**
**சூடிச்சிவன்திரள் தோள்**
**கூடுவேன் கூடி முயங்கி மயங்கி**
**நின்று**
**ஊடுவேன் செவ்வாய்க்**
**குருகுவேன் உள்ளுருகி**
**தேடுவேன்தேடிச் சிவன்கழலே**
**சிந்திப்பேன்**
**வாடுவேன் பேர்த்து மலர்வேன்**
**அனலேந்தி**
**ஆடுவான் சேவடியே பாடுதுங்**
**காண் அம்மானாய்**

((23-12-69ல் திருக்கேதீச்சரத்தில் நடைபெற்ற திருவாசக விழாவில் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணுக்கு பெருமை தரும் உயிர்

இதயத்தில் மலர்ந்து எண்ணங்களின் மணம் உலகெல்லாம் பரந்து வாழ்வு நல்லது, வாழ்வு வாழவேண்டியது, வாழ்க்கை வாழ்வதற்கே என்ற ஒலி தனது மூச்செல்லாம் பரக்க வாழ்கின்ற பெண்ணினம் இன்றும் இருக்கிறார்கள்.

வாழ்வா அல்லது சாவா. வாழ்வு ஒரு நஞ்சுத் தடாகம். வாழ்விலே ஏமாற்றம் தான் பரந்துவிட்டது உலகில் பெண்கள் வாழவே முடியாது. பெண்ணினமே நடைப்பிணம் என்று கூறுகிற பெண்ணினமும் இருக்கிறார்கள்.

இப்படியாக, இருவகை அபிப்பிராயத்தையும் அனுபவமாகக்கொண்ட பெண்கள் சமுதாயத்தி ல வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

அழகான பெரிய யானை. அவ் யானைச் சுற்றி கண்ணற்ற கபோதிகள் ஐவர். யானையைப் பார்த்துவிட வேண்டுமென அவாவுற்ற ஐவர், கண்ணுற் பார்க்க முடியாது. எனவே கரங்களினால் தடவிப் பார்த்தார்கள். கால்களைத் தடவியவன் யானை ஒரு மரம் என்றான். உடலைத் தடவியவன் யானை ஒரு சுவர் என்றான். காதைத் தடவியவன் யானை ஒரு முறம் என்றான் காலைத் தடவியவன் யானை ஒரு உலக்கை என்றான். இப்படியேஒவ்வொருவரும் தாங்கள் தடவிய பாகங்களுக்கு ஏற்பப் பெயரிட்டுக்கொண்டார்கள். தாங்கள் தடவிய பொருட்கள் தங்கள் அனுபவத்திற்கேற்ப பெயர் பெற்றது. அவர்கள் அனுபவம் அது. ஆகவே அவர்கள் கூறியதும் பிழையெனறும் கூறமுடியாது. ஆனால் யானை அதுவல்ல என்றுமட்டும் கூறலாம்.

அதேபோல வாழ்வும்ஒரே கரையில் நின்றுகொண்டு, பெண்கள் வாழ்வின் அனுபவமே உண்மை என்று எண்ணிக்கொண்டு, பரந்துபட்ட வாழ்க்கையைப் பற்றி அபிப்பிராயம் கூறுகிறார்கள். அதிலே பெண்களும் இடம் கொள்ளுகிறார்கள். அந்த அபிப்பிராயம்தான் நான் இக்கட்டுரையிலே ஆரம்பத்தில் குறித்தவை.

நரியின் வாலினாலே கடலாழம் பார்க்கலாமா? ஒரு துண்டு கயிறினாலே 'எவரெஸ்ட்' சிகரம்வரை அளக்கலாமா? அதுபோல சாதாரணமாக ஒரு மனிதன் சராசரி அறுபது ஆண்டு இவ்வுலகிலே வாழ்ந்துகொண்டு அவ்வறுபதுஆண்டிலே தான் கண்ட அனுபவம் உண்மை என்று உரைப்பது பேதமை; அறியாமையாகும். ஆகவே பெரியோர்களின் வாழ்வு அவர்கள் வாழ்ந்த வழி, அப்போது அவர்கள் உரைத்த அனுபவ உண்மைகள் நமக்கும் அறுவிலே சேர்ந்து கொள்ளவேண்டும். எமது நல்ல அனுபவங்களும் எமது அறிவிலே திரட்சிகொள்ள வேண்டும், நாம் அந்த அனுபவத்தராசிலே உண்மைக்கு இழுக்கப்படவேண்டும்.

இதற்கெல்லாம், ஒருவனோ ஒருத்தியோ தன்னைப்பற்றி மட்டும்நினைப்பதுபோதாது. பரந்துபட எண்ணி பொதுமை மிக வாழப்பழக வேண்டும்.


அந்த வாழ்வு அன்பு வாழ்வாக, மகிழ்வு கொண்ட வாழ்வாக அமையும். "நீ எப்போதும் உன்னைப் பற்றைப் பற்றியே நினைக்கிறாய் அதுதான் தவறு. பிறருடைய இன்பத்தில் உன்னை இழந்துவிடு இதுவே தன்னைப்பற்றிய நினைவை மறப்பதற்கும், இன்பத்திற்கும் அடிப்படையாய் அமையும்" என ஒரு பெரியார் கூறிய பேருண்மை இங்கு நினைவு கூரத்தக்கது உலகத்தைப் பற்றிய எமதுஅபிப்பிராயத்திற்கு முன்பு, நாம் உலகத்தை அளவிட முன்பு, எமக்கு வாழத்தெரியவேண்டும். கண்டதே காட்சி

(14-ம் பக்கம் பார்க்க்)




தயாரிப்பு குணம்

# ஜேர்மன் மகளிரைக் கவரும் தமிழர் தங்க நகைகள்



தமிழர்களாகிய நம்மிற் பலர் பிறநாட்டு மோகங் கொண்டு அந்நாட்டவர்களின் ஆடை அணிகளை இன்று அணிய ஆரம்பித்துள்ளார்கள். படித்தவர்கள் நாகரீகம் இதுதான் என நினைத்துக்கொண்டு செய்யும் இச்செயலைப் பாமரர்களும் முன்யோசனையின்றியே பின்பற்றிச் செல்கிறார்கள். நம்மவர் நாகரீகம் இவ்வாறிருக்க பிறநாட்டவர்களிற் பலர் நமது ஆடையணிகளைப்பெரிதும் விரும்புகிறார்கள். விரும்புவதோடு மட்டுமல்லாது தம்நாட்டில் நடக்கும் கண்காட்சிகளிலெல்லாம் அவற்றிற்கு முதலிடம்கொடுத்து அவற்றைப் பேணுகிறார்கள், அநேகர் விரும்பி அணிகிறார்கள்.

சமீபகாலத்தில் ஜெர்மனியில் பெர்ளின் நகரில் நடைபெற்ற தொழிலியல் கண்காட்சியில் தமிழர்களின் நகைகள்யாவும் பாரதத்திலிருந்து தருவிக்கப்பட்டு கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தனவாம். இத்தங்க நகைகள் மட்டுமின்றி இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட கைவேலைப் பொருட்கள் பலவும் துணிகளும் காட்சியில் இடம் பெற்றன.


இந்த ஆடையணிகள் லட்சக்கணக்கான பிறநாட்டுமக்களின் கவனத்தைக் கவர்ந்தன. ஜேர்மன் மகளிர் பலர் இந்நகைகளில் மோகங் கொண்டு அவற்றை விரும்பி வாங்கினர்.

இவ்வாறு உலகின் பலபாகங்களிலுமுள்ள மக்களால் விரும்பப்படும் எமது ஆடையணிகளைநாம் பேணிப் பாதுகாக்காதுவிடுதல் நம் பாரம்பரிய பண்பாட்டுக்கு அழிவு தேடிக்கொள்ளுதலாகும். மினி உடைகளை விரும்பி யணியும் மினி அறிவு நங்கையரும் நகைகள் நாகரீகத்துக் கிழுக்கெனக்கூறி எல்லா நகைகளையும் அகற்றிவிடும் மகளிரும் பிறநாட்டவரைப் பின்பற்றியாவது நம்நாட்டு நாகரீகத்தைப் பேணவேண்டும். அப்பொழுதுதான் நமது பண்பாடும் கலைகலாச்சாரமும் காப்பாற்றப் படும். அதேநேரத்தில் ஜேர்மனி போன்ற நாடுகளில் இடம்பெறும் கலை கலாச்சாரக் கண்காட்சிகள் நம் நாட்டிலும் இடம்பெற்று அக்காட்சிகளில் நம்நாட்டினது பழைய ஆடை, ஆபரணங்கள் இடம்பெறவேண்டும்.

# கவிதை அறிவுப் பாடம் அல்ல உணர்ச்சிப் பாடம்

**இலங்கை சாகித்திய மண்டலத்தினால் நடாத்தப் பட்டதமிழ்க்குழந்தைஇலக் கியம்பற்றிய கருத்தரங்கில் இடம்பெற்ற கருத்துரையின் தொடர் இவ்வாரத்துடன் முடிவுறுகிறது.**

குழந்தை உள்ளம் கழங்கமற்றதாயினும் அது நல்லவற்றைவிடத் தீயவற்றையே விரைந்து பற்றிக்கொள்ளும் பண்புடையது, கல்விகற்பிக்கும் ஆசிரியர்களும்கூட குழந்தைகள் எப்படி எழுதவேண்டும் என்பதைக் காட்டவேண்டுமே தவிர எப்படி எழுதக்கூடாது என்பதைக் காட்டக்கூடாது. என்பது உளவியலாளர் கருத்து.



## எதிர்மறைக் கருத்துக்கள்

எதிர்மறைக் கட்டளைகள் குழந்தைகட்குத் தோன்றாத கெடுதலையும் குற்றத்தையும் அறிமுகம் செய்துவைக்கின்றன. அதனைக் குழந்தைக் கவிஞர்களும் கருத்தில் கொளள வேண்டும். 'திருடாதே பாப்பா திருடாதே' என்பனபோன்ற பாடல்கள் குழந்தைக்கு நீதியைப் போதிப்பனபோன்று தோன்றினும் உண்மையில் அத்தகையதொரு நோக்கம் இத்தகைய பாடல்களால் பூர்த்திசெய்யப்படுவதில்லை. 'கள்ள வழியினிற்

செல்பவரை - எமன்
காலடி பற்றித்
தொடர் வானடா!
உள்ள படியே
நடப்பவர்க்குத்-தெய்வம்
உற்ற துணையாக
நிற்குமடா!'

என்பனபோன்ற பாடல்களே பாப்பா எதைச் செய்யக்கூடாது என்பவற்றை மறைமுகமாக உணர்த்துகிறது. தவறானதை மனதில் வற்புறுத்துவதைவிட சரியானதைத் திரும்பத் திரும்பச் சொல்லுதலே நன்மை பயக்கும்.

## கற்பனைக்கு கவிதை

குழந்தையின் உடல் வளரும்போது உள்ளமும் வளரவேண்டும். உளவளர்ச்சியின்றி உடல் வளர்ச்சி மட்டுமே காணப்படுமாயின் அத்தகையதொரு வளர்ச்சியில் நாம் எத்தகைய நன்மையையும் கண்டுகொள்ள முடியாது. உளவளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பது கற்பனையே என்பது உளவியலாளரிடைப் பொதுவாக நிலவிவரும் கருத்து. 'குழந்தையின் கற்பனா சக்தியை விருத்திசெய்யக்கூடிய சிறந்ததொருமார்க்கம் கவிதை' எனக்கூறுகிறார் ஆபர்குரோம்பி. எனவே கற்பனை வளத்தைப் பெருக்கி அதன் மூலம் உணர்ச்சியைத் தூண்டும் ஒரு பெரும் பணியைக் குழந்தைப் பாடல்களின் மூலம் சாதிக்க முடியும்.

கற்பனையைப் படைப்புக் கற்பனை, இயைபுக்கற்பனை, கருத்து விளக்கக் கற்பனை என்று மூவகையாகப் பாகுபடுத்துகிறார். சி. டி. வின்சஸ்டர் என்பவர். கவிஞன் தான் பல சமயங்களில் கண்டவற்றை ஒன்றுசேர்த்துப் புதிய உருவில் படைப்பது படைப்புக்கற்பனை. இதில் புதியதொரு பண்பு இல்லை. காட்சியில் எத்தகைய மாற்றமும் இல்லை. என்றாலும் குழந்தைகள் இவற்றை விரும்புகின்றன. ஏனெனில் மற்றவர்களைப்போல் நடப்பதிலும், அவர்கள் பாவிக்கும் பொருட்களைப்போல் மாதிரிகள் செய்வதிலும் குழந்தைகட்கு மிகுந்த ஆவலுண்டு. கவிமணியின்

"அப்பாவைப் போல்
பெரியவனாய்
ஆனவுடனே நானுமே
மாட்டைக் கொண்டு
கலப்பை பூட்டி
மண்ணைநன்கு உழுவேனே
நாட்டில் உள்ள
பஞ்சம்போக
நானும் உதவி
செய்வேனே',

போன்ற கவிதைகள் குழந்தைகளின் இத்தகைய கற்பனைஆற்றலை விருத்திசெய்யக்கூடியன.


## ஆசிரியரின் பொறுப்பு

குழந்தைகட்கு எழுதுவது மிகவும் கடினம் என்பது போலவே குழந்தையைக் கவிதை உலகில் புகுத்துவது என்பதும் சிரமமானது. "ஒவ்வொரு குழந்தையும் கவிதையுலகில் புகுவதற்குக் காத்துநிற்கின்றன. அதற்கு வழிகாட்டுவது கல்விகற்பிக்

(14-ம் பக்கம் பார்க்க)

— செல்வி ஆசாரிபா ஜமீல் —

புதுமையான அமைப்பில் ஆக்கப்பட்ட
தங்க, வைர நகைகளுக்குப் புகழ்பெற்றது,
உத்தரவாதமுள்ள நகைகளைத் தருவது,
உங்கள் மனதுக்குப் பிரியமான நகைகளை
வழங்குவது



தெய்வா நகை மாளிகை

தொலைபேசி எண்: 512.

இன்றைக்கே விஜயஞ்செய்யுங்கள்!
உங்கள் இதயங்கவர்ந்த நகைகளைப்
பெற்றுக்கொள்ளுங்கள்!

தெய்வா நகை மாளிகை
173, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதை

5-ம் பக்கத்தொடர்ச்சி)

டிறிபோய்விட்டதே! நீ ஒரு நடைப்பிணம் ஒன்றில் நீ பாஸ்கரைத்திருமணம்செய். இல்லையேல் உயிரை விடு. இதைத்தவிர நீவேறு ஒன்றும் செய்யமுடியாது என்று அவள் உருவங்கள் பல கோணங்களில் நின்று கூறிற்று.

சிந்தித்து சிந்தித்து குழம்பிய சாந்தா ஒரு நீண்ட கடிதம்ஒன்றை தன் இதயம் நிறைந்த அந்த அன்புள்ளத்திற்கு எழுதினாள்.

''அத்தான், என்னை மன்னித்து விடுங்கள். இதுதான் என்னால் செய்யமுடிந்தது என்று அவள் உள்ளத்தின் அடியிலிருந்து பெருமூச்சுடன் வார்த்தைகள் வெளிவந்தன. கடிதத்தை நான்காக மடித்து மார்பகத்துடன் தவழவிட்டாள். பின்பு நஞ்சு அவளை அரவணைத்துக்கொணடது.

வாழ்க்கை வெறுத்தவருக்கு, சதா தோல்வியை கண்டவர்க்கு, சமுதாயத்திலிருந்து விலகி ஒரு புதிய உலகத்தை காண்பதற்கு சுகமான பாதை நஞ்சா?

மாற்றாரால் வஞ்சிக்கப்படும் அபலை பெண்களுக்கு கடைசி முடிவு இதுதானா?

(3)

கண்களில் திரையிட்ட கண்ணீரை வேட்டித் தலைப்பால் துடைத்துவிட்டு பூதவுடல் முன் அமைதியாகச் சென்றுகொண்டிருந்தான். இவ்வளவு நேரமும் இன்ப நிகழ்ச்சியை மனத்திரையில் கண்ட சந்திரன், துன்ப நிகழ்ச்சியையும் காண விரைந்தான்.

நேரம் செல்லச் செல்ல அவள் வருவாள் என்ற நினைப்பு விட்டு, சாந்தாவைக் காண அவள் வீட்டுப் பக்கமாகச் சென்றான். அங்கே! அசைவற்றுக் கிடந்த சாந்தாவின் தலைமாட்டில் குத்து விளக்கு சுடர்விட்டு பிரகாசித்துக்கொண்டிருந்தது. நொடிப்பொழுதில் விஷயத்தைப் புரிந்துகொண்ட சந்திரன் தனது கரங்களால் முகவாயைத் தடவியவாறு 'சாந்தா! என்று கதறினான். அவன் கதறிய கதறலில் வீடே அதிர்ந்தது; சாந்தா! என்னை விட்டுப் போயிட்டியா? சாந்தா...... நீ இல்லாமல் நான் வாழவேண்டுமா என்று கூறியவாறு அவள் பாதங்களைப் பற்றிக் கதறினான்.

சாந்தாவின் தந்தைக்கு அவன் யார் என்று புரிந்துகொள்ள வெகுநேரம் பிடிக்கவில்லை அவர் கோபக்காரராயிருந்தும் சாந்தாவின் இறுதி ஆசையை நிறைவேற்றும்பொருட்டு அமைதியாக ஒரு மூலையில் அழுதுகொண்டிருந்தார்.

அழுது புலம்பிய சந்திரன் அமைதியாக எழுந்து சென்று அவள் மார்பகத்தை மூடியிருந்த சட்டையில் கையை விட்டு கடிதத்தை எடுத்தான்.

காதலியுடன் எவ்வளவோ காலம் பழகியவனுக்குக் கடிதம் வைக்கும் இடமா தெரியாது.

கொதித்துருகிய தார் மேல், கால்பட்டதும் இந்த உலகத்திற்கு வந்தான் சந்திரன், தார்ச்சூடு காலில் பட்டிருக்காவிட்டால் முன்பு படித்த கடிதத்தை மனத்திரையில் திரும்பவும் படித்திருப்பான் போலும்.

சாந்தி! நீ அவசரப்பட்டுட்டாய், நீ வாழவேண்டியவள். நான் உன்னை வாழவைத்திருப்பேன் சாந்தி என்று மனதுக்குள் கூறிக்கொண்டான். ஊர்வலம் அமைதியாகச் சென்றாலும் அவன் மனம் அவளையே சதா சிந்தித்துக்கொண்டிருந்தது.

'சந்திரன்! நீங்கள் மனதுக்குள் நினைப்பதை நான் சுலபமாக அறிவேன், நான் இப்போது மனிதப்பிறவியல்ல சந்திரன், ஓர் ஆத்மா சந்திரன்! நான் கற்பை மேலாக மதிக்கிறவள், அதைப் பாதுகாக்க ஒரு துணை தேவை என்றுதான் உங்களைத் தேர்ந்தெடுத்தேன். சந்தர்ப்பம் சதி செய்துவிட்டது. நான் உங்களுடன் வாழலாம், ஆனால்! நமது பண்பாடு... அதுதான் கடிதத்தில் கூறியுள்ளேன்...மறந்திட்டீங்களா சந்திரன், அதை மறுபடியும் படித்துப் பாடமாக்குங்கள்' என அவள் ஆத்மா கூறுவதுபோல் அவனுக்கு ஒரு பிரளயம் ஏற்பட்டது.

அவள் ஆத்மாவின் ஆசையைப் பூர்த்தி செய்ய மீண்டும் படித்துக்கொண்டே ஊர்வலத்தில் சென்றான்.

சந்திரன்!

சமுதாயத்தின் நல்லொழுக்கத்தில்தான் பெண்மையின் வாழ்வே அமைந்துள்ளது. என் வாழ்க்கையில் நான் கண்ட தீர்க்கமான முடிவு, சந்திரன்! நான் தற்கொலை செய்யப் பயந்தவள். அது உங்களுக்கும் தெரியும் ஆனால்! சந்தர்ப்பம் என்னைத் துணிச்சல்காரியாக்கிவிட்டது. உங்களை அடையவேண்டுமென்றிருந்த என்னை பாஸ்கர் கெடுத்துவிட்டான் சந்திரன் கெடுத்திட்டான், கற்பு அழிந்தபின் நான் வாழவேண்டுமா?

சந்திரன், வானத்தில் எத்தனையோ ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் நட்சத்திரங்கள் இருக்கின்றன. சில சந்தர்ப்பங்களில், ஏதோ ஒருவித உதைப்பினால் நட்சத்திரக் கூட்டத்தில்இருந்து ஒரு நட்சத்திரம் விழுந்து மறைந்து விடுகின்றது; ஒளிவிட்டு பிரகாசிக்கும்போது நட்சத்திரம் என்று கூறுகிறோம்: மறைந்ததும் அது நட்சத்திரமா? இல்லை சந்திரன். அதுபோல் நட்சத்திரங்கள் என்ற கன்னிகளுடன் இருந்த என்னை, பாஸ்கர் என்ற உதைப்பு கன்னிஎன்ற ஸ்தானத்தை இழக்கச் செய்துவிட்டது. திரும்பவும் நட்சந்திரம் நட்சத்திரமாகாததுபோல் நானும் கன்னியாக முடியாது. கன்னி என்ற ஸ்தானத்திற்குப் பொருள் கற்பல்லவா சந்திரன்! நீங்கள் விரும்பி நான் வாழ்ந்தாலும் நமது பண்பாடு எங்கே? ஆகவே என்னை மன்னித்துவிடுங்கள் கடைசியாக ஒரு வேண்டுகோள்! உடலை வேறொருவர் அடைந்தாலும், உள்ளத்தால் நீங்கள்தான் என் கணவர். உங்கள் கையால் எனக்குக் கொள்ளி வையுங்கள், அப்போதுதான் என் ஆத்மா சாந்தியடையும். எனது இறுதி ஆசையை நிறைவேற்றுவீர்களா?

உங்கள்,
சாந்தா.

கடிதத்தை வாசித்து முடிக்க, மயான ஊர்வலத்தில் வந்தவர்களில் ஒருவன் சந்திரன்! கொள்ளியை வை என்று சொல்லவும் சரியாகவிருந்தது.

அப்போதுதான் நான் எப்படி நடந்தேன், எப்படி இவ்வளவு நேரமும் இங்கு வந்து நின்றேன் என்று யோசிக்க அவகாசம் இருந்தது, இதயராணியின் கடந்த காலத்தில் லயித்திருந்தவனுக்கு எப்படி வந்துசேர்ந்தது தெரியும்.

பூதவுடலை மூன்றுதரம் வலம்வந்து, சொள்ளியை ஏற்றினான் சந்திரன். தீசுவாலையாக மாறி தீயை கக்கிக்கொண்டிருந்தது அவற்றைப் பார்த்துக்கொண்டு 'சாந்தி! உனது கடைசி ஆசையை நிறைவேற்றிட்டேன் என்று கூறி குலுங்கிக் குலுங்கி அழுதான்.

தீசுவாலையில் சாந்தாவின் உருவம் தோன்றி சிரிப்பது போல் பிரமை அவனுக்கு ஏற்பட்டது. அந்த உருவத்தின் சிரிப்புடன் அவனும் சேர்ந்து சிரித்தான். அந்தச் சிரிப்பு, சோகச் சிரிப்பல்ல, விரக்தி சிரிப்பல்ல அவள் சிரிப்புக்கு அர்த்தம் கூறுவதென்றால் மனநோய் டாக்டரால்தான் முடியும்.

(யாவும் கற்பனை)

# தெரிந்த மொழி...

[9ம் பக்கத் தொடர்ச்சி[

கேட்க வேட்கை மீதூர்ந்து காசும் பிறவும் கொடுத்துக் கேட்டிருக்கிறான். அவன் மட்டுமல்லஅன்னை பராசக்தியும் செந்தமிழ் முருகனும் தமிழ் ஆராய்ந்திருக்கின்றனர் அன்னை பராசக்தி கொடுத்த சிவஞானப்பாலை உண்ட வேதநெறி தழைத்தோங்க பிறந்த குழந்தை திருஞானசம்பந்தர் 'தோடுடையசெவியன் என்று தமிழிலேயேபாடியது அப்படியானால் அன்னை பராசக்தி கொடுத்த சிவஞானம் தமிழ் வழிப்பட்டதுதானே. மேற்காணும் காரணங்கள் இறைவன் தமிழ்விருப்பினன் என்பதற்குச் சான்றுகளாகும்.

இறைவன் உலகத் தலைவன். எல்லா உயிர்களுக்கும் மேலானவன். அவனுக்கு எலலா மொழிகளும் புரியும். ஆனால் அவன் அருளைப்பெற வேண்டிய உயிர்களோ சிற்றறிவின. உயிர்களுக்குத் தெரிந்தமொழி இறைவனுக்கும் தெரியும். ஆனால் இறைவனுக்குத் தெரிந்த மொழி உயிர்களுக்குத் தெரியாது. உயிர்கள் தமக்கும் இறைவனுக்கும் தெரிந்தமொழியில் வழிபாடு செய்தல் பெரும் பயனைத்தரும். வழிபாடு அல்லது அர்ச்சனை என்பது ஓர் உயிர் இறைவனை நோக்கி அழுகின்றஅழுகையேயாகும் எல்லோர்க்கும் தாய்மொழியில்தான் புலம்பி அழ முடியுமேதவிர பிற மொழியில் அழமுடியாது. தமிழ்த்திருமுறைகள் இறைவனேதனது உரைகளாக உகந்து ஏற்றுக்கொண்டவையாகும். அவைகளால் அர்ச்சனை செய்வது ஆண்டவனுக்கு மிகவும் உகந்ததாகும்.

சம்பந்தர் தமிழும், அப்பர் தமிழும், சுந்தரர் தமிழும், மாணிக்கர் தமிழும் காலப்போக்கில் சம்பிரதாயப் பாடல்களாக மாறிவிட்டனவேதவிர அர்ச்சனை மந்திரங்களாகப் போற்றப்படவில்லை. இறைவனின் இருகண்களாகிய வடமொழிமந்திரமும் தென்தமிழ் மந்திரமும் இரு கண்களாகவே கருதப்படவில்லை.- ஒருகண்ணுக்குப் பார்வை குறைக்கப்பட்டது. அதனால் விளையவேண்டிய நற்பயன் வாடிவதங்கிவிட்டது. இந்நிலையை உணர்ந்த அருள்நெறித்தந்தை தவத்திரு குன்றக்குடிஅடிகளார் அகங்குழைந்த வழிபாட்டிற்கு அவரவர் தாய்மொழியே உகந்தது என வலியுறுத்தினார்கள். அதன் பலனாக தென்தமிழ் நாட்டிலே மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் தமிழ் அர்ச்சனை தொடக்கிவைக்கப்பட்டது. தமிழுக்கு வேண்டிய இடம்கிடைத்தது. இறைவனின் இருகண்களாகிய வடமொழியும் தமிழ்மொழியும் இறைவன் சந்நிதானத்தில் களிநடம் புரிகின்றன. ஈழத்திலும் அந்த நன்னிலை உருவாகவேண்டும் என்னும் நோக்கோடு புங்குடுதீவில் நால்வர்நன்நெறித்திருமடத்தின் முயற்சியால் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் தமிழ் அர்ச்சனை தொடக்கிவைக்கப்பட்டது. இது இனக்காழ்ப்போ மொழிக்காழ்ப்போ அல்ல. இரு மொழிக்கும்தக்கஇடம் தேடும் அருள்நோக்கமாகும். ''ஆரியமும் தமிழும் உடன் சொல்லி காரிகையார்க்கு கருணை செய்தானே.''

—திருமூலர்.

# பண்பு

பொறாமை, போட்டி, ஏமாற்றம், பொய் முதலிய பண்புகள் வளர்ந்தவர்களின் வயழ்வுக்குத் தீமையான பண்புகளாக இருக்கலாம். ஆனால் குழந்தைகளின் மனவளர்ச்சிக்கு இவை பயன்படுகின்றன. ஆடுமாடுகளின் சாணம், சாக்கடைத் தேக்கம்-முதலியவை ஊருக்குத் தீமை பயக்கின்றன. ஆனால் வயலின் செழிப்புக்கு இவை வேண்டியவைகளாக உள்ளன. ஓர் இடத்திற்கு வேண்டாத பொருள், மற்றோர் இடத்திற்கு உரம் ஊட்டுவதாக அமைகிறது ]

[டாக்டர். மு. வ.

# ரொபர்ட் லூயி ஸ்டீவன்சன் [3]



[உலகப் புகழ் பெற்ற பிரயாண நூல்களையும், புனைகதைகளையும் எழுதிய ரொபர்ட் லூயி ஸ்டீவன்சனைப் பற்றிய கதை இது. இதன் முற்பகுதி சென்ற வார 'ஈழநாடு' வாரமலரில் வெளிவந்தது.]

புதிய மருமகளையும் (திருமதி ஸ்டீவன்சன்) புதிய மகனையும் மிக மகிழ்ச்சியோடு வரவேற்றனர் அவரது பெற்றோர்கள். புகழேணியின் விளிம்பில் நின்றுகொண்டிருந்த ஸ்டீவன்சன் புதுத் தெம்புடனும் புதுஆர்வத்துடனும் எழுதத் தொடங்கினார்.

1882-ம் ஆண்டில் ஒரு நாள், ஒருபையனிடம் விளையாட்டாகக் கற்பனைத் தீவொன்றின் படம் வரைந்து அதன்கீழ் 'புதையல் தீவு' என்றும் எழுதினார். அப்புறந்தான் இந்தப்'புதையல்தீவு' படத்திற்கேற்ற கற்பனைக்கதையொன்றையும் எழுதலாமே என்று எண்ணினார் ஸ்டீவன்சன். [illegible] ளவும் நின்று நிலைக்கக் கூடிய சிறப்பான 'புதையல் தீவு' கதை, கப்பற் கொள்ளைக்காரர்களையும், புதையலையும் பற்றிய கதை. இப்படித்தான் பிறந்தது.

ஆனால் ஸ்டீவன்சனுக்குப் பெரும் புகழ்பெற்றுக் கொடுத்தநூல் ''டொக்டர் ஜெக்கில் என்ட் மிஸ்டர் ஹைட்'' என்ற நூல்தான். மூன்றே நாட்களில் இந்தக் கதையின் மூலப்பிரதியை எழுதிமுடித்தார். ஸ்டீவன்சன் [illegible] மூலப்பிரதியை தீயிலிட்டு, மறு பிரதியை இன்னும்மூன்றுநாட்களில் எழுதி முடித்தார்.

உப்பொலு என்ற தீவில், ஸமோவா என்ற இடத்தில் தனக்கென தனியொரு சின்னஞ்சிறு வீடொன்றைக் கட்டிக்கொண்டு வாழ்ந்தார் ஸ்டீவன்சன். அந்தத் தீவிலுள்ள மக்கள் ஸ்டீவன்சனிடம் மிகவும் அன்பாக நடந்துகொண்டனர். ஸ்டீவன்சனிடம் அறிவுரைகள்கேட்க ஒவ்வொருநாளும் யாராவது வந்துகொண்டேயிருப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளுக்கு...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நோயை எதிர்க்கக்கூடிய ஒரு மருந்தை அவர் பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கண்டுபிடித்தார். இதைத்தான் இன்றும் 'பால் குத்துவது' என்று நாம் குறிப்பிடுகிறோம். தடுப்பு மருந்து கொடுக்கப்பட்ட ஒருவரைநோய்இலேசில் அணுகமாட்டாது. இதே முறையைப் பின்பற்றி, போலியோ பரவாமல் தடுப்பதற்காக டாக்டர் சான் என்பவர் ஒரு மருந்தைக் கண்டுபிடித்தார். இதற் மருந்து ஊசிமூலமாக ஏற்றப்படுவது. 1959ம் வருடத்தில் ஊசி இல்லாமல் வாய்மூலமாக புகட்டக்கூடிய ஒரு தடுப்புமருந்தைக் கண்டு பிடித்தார்.

## காவல்மருந்து

இலங்கையில் இப்பொழுது கொடுக்கப்படும் காவல் மருந்து டாக்டர் அல்பேர்ட் சாபின் என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டது. குழந்தைகள் வெறுக்காமல் விரும்பி உட்கொள்ளக்கூடியதாக இது சீனிப்பாணியில் கலந்து கொடுக்கப்படும். இம் மருந்து சாப்பிட்ட ஒரு வாரத்துக்குள் அது நோயாளியை காவல் செய்து விடும். உணவுக் குழாயில் குடியிருக்கும் கிருமிகளை இது உடனடியாக அழித்து விடுகிறது. குழந்தைக்கு ஆபத்தில்லாமல் நோயை உடனே கட்டுப்படுத்தும் சக்தி இதற்கு உண்டு. பெரும்பான்மையான நாடுகளில் இந்த மருந்து கோடிக்கணக்கான குழந்தைகளுக்கு ஊட்டப்படுகிறது.

## மருந்து ஊட்டும் முறை

மூன்றுமாதம் தொடக்கம் எட்டு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு மிகக்கூடிய விரைவில் காவல் மருந்து கொடுப்பதால் நோய் பரவுதலை வெற்றிகரமாகத் தடுக்கலாமென்று 1962-ம்ஆண்டு இலங்கைக்கு வந்திருந்த டாக்டர் சாபின் தெரிவித்தார். ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மூன்ருவது மாதத்தில் ஒருதடவை இம் மருந்தை கொடுக்க வேண்டும். பின் ஐந்தாம் மாதத்தில் இரண்டாவது முறையும் ஒருவருட முடிவில் மூன்ருவது முறையாகவும் காவல் மருந்து கொடுக்கப்பட வேண்டும். ஒரு வருடத்துக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு ஆறு அல்லது எட்டு வாரங்களுக்கு ஒன்ருக இரண்டுமுறை மருந்து கொடுக்கப்பட வேண்டும்.

## பெற்ருேர் கடமை

சிசுக்களையும் குழந்தைகளையுமே போலியோ அதிகம் தாக்குவதால் அவர்களுக்கு கூடிய சீக்கிரத்தில் காவல் மருந்துகளைக் கொடுத்துவிடுவது மிக அவசியம். தாமதமின்றி இதைச்செய்விக்க வேண்டியது பெற்ருேர்களுடையகடமையாகும். காவல் மருந்து இலவசமாக அரசாங்க ஆஸ்பத்திரிகளில் கிடைக்கிறது. ஆகையால் உங்கள் குழந்தைகளின் நன்மையைக் கருதி நேரத்தோடு அவர்களுக்கு காவல் மருந்து கொடுத்து விடுங்கள்.

## லட்சணம்

உலகத்தில் உண்டான எல்லாப் பொருள்களுக்கும் லட்சணம் உண்டு. அந்த லட்சணத்துக்குப் புறம்பான அவலட்சணமும் உண்டு ஒரு காலத்தில் ஒரு தேசத்தில் ஒரு விஷயம் லட்சணமாக இருக்கும்; அதையே வேருெரு காலத்திலும் வேருெரு தேசத்திலும் அவலட்சணமாகக் கருதுவார்கள். காலதேசவர்த்தமானங்களால் லட்சணம் இன்னதுதான் என்ற நியதி வேறுபட்டாலும், லட்சணமாக இருக்கவேண்டுமென்ற எண்ணம் மாத்திரம் வேறுபடுவதே இல்லை; லட்சணமே வேண்டாம் என்று சொல்வது மனித ஜாதிக்கு இயல்பும் அன்று.

[கி. வா, ஜகந்நாதன்]

# தித்திப்பு

## குப்பைமேட்டில் குதூகலம்

மாலை நேரங்களில் சிறுவர்கள் விளையாடி மகிழ்வதற்காக ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசில் ஊர்தோறும் விசாலமான விளையாட்டுத் திடல்களை அமைத்திருக்கிருர்கள். அவற்ருேடு எல்லாவகையான விளையாட்டுக்களையும் விளையாடுவதற்கான வசதிகளையும் செய்து கொடுத்திருக்கிருர்கள். ஆனுல் இந்த விளையாட்டுத்திடல்களை எத்தனைபேர் பயன்படுத்திக் கொள்கிருர்கள் என்று கணக்கெடுத்துப் பார்த்தபோது 24 சத விகிதம் சிறுவர்கள்தான் விளையாட்டுத்திடல்களுக்கு வந்து விளையாடுகிருர்கள் என்று தெரிந்தது. மற்ற சிறுவர்களுக்கெல்லாம் தெருவோரங்களையும் கால்வாய்க் கரைகளையும் கட்டிட வேலைகள் நடைபெறும் இடங்களையும் தான் விளையாடுவதற்குப் பயன்படுத்துகிருர்கள்.

## நீதி

ஒரு குலத்துக்கு ஆபத்து உண்டாகும் போது அதற்குக் காரணமான ஒருவனை ஒதுக்க வேண்டும். ஒரு கிராம நிமித்தமாய் ஒடு குலத்தை நிராகரிக்கலாம். ஒரு தேச நிமிர்த்தமாய் ஒரு கிராமத்தையே நிராகரிக்கலாம். தனக்கு உபத்திரவம் வந்தபொழுது தனக்குள்ள பூமியையே நிராகரிக்கவேண்டும்

– நீதிநூல்

## அருள்

மழைத்தண்ணீர் மேட்டு நிலத்தில் தங்கி நிற்பதில்லை. பள்ளமான இடத்துக்கு ஓடிவந்து விடுகிறது. அதுபோல இறைவன் அருள் தற்பெருமையையும் அகந்தையையும் உடையவர்களின் உள்ளத்தில் தங்கிநிற்பதில்லை. பணிவுள்ளவர்களின் உள்ளத்தையே போய் அடைகிறது.

—ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்சர்.


MF

# 10,000

## அதிகமான

# மசி-பேர்குசன்

## ட்ராக்டர்கள், நாடெங்கிலும் தலைசிறந்த சேவை வசதி கொண்டவை

நாடெங்குமுள்ள இருபத்தி நான்கு விநியோகஸ்தர் மூலம் 10,000 மசி-பேர்குசன் ட்ராக்டர்கள் கவனம் பெற்று, பதில் உறுப்புகள், ரூ. 10 கோடி பெறுமானம் பின் கொண்டு செயலாற்றுகின்றன.

அலவ்வ — விவசாய இயந்திர பொறிவளாளர்

அலுபோமுல்ல — ட்ராக்டர், கார் சேவை ஸ்தாபனம்

அம்பலாந்தொட்டை — 'ரிலையபில்', மோட்டார் ட்ராக்டர் என்ஜினியர்ஸ்

அம்பாரை — பிரவுண் அன் கம்பனி லிமிட்

அனுராதபுரம் — டி. எஸ். குணசேகர அன்சன்ஸ்

பதுளை — சென்றல் மோட்டர்ஸ்

மட்டக்களப்பு — கிழ்மாகாண விவசாய கூட்டுறவுச் சங்கம் லிமிட்


புத்தள — சென்றல் மோட்டர்ஸ்

ஹட்டன் — ஹட்டன் போக்குவரத்து சக ஏஜன்சி கம்பனி லிமிட்

ஹிங்குராக்கொட — த. அக்ரிகொலா

கட்டுகஸ்தோட்டை — பிரவுண் அன் கம்பனி லிமிட்

காரைதீவு — கிழ்-மாகாண விவசாய கூட்டுறவுச் சங்கம் லிமிட



கொச்சிக்கடை — மோட்டார் சக ட்ராக்டர் என்ஜினியர்ஸ் லிமிட்

குருநாகலை — பிரவுண் அன் கம்பனி லிமிட்

மாத்தறை — த. ரிலையபில் மோட்டார் தொழிற்சாலை

முல்லைத்திவு — ஸ்டான்டர்ட் என்ஜினியரிங் வேர்க்ஸ்

நிக்கரவட்டிய — "ஃபாமர்ஸ்"

பாலாவி — தி அக்ரிகோலா

பரந்தன் — பிரவுண் அன் கம்பனி லிமிட்

திருக்கதிஸ்வரம் — திருக்கதீஸ்வரம் என்டபிரைசஸ்

திச்சமஹாரகம — ரிலையபில் மோட்டர் அன் ட்ராக்டர் என்ஜினியர்ஸ்

திருகோணமலை — குயிக் பிளவ்ஸ் (ஆர் அன்பீ) லிமிட்

வவுனியா — பிரவுண் அன் கம்பனி லிமிட்

வெரகன்தொட்ட — மெடரட்ட டீலர்ஸ்

BROWNS GROUP BG

**பிரவுன் அன் கொம்பெனி லிமிட்டேட்**

விவசாயப் பிரிவு,

தேவநம்பியதீசன் வீதி, கொழும்பு 10.

டெலிபோன் [illegible]

GRANT 422 1059


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதை அறிவு ...

[11ம் பக்கத் தொடர்ச்சி]
கும் ஆசிரியரின் பொறுப்பி லுள்ளது'' என்று அலெக்ஸாண்டர் ஹடோ கூறுகின்ருர். ஓசைநயமும், பொருட் தெளிவுமுள்ள பாடல்களைக் குழந்தைகள் இயல்பாகவே விரும்புகின்றன. அத்தகைய பாடல்களை அவர்களுக்கு அளித்து விட்டால் அப்பாடல்கள் தாமாகவே அவர்களின் நினைவில் பதிந்துவிடும்.

குழந்தைகள் பாடல்களை வாய்விட்டுப் படிக்கும் பழக்கத்தை வளர்ப்பதும் கவிதைகளிலே பற்றைஏற்படுத்துவதற்கான இன்னொருவழியாகும். ஆசிரியன் ஒருபாடலைக் குழந்தைக்கு அறிமுகஞ் செய்துவைக்கையில் அதனைப் பாட்டு வடிவிலேயே அறிமுகப்படுத்த வேண்டும். வாய்விட்டுப் பாடுவதென்பது குழந்தைகட்கு மிகவும் விருப்பமான செயல். கணித வாய்ப்பாட்டுக்களைக் கூடக் குழந்தைகள் இசையோடு படிப்பதை நாம் சாதாரணமாகக் காண்கிருேம். ஓசை நயத்திலே இன்பம் காணும் குழந்தை வாய்விட்டுப் பாடுவதனல்தான் அதனை அனுபவிக்க முடியும். அப்பொழுதுதான் ஒருபாட்டு குழந்தையிடையே எழுப்பும் உணர்ச்சிகளுக்கும் எண்ணங்களுக்கும் வடிவு கொடுக்க முடியும். உணர்ச்சிகள் வடிவுபெறும்போது தான் குழந்தைகள் உண்மையான மனநிறைவைப் பெறுகின்றன.

### உணர்ச்சி பாடம்

கவிதை அறிவுக்குரிய பாடம் அல்ல; அது ஓர் உணர்ச்சிப் பாடம். அது வெறும் செய்திகளை மட்டும் தருவதில்லை: அவற்றை உணர்ச்சிகலந்து தருகின்றது: கவிஞன் பாத்திரங்களின்மீது ஏற்றிக் கூறும் உணர்ச்சிகளைக் குழந்தைகளிடம் எழச்செய்ய வேண்டும். அதன்மூலம் கவிதைச் சுவையில் அவர்கள் ஈடுபடத் தூண்ட வேண்டும். சில வேளைகளில் சிறுவர்களின் பாநலம் வியக்கும் ஆற்றல் வளர்ந்தோருடைய திலும் மிகக்கூடுதலாக இருக்கும், அத்தகைய ஆற்றலை வளர்த்துக் கவிதையின்பால் குழந்தைகட்குப் பற்றை உண்டாக்குவது ஆசிரியரின் பொறுப்பு.

படிக்கும் அளவையொட்டித்தான் கவிதைகளின் அளவும் அதன் உயிரோட்டமும் இருக்கமுடியும். இன்று குழந்தைகள் குழந்தைப் பாடலை விரும்பிக் கற்ருல் நாளை அவர்கள் பெரியகாவியங்களை ஆவலுடன் படிப்பர். இன்று குழந்தைப் பாடல்கள் அதிகம் விற்பனையானல் வருங்காலத்தில் பெரியோர்களின் பாடல்கள் அதிகம் விற்பனையாகும். இன்று குழந்தைப் பாடல்களைப் படித்து அழகுணர்ச்சியைப் பெறும் குழந்தைகள் வருங்காலத்தில் சமுதாயத்தில் காண்படும் அருவருக்கத்தக்கநிகழ்ச்சிகளை வெறுத்தொதுக்குவர். குழந்தைப் பாடல்கள் எங்கே வளர்ச்சியுற்றுள்ளதோ அங்கே வளமானதொரு வருங்காலச் சமுதாயம் உருவாகக் காத்திருக்கிறது எனக் கூறுவது தவருகாது. (முற்றும் ——————)

## சிறந்தவை

கம்பநாடன் காப்பியமாகிய அரிய பூங்காவில் அனைத்துவகையான பூக்களையும் காணலாம். அவற்றுள், மணத்தால் சிறந்தவை சில; நிறத்தால் சிறந்தவை சில; இனிய தேனுடைமையாற் சிறந்தவை சில; மருந்தாகி நிற்பதாற் சிறந்தவை சில; பெரிய வடிவு பெற்றமையாற் சிறந்தவை சில; சிறிய வடிவு பெற்றும் சிறந்தவை சிலவாம்.

[அ. ச. ஞானசம்பந்தன்]

## பெண்ணுக்கு...

[11ம் பக்கத் தொடர்ச்சி]
கொண்டதே கோலம் என வாழ்வதே அற்பநேரசுகங் கருதி பலகால நன்மை கருதாது ஒரு திசை பார்க்கும் கோணல் புத்தி நல்வாழ்வு சமைக்காது. தன்னையே தான் ஏமாற்றிக்கொண்டு நன்மையே வாவென்று கூறுகிற மடமை போன்ற கொடுமை உலகில் எங்குமே இல்லை.

ஆகவே 'புதியதோர் உலகு செய்வோம். கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்' என்று கூறுவது மட்டுமல்ல, செயலாக்கும் வன்மையால் வாழ்வு சமைக்கப்படவேண்டும்.

நல்லவளாக வாழ்பவள் நல்லவளாகவே இருப்பாள். அமைதியான போக்குள்ளவள் அமைதியான வாழ்வையே காண்பாள். நல்ல உள்ளம் கொண்டவள் வாழ்வு ஒருபோதும் சீரழிவது கிடையாது. இப்படியெல்லாம் நான் கூறவில்லை. சாதாரணமாக இந்த உலகத்தை நம் கண்ணுல் பார்த்தால் உலகத்தை உணர்ந்து கொள்ளமுடியும். ஆகவே ஏன் நாம் நல்லவர்களாக வாழக்கூடாது. மற்றவர்களுக்கு தீமை செய்யும் எண்ணமே நம்மைவிட்டுப்போக வேண்டும்.

ஒருபெண் மதிப்போடு நடந்தால் ஆண் அவளை நெருங்கப் பயப்படுவான். இந்த உலகத்திலே எவருமே குற்றவாளிகள் அல்ல. சதுரங்க ஆட்டத்திலே வெட்டி வீழ்த்தப்படும் காய்கள் போல மனிதர்களும் சமுதாயத்திலே அமைக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே ஒவ்வொரு பெண்ணுக்கும் திடமனம் தான் இருக்க வேண்டும். அதை அடைய ஒரே வழி ஒழுக்கமே. அது விழுப்பம் தருவது. அதுவே உயிரினும் மேலானது. அந்த உயிரைப் பெண்ணினம் தனது கற்புநெறியினுல்தான் காப்பாற்றமுடியும். அதுவே வாழ்வுககு வெற்றிதரும்.

இருபுறமும் பயங்கரமான பள்ளத்தாக்குகள் கொண்ட செங்குத்தான சிகரம்; அதிலே நிதானமாக அடி எடுத்து வைக்கவேண்டும். அதில ஒருமுறை தவறி விழுந்தால்; ஆண்கள் என்னவோ தப்பித்துக்கொள்கிருர்கள். பெண்களால் முடிவதே இல்லை.

எனவே அமைதியுடன், திருப்தியுடன் உள்ளம் மகிழ பெண்வாழவேண்டில் அவள் கற்புநெறி வாழவேண்டும். அப்பெண்ணின் அபிப்பிராயம் ''வாழ்வு மகிழ்ச்சியானது; வாழ்வு வளம் தருகிறது'' என்றுதான் அமையும். எல்லாப்பெண்களும் இவ் அபிப்பிராயம் கொள்ள பெருமைதரும் உயிர் அவர்களிடமே இருக்கிறது. சாயாத-நிலைதவருத உருக்கு உள்ளம் மிக அவசியம். அதுவே கற்பு என்ற உயிரைக் காப்பாற்றும் அதனுல் பெண்ணின் பெருமை நாட்டை மட்டுமல்ல உலகையே காக்கும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘நந்தியும் நடனமாடியிருப்பார்’

‘யாழ்ப்பாணம் தட்சணாமூர்த்தியின் அற்புதமான தவில்வாத்தியத்தைக்கேட்டு தேவலோகத்தில் தாளவாத்திய தெய்வமாகிய நந்திகேஸ்வரரே ஆனந்த லாஹிரியில் துள்ளிக் குதித்திருப்பார்’.

இந்த வசனத்தை வாசித்ததும் நானும் துள்ளிக் குதித்தேன். இந்தியாவில் வெளிவரும் பிரபலமான ஓர் ஆங்கிலத் தினசரியில் நாகசுரவித்வானாகிய ஷேக் சின்னமௌலானா சாகிபுக்கு தட்சணாமூர்த்தி தவில வாசித்தார். இது ரேடியோவில் அஞ்சல் செய்யப்படாதது, நமது துரதிஷ்டம். இது பற்றி ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ஸில் வெளியான ஆங்கில விமர்சனம் முழுவதையுமே மொழிபெயர்த்துத் தரவேண்டியதில்லை. மிகச் சிறந்த சங்கீத வித்வான்களையே குறைகூறும் இந்த விமர்சகர் தட்சணாமூர்த்தி யைப்பற்றி ஒரு பாதகமான வார்த்தை கூறவில்லை.

## யாழ்ப்பாணத் தவில் வித்துவானுக்கு பாராட்டு

இப்படி ஒரு சங்கீத விமர்சகர் எழுதியதைப் பார்த்த எந்த ஈழநாட்டான் துள்ளிக் குதிக்கமாட்டான்? ‘நிபுணத்துவத்தின் சிகரம்’ என்ற தலைப்பிட்டு இந்த விமர்சகர் நமது அளவெட்டி தட்சணாமூர்த்தியின் தவிலிசையை வானளாவப் புகழ்ந்துதள்ளியிருக்கிறார்.

சென்ற டிசம்பர் 29-ம் திகதி சென்னை தியாகராய நகரிலுள்ள ஸ்ரீ கிருஷ்ண கான சபாவில் ‘இன்று இந்தியாவில் தலைமை தாங்கும் நாகசுரவித்துவான்கள் எல்லாம் பேரானந்தமும் பெருமிதமும் உண்டாகின்றது. சேய்நாடாகிய ஈழத்திலிருந்து தாய்நாடாகிய பாரதத்தில் சென்று புகழீட்டிய பெருமக்கள்பலர்இருந்தனர் அவர்களுடைய ஜாபிதாவில் தட்சணாமூர்த்தியும் சேர்ந்துவிட்டார். சென்ற வருடம் அளவெட்டி பத்மநாதனும் ஈழத்து இசை விலாசத்தைச் சென்னையில் நிலைநாட்டினார்.

‘நாகசுரத்துக்கு பக்கவாத்தியமான தவிலுக்கு இவ்வளவு முக்கியத்துவம் எதற்காக என்றஎண்ணத்துடன் தான் இந்தக் கச்சேரிக்கு தயக்கத்துடன் சென்றேன்

### வி. என். பி.

தவில் வாத்தியம் பெரிய சத்தம் எழுப்புவது. அதில் சுருதி, நாதம் இல்லை. மிருதங்கத்திலுள்ள நுட்பமான இனிமை தவிலுக்குக்கிடையாது. இப்படியான எண்ணங்கள் எல்லாவற்றையும் தட்சணாமூர்த்தியின் வர்ணிக்கமுடியாத அபூர்வ மேதாவிலாசம்தூக்கிஎறிந்து விட்டது. ஒரு மணி நேரமாக நடைபெற்ற தவில் தனி ஆவர்த்தனத்தில் தட்சணாமூர்த்தியுடன் ஹரித்வார மங்கலம் பழனிவேலுவும் இன்னொருவரும் வாசித்தார்கள். தனி ஆவர்த்தனம் நடக்கும்போது சாதாரணமாக காப்பிகுடிக்கப்போய் விடும் சபையோர்கள்கூட அன்றுமெய்மறந்துரஸித்துக் கொண்டிருந்தார்கள். கண்ட நடையை ஒரு விளாசுவிளாசிவிட்டு திஸ்ரம், மிஸ்ரம், சங்கீர்ணம் ஆகிய நடைகளிலும் அவற்றை ஒன்றொன்று பின்னியும் மிகவேகமாகவும் லாவகமாகவும் தட்சணாமூர்த்தி வாசித்தபோது, மனிதனுடைய கை விரல்கள் இவ்விதம் அனந்தகோடி லயங்களைப் பொழியும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. அவருடைய தவில் ஒரோர் சமயம் கொஞ்சிக்குலவியும் ஒரோர் சமயம் சிம்ம கர்ஜனை புரிந்தும் கேட்போரை பரவசப்படுத்தியது,

இப்படியெல்லாம் அந்த விமர்சகர் எழுதியிருக்கிறார்.

தட்சணாமூர்த்தி யாழ்ப்பாணத்திலேயே பிறந்து வளர்ந்து உற்பத்தியான ஒரு கலைஞன் என்பதை நினைக்கும்போது நமக்கெல்லாம் பேரானந்தமும் ...

தவில் வாத்தியத்தைப் பற்றி சிலர் நல்ல அபிப்பிராயம் வைத்திருப்பதில்லை. அது என்னவோ காதைத் துளைக்கும் சத்தம் என்று அதைத் தள்ளி விடுவார்கள். முற்காலத்தில் பல இடங்களுக்கும் கேட்கும்படியாக உரத்த தொனியுடன் கையாளப்பட்டது என்பது உண்மைதான். ஆயினும் நல்ல கைபட்டால் தவிலும் நயந்து பேசும். காலஞ்சென்ற நீடாமங்கலம் மீனாட்சிசுந்தரம்பிள்ளையும், தட்சணாமூர்த்தி முதலில் சிட்டை பெற்றுக்கொண்ட வண்ணார்பண்ணை காமாட்சி சுந்தரமும் தவில் அடிப்பதில்லை. வாசிப்பார்கள். அவர்களுடைய வாத்தியம் எட்டாத கொம்புத்தேன்போல இனிக்கும்,

பெரும்பான்மையான தவில் வாத்தியக்காரரர் எவ்வளவுக்கு உரக்க சத்தம் வைக்கிறாரோ அவ்வளவுக்கு ஜனங்கள் ரசிப்பார்கள் என்று நினைப்பது தவறாகும். மைக்கும் ஒலிபெருக்கியும் வந்துள்ள இந்தக் காலத்தில் தவிலை மிகவும் அடக்கமாக வாசித்து அதிலிருந்து பெறக்கூடிய இனிய நாதங்களை வெளிப்படுத்துவதுதான் கெட்டித்தனம்.

இந்த இரகசியத்தை தட்சணாமூர்த்தி நன்றாகக் கண்டு பிடித்து விட்டார்.

### பச்சோந்திக் கட்டிடம்

நினைத்தவுடன் நிறம் மாறுகிற பச்சோந்திபோல, விரும்பியபடியெல்லாம் ஒரு கட்டிடத்தின் உட்பகுதிகளை மாற்றிக்கொள்ளக்கூடிய வகையில் ஜெர்மன் நிபுணர்கள் கட்டியுள்ளனர். ஜெர்மனியில் உல்ம்நகரில் பிரசித்தி பெற்ற மதாலயம் இருக்கிறது. விஞ்ஞானி ஐன்ஸ்டீன் இங்குதான் பிறந்தார்: தற்போது ஆறு கோண வடிவ ‘தியேட்டர்’ ஒன்று இங்கு கட்டப்பட்டிருக்கிறது. இதில் ஆறு கட்டிடங்கள் இருக்கின்றன. இந்த விசித்திரக் கட்டிடத்தைக் கட்ட 450 லட்சம் ரூபாய் செலவாயிற்று. கட்டிடத்தின் உட்பகுதிகளை. தேவைக்கு ஏற்றாற்போல. அவ்வப்போது பலவிதமாக மாற்றிக்கொள்ள வசதி செய்திருப்பது இதன் சிறப்பாகும்.

### இப்படி ஒரு விளம்பரம்

“தீபாவளி, கிறிஸ்மஸ், புதுவருட, தைப்பொங்கல் வாழ்த்துக்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்”.

### வரிவிளம்பரம்

**தேவை**

J. M. T. ரதி பீடி தயாரிப்பதற்கு அனுபவமுள்ள பீடி தயாரிப்பாளர்கள் தேவை. சலார் 1000 பீடிகளுக்கு ரூபா 5/-. 15-1-70க்கு முன் முகாமையாளர், யாழ்ப்பாணம் மலையாளம் புகையிலை ஐக்கிய வியாபாரச் சங்கம், யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். 1756

**விற்பனைக்கு**

A. 40 கார் நம்பர் C. N. 4887. புதிய கடைச்சல் பட்டடைகள் (Lathes) நீளம் 6', 8', 10'. பழைய கடைச்சல் பட்டடைகள் நீளம் 4', 8'. விற்பனைக்கு உண்டு. நெல்லியடி இன்டஸ்றியல் வேக்ஸ், நெல்லியடி. 1726

**கல்வி**

விஞ்ஞானம், ஆங்கிலம், கணித வகுப்புகள் 9-1-70 அன்று ஆரம்பமாகின்றது. காலதாமதமின்றி உடனே சேரவும். ‘அறிவகம்’ நாச்சிமார்கோவிலடி, யாழ்ப்பாணம். 1753

1970 - ஜீ. சீ. ஈ. (சாதாரணம்) பரீட்சைக்கான ஆங்கில வகுப்புக்கள் தை மாதம் 15-ந் திகதியிலிருந்து ஆரம்பமாகின்றன. தொடர்புகொள்க: 44, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1754


**ஸ்ரீ காலிங்கன்**
இனுவில்
தினசரி 4-45, 7, 10-00
WAIT UNTIL DARK

**REGAL** JAFFNA
Daily 4-45, 7 & 9-45, p.m
Poya, Pre-Poya 4 shows
Franco Nero, Elise Montes
IN
TEXAS ADDIOS
(adults only)

**மனோகரா**
யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.- ஜெயலலிதா
நடித்த
**அடிமைப்பெண்**
பல்கனி ஆசனங்கள் பதிவுசெய்ய விரும்புவோர் மனேச்சருடன் தொடர்புகொள்ளவும்
தொலைபேசி இல: 485

வல்வெட்டித்துறை
**றஞ்சனா தியேட்டர்**
தினசரி: 6-30, 9-30
எம் ஜி. ஆர்.- ஜெயலலிதா
நடித்த
**ஆயிரத்தில் ஒருவன்**
4-30க்கு மட்டும்
SPY IN THE GREEN HAT

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
சோ
நடித்த
**காவல் காரன்**

**வெஸ்லி சினிமா**
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
ஜெய்சங்கர்-எல். விஜயலட்சுமி
நடித்த
**வல்லவன் ஒருவன்**

**ராணி** (யாழ்ப்பாணம்)
[தினசரி 4 காட்சிகள்]
எம். ஜி. ஆர் - ஜெயலலிதா
அசோகன் - சோ - சந்திரபாபு
நடித்த
**அடிமைப்பெண்**


5வது வெற்றி வாரம்
**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.
பிரிபோயா, போயா 4 காட்சிகள்
கிங்ஸ்லி [கொழும்பு]
பிளாஸா [வெள்ளவத்தை]
ஏ. பி. நாகராஜனின் தயாரிப்பில் உருவான
மற்றுமோர் வெற்றிச்சித்திரம்



★ சிவாஜி ★ பத்மினி
★ ஜெமினி ★ சாவித்திரி
★ முத்துராமன் ★ கே. ஆர். விஜயா
★ நாகேஷ் ★ மனோரமா
நடித்த
**திருவருட் செல்வர்**
[ஈஸ்ட்மென் கலர்]

**யாழ். வின்ஸர் திரையில்**
தினசரி 4 காட்சிகள்
★ சிவாஜிகணேசன் ★ சரோஜாதேவி
★ நாகேஷ் ★ விஜயலலிதா ★ மனோரமா
மற்றும்பலர் நடித்த
**அஞ்சல்பெட்டி 520**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## மகாத்மா மணிமொழிகள்

அன்பின் ஆற்றல் அளவிறந்தது; அனைத்தும் ஆற்ற வல்லது.


0 0 0

மனிதவர்க்கத்தினுடைய முன்னேற்றத்திற்கு வழி ஒவ்வொருவனும் தன்னலத்தை அதிகயாகக் கருதாமல் பிறருக்குத் தன்னுடைய பொருளை மனப்பூர்வமாக உதவவேண்டும் என்பது அர்த்தம்.

0 0 0

ஓர் ஆசிரியர் பொய்யனுக கோழையாக இருந்து கொண்டு; மாணவர்களை உண்மைபேச வைக்கவோ. வீரனுக்கவோ முடியாது. புலனடக்கம் என்பதே தெரியாத ஓர் ஆசிரியர் புலனடக்கத்தை மாணவர்களுக்குப் போதித்துவிடவும் முடியாது.

— மகாத்மா காந்தி



### சீனசார்பு தீண்டாமை ஒழிப்பு இயக்கம்

# தேர்தலை பகிஷ்கரிக்குமா; இல்லையா?

யாழ்ப்பாணம், புதன்

எதிர்வரும் பொதுத்தேர்தலை பகிஷ்கரிப்பதா? இல்லையா? என்பது பற்றி இறுதி முடிவு செய்வதற்காக சீனசார்பு கம்யூனிஸ்ட்கட்சியின் ஆதிக்கத்திலுள்ள தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம், விரைவில் கூட விருப்பதாக இயக்கப் பிரமுகர் ஒருவர் நமதுநிருபரிடம் தெரிவித்தார்.

தேர்தல் முறையினுல் சிறுபான்மைத் தமிழரின் பிரச்னை தீராதென்றும், தீண்டாமை ஒழியாதென்றும் அவர் மேலும் தெரிவித்தார். ஒவ்வொரு தொகுதியிலும், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினர் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றி இயக்கம் விரைவில் முடிவு செய்யுமென்றும் அவர்தெரிவித்தார்.

வடபகுதியில் சிறுபான்மைத் தமிழர்கள் அபேட்சகர்களாக நிறுத்தப்படும் பட்சத்தில், அவர்களை ஆதரிப்பதா? இல்லையா? என்பது பற்றியும், இயக்கமே முடிவு செய்யவேண்டுமென்றும், தீண்டாமை ஒழிப்பு போராட்டங்களில் பங்குபற்றிய சிறுபான்மைத் தமிழர்கள் அபேட்சகர்களாக நிறுத்தப்பட்டால் அவர்களுக்கு இயக்கத்தின் ஆதரவு கிடைக்கலாமென்றும் அவர் தெரிவித்தார்.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் அடுத்த தேர்தலில் எந்தத் தொகுதியிலும் அபேட்சகர்களை போட்டிக்கு நிறுத்தாதென்றும் அவர் கூறினுர்.

தேர்தலைப் பகிஷ்கரிப்பதன்மூலம் இரு தமிழ் கட்சிகளுக்கும், சிறுபான்மைத் தமிழரின் நிலையை உணர்த்தக்கூடிய வாய்ப்பு ஏற்படுமென்றும் இதன்மூலம் இப்பிரச்னையைத் தீர்க்க அக்கட்சிகள் முன்வருமென்றும் அவர் தெரிவித்தார்.

ஈழநாடு

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மார்கழி மாதம் 23-ந் திகதி [7-1-70]

## அதிகரிக்கும் குற்றங்கள்

'தர்மத்துவீபம்' என்று கூறப்படும் நம் இலங்கையிலே கொலைகளும் கோர விபத்துக்களும் அதிகரித்து வருகின்றன. முந்திய ஆண்டைவிட, சென்ற 1969ம் வருடத்தில் இவை இரண்டும் 'முன்னேறி'யுள்ளதைப் பார்க்கையில், நாம் இந்த ஆபத்துக்களுக்குத் தப்பி இன்னும் உயிர் வாழ்வதுதான் வியப்புக்குரியது.

1968ம் வருடத்திலே 723 கொலைகள் நடந்திக்குகையில் அதுவேஅதிகமென்றும் அதைக்குறைக்கச்சமயத் தலைவர்களும் சமூக ஊழியர்களும் அரசாங்கமும் எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டுமென்று கூறப்பட்டது. ஆனுல், குற்றங்களும் கோரவிபத்துக்களும் குறைவதற்குப்பதில் சென்ற ஆண்டு அதிகரித்திருக்கின்றன. கொலையுண்டவர்களின் எண்ணிக்கை 726 ஆகவும் உயர்ந்துள்ளது பயங்கர விபத்துக்களால் முந்திய வருடத்திலே 542 பேர் மாண்டிருக்க சென்ற ஆண்டில் விபத்துக்குப் பலியானவர்கள் 612 பேராம்!

நவநாகரீகம் அதிகரிக்க அதிகரிக்க கொலைகளும், விபத்துக்களும் உயர்ந்துகொண்டே போகும் போலும்.

துரதிருஷ்டமான இந்தநிலையை மாற்றி மக்கள் இங்கு பயமின்றி நிம்மதியாக வாழ என்ன செய்ய வேண்டும்? சமய உபதேசங்களாலோ தண்டனைகளைக் கடுமையாக்குவதாலோ நிலைமை மேம்படுமென்று தோன்றவில்லை.

குற்றவாளிகளைக் கண்டுபிடித்து அவர்களைத் தண்டிப்பதால் மட்டும் கொலைக்குற்றங்கள் குறைந்துவிடுமென்று நம்புவதற்கில்லை.

ஒவ்வொரு கொலை முதலிய குற்றங்களின் காரணங்களையும் ஆராய்ந்தறிந்து, அக்காரணங்களை நீக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டால் தான் இவை ஓரளவு குறைய வழிபிறக்கலாம்.


**விரைந்து வந்து வாங்கி ஏமாற்றத்தைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்!**

உத்தரவாதமான உயர்ந்த ரகமான இறக்குமதி செய்யப்பட்ட தகடுகளால் விசேஷமாகத் தயாரிக்கப்பட்ட ''யாழ் பிரண்ட்'' பொங்கல் பானைகள் அலுமினியத்திலும், பித்தளையிலும், செம்பிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**எங்கும் கிடைக்கும்**

தயாரிப்பாளர்கள்:—

யாழ் மெட்டல் இன்டஸ்றீஸ்,
250-254, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல: 7049 1907


## வாரசாரம்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தும், 1965-ம் ஆண்டில் இன்றைய திரு. டட்லியின் தலைமையில் தேசீய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின்னர் தமிழ் மொழிச்சட்டத்துக்கு விசேஷ விதிகள் கொண்டு வரப்பட்டதை எதிர்த்து எதிர்க்கட்சிக்கூட்டணியினர் வேலைநிறுத்தம், ஆர்ப்பாட்டங்கள் நடத்தியதும் மாவட்டசபை மசோதாவை எதிர்த்து நாடு முழுவதிலும் வகுப்புவாதப்பிரசாரம்செய்ததும் மறந்துவிடக்கூடிய சம்பவங்களல்ல.

லங்கா சமசமாஜக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் தங்கள்நிலையைக் கைவிட்டு வகுப்புவாதக் கட்சிகளுடன் சேர்ந்துகொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதையும் மறந்துவிடமுடியாது.

எனவே இலங்கையின் இன்றைய அரசியல் அமைப்பில் எந்தக்கட்சியும் ஆட்சிபீடத்திற்கான போராட்டத்தில் சுலபமாக வெற்றியீட்டுவதற்கு வகுப்புவாதத்தையே நம்பியிருக்கிறது. ஒரு கட்சியோ, கூட்டணியோ வகுப்புவாதத்தைக் கைவிட்டால் மற்ருென்று வகுப்புவாதத்துக்குக் கைகொடுக்கும். இல்லையேல் புதிதாக ஒருகட்சியாவது தோன்றும்.

அரசியல் தலைவர்களும், அரசியல்கட்சிகளும், சமய, சமூகத்தலைவர்களும், கல்விமான்களும் ஒன்றுசேர்ந்து வகுப்புவாதத்துக்கு முழுக்குப்போடத் தீர்மானித்தால் ஒருவேளை வெற்றி கிட்டலாம் இது இப்போதுநடைபெறக்கூடிய சம்பவமா?



செல்வி ந. பிராணேஸ்வரி இன்று மாலை 5 30 மணி தொடக்கம் 6.30மணிவரை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இசைவிருந்தளிக்கிறுர்.

'யோகதாசன்' என்ற முத்திரை பதித்த நூற்றுக்கு அதிகமான பக்திப் பாடல்களை இயற்றி, இசை அமைத்தவரும் இலங்கை வானொலிக்கலைஞரான ஊரிக்காடு திரு. அ. நடராசாவின் ஒரே ஒரு புத்திரியான இவர் தந்தையின் மேற்பார்வையில் இசைகற்று, சிறுவயதிலேயே கொழும்புத்துறை யோக சுவாமி அவர்களினுல் ஆசிர்வதிக்கப்பட்டு பாராட்டப் பெற்றவர்.

மருதனுமடம் இசைக் கல்லூரியில் பேராசிரியர் உயர்திரு. எம். ஏ கல்யாணகிருஷ்ணபாகவதரிடம் மேலும் தன் இசைக்கலையை விருத்தி செய்து, அதே கல்லூரியில் ''சங்கீதஇரத்தினம்'' என்ற விருதையும் பெற்றவர்.

சிறந்த ஞானம், சுருதி, லயம் அமையப்பெற்ற இப்பாடகி, நிரவல் செய்வதில் தனக்கென ஒரு பாணியை அமைத்து, ரசிகர்களைப் பிரமிக்கச் செய்பவர்ஐம்பதுக்கு அதிகமான முழுநேர இசைக் கச்சேரிகளில் பங்குபற்றி மங்காத புகழ் படைத்தவர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜனவரி மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


### தேவை

பெயின்ற் வியாபாரி ஒருவருக்குக் கீழ் உதவியாக இருந்து வியாபாரம் பழகுவதற்கு 15 வயதிலிருந்து 20 வயதுக்குட்பட்ட ஒருவர் தேவை. கூடிய விவேகம் உள்ளவருக்கு கூடிய வேதனம் கொடுப்போம். சூரியப்பிரகாஸ் ஸ்ரோர்ஸ், வெலிங்டன் தியேட்டர் சந்தி, யாழ்ப்பாணம். 1760

### விற்பனைக்கு

வீட்டோடு கூடிய 3 பரப்புக்காணி கொழும்புத்துறை மேற்கில் பஸ் பாதையில் கொழும்புத்துறை மகாவித்தியாலயத்துக்கருகாமையில் தெருவோரததில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க. கே. இரத்தினசபாபதி, காரியாலயம், கொழும்பு, C. M. T. S. 1761


### மரண அறிவித்தல்

**கதிரவேலு முருகேசு**

நல்லூர் தெற்குவாசியும், கற்பகப் பொற் பிள்ளையார் கோவிலுக்கு தொண்டாற்றியவரும் புகையிரத இலாகாவில் கடமையாற்றி இளைப்பாறியவருமான, கதிரவேலு முருகேசு ('கேற்றர்' முருகேசு) தனது 104 வயதில் காலமானுர். இவர் அன்னம்மாவின் தந்தையாரும், இராசாவின் மாமனுரும், இராசசுந்தரம், செல்வமாணிக்கராசா, யோகநாதன், ஆகியோரின் பேரனுமாவார். ஈமக்கிரியைகள் அரியாலை சித்துப்பாத்தி மயானத்தில் நடைபெறும். குருசெற் ஒழுங்கை, 18/1. நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணம். 1631

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org